Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 19 செவ்வாய்க்கிழமை (02-03-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:97



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 2004 ஆம் ஆண்டுத் தேர்தல் அறிக்கையை நேற்று வெளியிட்டு வைத்து மாவை சேனாதிராஜா உரையாற்றுகிறார். சி.வி.கே.சிவஞானம், ஜீ.ஜீ.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் அருகில் உள்ளனர். *(படம்:அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## நியாயமான அரசியல் தீர்வு இன்றேல் பிரிந்து செல்வது தவிர்க்கப்பட முடியாது!

### தமிழரின் ஆணையைக் கோரி கூட்டமைப்பு தேர்தல் பிரகடனம்

கொழும்பு,மார்ச்2

★ தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்று, அவர்களின் போராட்ட இலட்சியத்துக்கு நேர்மையாக, உறுதியாக முழு ஒத்துழைப்பு வழங்குவோம்.

★ தமிழ் மக்களின் சுதந்திரமான, கௌரவமான, நீதியான வாழ்விற்காக புலிகளின் தலைமையின் கீழ் தமிழ் மக்களை ஒரே அணியாக, ஒரே தேசமாக அணிதிரட்டி உறுதியாக உழைப்போம்.

★ தமிழ்த் தேசிய இனத்தின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு நியாயபூர்வமான அரசியல் தீர்வு மறுக்கப்பட்டு, இராணுவ ஆக்கிரமிப்பும் அரச அடக்குமுறையும் மீண்டும் தொடருமானால் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழர் தாயகத்தில் தமிழரின் இறைமையும் சுதந்திரமும் நிலை நிறுத்தப்படுவது தவிர்க்கப்பட முடியாது என்பதை வலியுறுத்துகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 2004 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் இந்த விடயங்கள் அடங்கியுள்ளன. தேர்தல் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பொதுச்செயலாளர் மாவை. சேனாதிராசா, தமிழீழ விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் பிரசன்ன இந்திரகுமார், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜீஜீ.பொன்னம்பலம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பொதுச்செயலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க ஒரே

(16ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பிரதேசத்தில் தேர்தல் நடத்த முடியாது!

## ஜனாதிபதி திட்டவட்டமாகத் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்2

**"அரச கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் தேர்தலை நடத்தமுடியாது. எந்த ஆணையாளரும் அதற்கு அனுமதிக்கவில்லை. அப்படித் தேர்தல் நடந்தால் அது நீதியும் நியாயமானதுமாக அமையாது" இப்படித் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**



இந்தியாவின் 'த ஹிந்து' பத்திரிகையின் கொழும்புச் செய்தியாளர் வி.எஸ்சம்பந்தனுக்கு வழங்கிய விசேட செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் அதில் தெரிவித்துள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

புலிகள் இரண்டு வருடங்களாக யுத்தநிறுத்தத்தைக்கடைப்பிடித்து வருகின்றார்கள். ஜனநாயக அமைப்புக்களுடன் திறந்த சந்தைக்கட்டமைப்புக்குள் ஒரு சமூகவாழ்க்கையை நோக்கி அவர்கள் திரும்பிக்கொண்டிருக்கின்றார்கள். இவை குறிப்பிடத்தக்க நல்ல ஜனநாயக அம்சங்கள்.

முக்கியமாக முஸ்லிம் தரப்பு உட்பட எல்லாத்தரப்பினரையும் - பிரதானமான சில கட்சிகளிலிருந்தாவது ஒவ்வொருவரை - பேச்சுக்களில் சேர்த்துக்கொள்வதற்குப் புலிகளை இணங்க வைக்க முயற்சிப்போம்.

இங்கு கட்சிகள் என்று நான் கூறுவது அரசியல்கட்சிகளை அல்ல - முக்கிய தரப்புக்களை, இதற்குப்புலிகள் இணங்காவிட்டால், இந்தத் தரப்பினர்களோடு நாம் தனியாகப் பேசுவோம், புலிகளுடனான பேச்சில் என்ன நடக்கின்றது என்று அவர்களுக்குத் தெரிவிப்பதன் மூலம் அவர்களையும் கலந்துரையாடல்களுக்குள் கொண்டு

(16ஆம் பக்கம் பார்க்க)

### கடந்த சனிக்கிழமை இரவு சூடப்பட்டு

## காயமடைந்த ஐ.தே.க. தமிழ் வேட்பாளர் வைத்தியசாலையில் நேற்றுக் கொலை!

காத்தான்குடி,மார்ச்2

பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கியதேசியக் கட்சியில் போட்டியிடும் வேட்பாளரான சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை (வயது 63) நேற்று விடியற்காலை 5.45 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார். கடந்த சனிக்கிழமை இரவு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இவர் காயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

காலை 5.45 மணியளவில் நோயாளர்பார்வை நேரத்தினுள் வேட்பாளர் சிகிச்சை பெற்று வந்த 11ஆம் இலக்க வார்ட்டுக்குள் நுழைந்த துப்பாக்கி நபர் ஒருவர் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து விட்டு தப்பியோடினார் என்று வார்ட் பொறுப்பாளரான தாதி தெரிவித்தார்.

காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த வேட்பாளருக்குப் பாதுகாப்பு வழங்கப்படாதது குறித்து பலரும் கேள்வி எழுப்புகின்றனர். பொலீஸ் விசாரணை தொடர்கிறது.

(க)

## பொலீஸ்மா அதிபருக்குத் தரப்பட்ட பதவி நீடிப்பை எதிர்த்து வழக்கு

கொழும்பு,மார்ச்2

பொலீஸ்மா அதிபர் இந்திரா டி.சில்வாவின் பதவி நீடிப்பை ரத்துச் செய்யக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் சி.ரி.ஜான்ஸ் உட்பட தொழில்சார் துறையைச் சேர்ந்த 11 பேர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்துக்கு அமைய ஜனாதிபதி அரசமைப்புச்சபை கவுன்ஸிலின் சிபார்சுக்கு ஏற்பவே இந்த நீடிப்பை வழங்கமுடியும் ஆனால், அப்படிச் செயயாமல் ஜனாதிபதி தன்பாட்டில் பொலீஸ்மா அதிபருக்கு வழங்கியுள்ள பதவி நீடிப்பு சட்டவிரோதமான செயல என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதியுடன் பொலீஸ்மா அதிபர் இந்திரா டி.சில்வாவின் பதவிக்காலம் முடிவுற்றது. அவருக்கு மேலும் ஆறு மாதங்கள் ஜனாதிபதி பதவி நீடிப்பு வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-9)

### நியாயமாக நடந்துகொள்ளாத

## ஊடகங்களைக் கட்டுப்படுத்த தேர்தல் ஆணையாளர் ஆலோசனை

கொழும்பு,மார்ச்2

பொதுத்தேர்தல் தொடர்பான விடயங்களில் நியாயமாக நடந்து கொள்ளாத ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமிப்பது குறித்து தேர்தல் ஆணையாளர் ஆலோசித்து வருகிறார் என்று கூறப்படுகிறது.

இதேவேளை, தேர்தல் சமயத்தில் செய்திகளை வெளியிடுவதில் பின்பற்றப்பட வேண்டியநடைமுறைகள் குறித்து விளக்கமளிப்பதற்காகத் தேர்தல் ஆணையாளர் அரச மற்றும் தனியார் ஊடகங்களின் தலைவர்களை விரைவில் சந்திக்கவுள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்களிப்பு:

## தேர்தல், படை அதிகாரிகளின் அறிக்கைகளை ஆராய்ந்த பின்னரே ஆணையாளர் இறுதி முடிவு

கொழும்பு,மார்ச்2

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்களை ஏற்றபடுத்தமுடியுமா என்பதை ஆராய்ந்து அறிவிக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க வடக்கு-கிழக்கு தெரிவத்தாட்சி அதிகாரிகளிடமும் பொலீஸ், இராணுவத் தலைவர்களிடமும் கேட்டிருக்கின்றார் எனத்தெரிகின்றது.

அந்த அறிக்கைகள் ஓரிரு தினங்களில் கிடைக்குமென எதிர்பார்ப்பதாகவும் அவை கிடைத்த பின்னர் வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பது தொடர்பாக இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்படுமெனவும் தேர்தல் திணைக்கள சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் கூறியிருக்கிறார்.

புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் இருந்து அரசகட்டுப்பாட்டுப் பகுதிக்கு நுழையும் இடங்களில் கொத்தணிவாக்குச் சாவடிகளை அமைத்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமக்கள் வாக்களிக்க வசதி செய்வது குறித்து ஆரம்பத்தில் உத்தேசிக்கப்பட்டது.

ஆயினும், தமது கட்டுப்பாட்டு பிரதேசங்களிலும் வாக்களிப்புச்சாவடி

(16ஆம் பக்கம் பார்க்க)

## வாக்குச் சீட்டுகள் அச்சிடும்பணி தொடர்கிறது

கொழும்பு,மார்ச்2

அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கான தேர்தல் வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் பணி நேற்று நிறைவடைந்தது என்று அரச அச்சகர் நெவில்நாணயக்கார தெரிவித்துள்ளார். திருகோணமலை, கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் பிற்பகலில் ஆரம்பிக்கப்படும் என்றும் இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் சகல வாக்குச்சீட்டுகளும் அச்சிடப்பட்டு விடும் என்றும் அவர் கூறினார்.

(க)

## கண்காணிப்புக் குழுவினருடன் புலிகள் வவுனியாவில் சந்திப்பு

வவுனியா,மார்ச்2

விடுதலைப் புலிகளும் இலங்கைப போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் நேற்றுத் திங்கட்கிழமை வவுனியாவில் சந்தித்துப் பேசினர். நேற்று முற்பகல் 9 மணியளவில் வவுனியா விளக்கு வைத்த குளம்பகுதியில் இச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தரப்பில் தமிழீழக்காவல்துறைச் சிறப்புப் படையணித் தளபதி லலித், மனலாறுப் பகுதிப்பொறுப்பாளர் குட்டி, புளியங்குளம் பகுதிப் பொறுப்பாளர் மாறன், 'சிலோன் தியட்டர்' பகுதிப் பொறுப்பாளர் வசந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தரப்பில் தலைமைஅலுவலகப் பாதுகாப்பு நடவடிக்கை அதிகாரி போக்ஸ்ஸன், வவுனியா மாவட்ட அலுவலகத் தலைவர் ஜோகான் ஒஸ்காகன்,தலைமை அலுவலக அரசியல் ஆலோசகர் டனி அனென், வவுனியா மாவட்டப் பிரதிநிதி ஜலஃமாற்றா ஆகியோர் பங்கேற்றனர். இச்சந்திப்பின் போது முக்கிய பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-9)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

புலிகளுடன் சமாதானம் எவ்வாறு முன்னெடுக்கப்படும்?

# புதிய கூட்டமைப்பிடம் ஐ.தே.முன்னணி தொடுக்கும் மூன்று கேள்விக்கணைகள்!

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, விடுதலைப் புலிகளுடன் எவ்வாறு சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லப்போகிறது என்பதைத் தெளிவுபடுத்த முடியுமா? என்று ஐக்கிய தேசிய முன்னணி கேள்வி எழுப்புகிறது. புதிய கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்தால் நாட்டில் ஓர் அமைதியற்ற சூழ்நிலை மீண்டும் ஏற்படுவது உறுதி எனவும் அம்முன்னணி வலியுறுத்திக் கூறுகிறது.

இக்கேள்வியை எழுப்பியிருக்கும் ஐ.தே.முன்னணியின் பேச்சாளரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், புதிய கூட்டமைப்பிடம் மூன்று கேள்விகளையும் தொடுத்திருக்கிறார்.

நேற்றுக்காலை கொழும்பு 'கேம்பிரிஜ் டெரசில்' நடைபெற்ற ஐ.தே. முன்னணியின் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இக்கேள்விக்கணைகளைத் தொடுத்தார்.

இம்மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் செனரத் கப்பு கொட்டுவ, முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் அமைச்சர் பீரிஸ் எழுப்பிய கேள்விகள் வருமாறு:-

★ அரசும் - புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை ரத்துச் செய்யப்பட்டு புதிய உடன்படிக்கை செய்யவேண்டும் என்று ஜே.வி.பி. கூறுகிறது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்கிறது ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, எந்தக் காரணம் கொண்டும் அரசுடன் செய்துகொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையில் ஓர் எழுத்தைத்தானும் மாற்ற முடியாது என்கின்றனர் தமிழீழ விடுதலைப் புலிகள். இவ்விடயத்தில் சுதந்திரக் கூட்டமைப்பின் உண்மையான நிலைப்பாடு என்ன?

★ புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத தொடர்பான வரைவுகளில் 30 ஓட்டைகளைக் காட்டி 14 பக்க அறிக்கை விட்டார் கதிர்காமர். ஜே.வி.பியோ இடைக்காலக் கட்டமைப்பே அவசியம் இல்லை என்கின்றது. எதை அடிப்படையாக வைத்துச் சமாதானப் பேச்சை இவர்கள் ஆரம்பிக்கப் போகின்றனர்?

★ அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் ஒஸ்லோவில் நடைபெற்ற உச்சி மாநாட்டிலேயே புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு நிறைவேற்று அதிகாரம்கொண்ட சமஷ்டி முறையை ஏற்றுக்கொண்டனர். ஆனால், புதிய கூட்டமைப்பினர் இதனை ஏற்க முடியாது என்கின்றனர். இப்படியான நிலையில் இவர்கள் புலிகளை மீண்டும் சீண்டிவிடப் பார்க்கின்றனரா?

இவர்களுடைய பேச்சுக்களே நாட்டில் மீண்டும் ஒரு பதற்ற நிலை ஏற்படும் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சமாதானத்திற்கான அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளது. இவர்கள் ஆட்சிக்கு வந்தால் நாட்டில் மீண்டும் ஓர் அமைதியற்ற குழப்ப நிலை ஏற்படும் என்பது உறுதி.

இரட்டை நோக்கம் கொண்ட ஜே.வி.பியினரும், சுதந்திரக் கட்சியினரும் வெளியிட்டு வரும் மாறுபட்ட கருத்துக்கள் நாட்டு மக்கள் மத்தியில் இப்பொழுதே பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தி உள்ளன என்றும் பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

# திக்கம் வடிசாலைப் பணியாளர் நேற்றுமுதல் வேலைநிறுத்தம்

கரவெட்டி,மார்ச்2


வடமராட்சி திக்கம் வடிசாலைப் பணியாளர்கள், தமக்கான கொடுப்பனவுகளை வழங்கக்கோரி நேற்று வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். தமது கோரிக்கைகளுக்கு ஆக்கபூர்வமான பதில் கிடைக்கும்வரை போராட்டம் தொடரும் என்று பணியாளர்கள் தெரிவித்தனர்.

ஒருவருட காலத்துக்குரிய மேலதிகக் கொடுப்பனவுகளும், கடந்த மாதச் சம்பளமும் தமக்கு வழங்கப்படவில்லை என்றும் - அவற்றை வழங்கும்படி கோரியும் சுமார் 50 பணியாளர்கள் நேற்றுத் திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வடிசாலைக்கென பிற இடங்களிலிருந்து 'பவுசர்'களில் எடுத்துவரப்பட்ட கள் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக இறக்கப்படவில்லை.

பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர் என்று யாழ்.பனை அபிவிருத்திச் சபைக்கு வடிசாலை முகாமையாளர் உடனடியாகத் தெரிவித்தார். இதனையடுத்து மேற்படி சபையைச் சேர்ந்த ஆறுபேர் அடங்கிய குழு பிற்பகல் 3 மணியளவில் திக்கம் வடிசாலைக்குச் சென்றது. அந்தக் குழுவினர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட பணியாளர்களுடன் பேச்சு நடத்தினர். பணியாளரின் கோரிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள குழுவினர் 10 நாள்கள் கால அவகாசம் தரும்படி கேட்டனர். ஆனால், பணியாளர்கள் கால அவகாசம் தரமறுத்து தமது கோரிக்கை நிறைவேறும்வரை போராட்டம் தொடரும் என்று தெரிவித்தனர். இதனால் குழுவினர் திரும்பிச்சென்றனர்.

பிற்பகல் 5 மணிவரை வடிசாலை வளாகத்தில் நின்று வேலைநிறுத்தத்தில் பணியாளர்கள் ஈடுபட்டனர். (ஒ-70)



மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளையின் நடமாடும் சேவை ஆரம்பவிழா இணுவிலில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் சி.இளம்பிறைநாதன் நாடாவை வெட்டிக் கிளையைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்:- அலுவலகப் படப்பிடிப்பாளர்)

ஐக்கிய தேசிய முன்னணி அரசு காலத்தில்

# நாட்டின் பொருளாதார நிலை சீரானது: ஆனால், மக்கள் நன்மையடையவில்லை

## சுதந்திரக் கூட்டமைப்பின் உப செயலாளர் வீரவன்ச கூறுகிறார்

கொழும்பு.மார்ச்2

சமுர்த்திக் கொடுப்பனவைக் குறைத்து, உரமானியத்தை நீக்கி, காப்புறுதிக் கூட்டுத்தாபனம் போன்ற இலாபம் பெறும் அரச நிறுவனங்களைத் தனியார் மயமாக்கியே ஐக்கிய தேசிய முன்னணி அரசு நாட்டின் பொருளாதாரத்தைச் சீராக்கியது. இதனால், மக்கள் எதுவித நன்மையும் பெறவில்லை. பணமிருந்தும் பசியுடனிருந்து பணம் சேமிப்பது போலத்தான் ஐ.தே.முன்னணியின் பொருளாதார அபிவிருத்தி என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உப செயலாளர்களில் ஒருவரான ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

சுதந்திரக் கூட்டமைப்பின் வாராந்த செய்தியாளர் மாநாடு, கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்றுக் காலை நடைபெற்றது. கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம்.சுஹைர் ஆகியோரும் இச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

விமல் வீரவன்ச தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது:-

கடந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் கால இறுதிக் கட்டத்தில் யாழ். குடாநாட்டைப் புலிகள் கைப்பற்ற முனைந்தபோது அவசரமாக வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்கள் கொள்வனவு செய்ய வேண்டியேற்பட்டது. இதனால் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றது. நாட்டில் சில வருடங்களுக்கு ஒரு தடவை இவ்வாறு பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவது வழமையே.

ஐ.தே.முன்னணி ஆட்சிக்கு வந்ததும் மக்களுக்கு வழங்க வேண்டிய நன்மைகளைக் குறைத்து பொருளாதாரத்தைச் சீராக்கியது. இதனால், பாதிக்கப்பட்டவர்கள் மக்களே.

இன்று வாழ்க்கைச் செலவு பன்மடங்காக உயர்ந்துள்ளது. ஐ.தே.க. முன்னணி அரசின் ஊழல், மோசடி காரணமாகவும் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது.

- இவ்வாறு அவர் கூறினார்.(க)

# சம்மாந்துறை மு.கா. தேர்தல் கூட்டம் அரை மணி நேரம் இருளில் மூழ்கியது!

## வானை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள்

கல்முனை,மார்ச்2

கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் சுமார் அரை மணி நேரம் இருளில் மூழ்கியிருந்தது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப்ஹக்கீம் உட்பட, திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் மேடையில் அமர்ந்திருந்த போது மின்சாரம் தடைப்பட்டது.

கூட்டத்தில் குழுமியிருந்த அனைவரும், இது சதியாக இருக்கலாமென அங்கலாய்த்தனர். மின்சாரம் தடைப்பட்டிருந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி இனம் தெரியாதவர்கள் தூரத்தில் நின்றுகொண்டு, சில நிமிட நேரம் துபபாக்கி வேட்டுக்களை வானை நோக்கித் தீர்த்தனர். இருந்த போதும் மகக்கள் கூட்டத்தை விட்டு நகரவில்லை; ஆடாமல் அசையாமல் அந்த இடத்திலேயே நின்றனர். (க)

## சிகை அலங்கரிப்பாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்2

யாழ்.மாவட்ட சிகை அலங்காரிப்பாளர் சங்கங்களின் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பல முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது. (ஒ-4)

# நடமாடும் வங்கிச் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்2

மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளை இணுவிலில் நடத்தும் நடமாடும் வங்கிச் சேவை ஆரம்ப விழா நேற்றுக் காலை 9.30 மணிக்கு இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள கட்டடத்தில் நடைபெற்றது. மக்கள் வங்கியின் வடவலய விசேட நிறைவேற்று அதிகாரி சி.இளம்பிறைநாதன் நடமாடும் வங்கிச் சேவை காரியாலயத்தை நாடா வெட்டித்திறந்து வைத்தார். இவ்விழாவிற்கு ஆசியுரைகளை சிவஸ்ரீ மகாதேவக் குருக்கள், அருட்திரு பெஞ்சமின் அடிகள் ஆகியோரும் வாழ்த்துரையை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு. திருமுருகனும் வழங்கினர். (ஒ-8)




நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்திய வருடாந்த இசைவிழாவின் நிறைவு நாள் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றபோது, இசை விழாவையொட்டி நடத்தப்பட்ட இசைப் போட்டியில் மத்திய பிரிவில் முதல் இடம்பெற்ற ஜெ.வைஷ்ணவி பாட்டுக்கச்சேரி நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். (படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# புத்தளத்தில் மட்டக்களப்பு வாலிபர் துப்பாக்கியுடன் பொலீஸாரால் கைது!

## வேறு இரு சந்தேக நபர்களும் கைதாகினர்

புத்தளம்,மார்ச்2

சட்டவிரோதமாகத் துப்பாக்கியை வைத்திருந்தார் எனக் கூறப்படும் மட்டக்களப்பு நகரைச் சேர்ந்த வாலிபரொருவர் புத்தளம் நகரில் வைத்து வீதித் தடைப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் புத்தளத்தில் இடம்பெற்றது.

புத்தளத்தைச் சேர்ந்த நபரொருவரைத் தாக்கி விட்டு தப்பியோடும் சமயத்தில் வீதித் தடைப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்ட போது, அவர் சட்டவிரோதமாகத் துப்பாக்கி வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, பாலயடிச் சோலையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சதீஸ்குமார் (21 வயது) என்ற மேற்படி சந்தேக நபர் கொடுத்த தகவலின் பேரில வேறு இரு சந்தேக நபர்களான புத்தளம், புழுதி வயல் என்னும் இடத்தைச் சேர்ந்த மரிக்கார் முஹம்மது நிஸ்த்தார் (21), புத்தளத்தைச் சேர்ந்த எம்.ஏ.எம்.சைபுல்லா (28) ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர்.

மேலும் இந்தச் சந்தேக நபரிகளிடமிருந்து துப்பாக்கி ரவைகள், ஒரு கையடக்கத் தொலைபேசி, ஒரு மோட்டார் சைக்கிள் என்பனவற்றையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது குறித்து பூரண விசாரணைகளை மேற்கொள்வதற்காக சந்தேக நபர்கள் புத்தளம் பொலீஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று புத்தளம் பொலீஸார் தெரிவித்தனர். (க)

வடமேல் மாகாண சபைத் தேர்தல்

# குருநாகல் மாவட்டத்தில் ஒரு கட்சி நேற்று வேட்பு மனுக்கள் தாக்கல்

வடமேல்மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்வது நேற்று ஆரம்பமானது. மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரி ஒருவர் தகவல் தருகையில், தேசிய அபிவிருத்தி முன்னணி குருநாகல் மாவட்டத்தில் நேற்று வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளது எனக் கூறினார்.

புத்தளம் மாவட்டத்தில் இதுவரை எந்த ஓர் அரசியல் கட்சியோ அல்லது சுயேச்சைக்குழுவோ வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேட்பு மனுக்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நண்பகல் 12மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# விசர்நாய்க் கடிக்கு இலக்கானவர் மூன்றுமாதங்களின் பின்னர் மரணம்!

## தடுப்பூசி ஏற்றத் தவறியதே காரணமாம்

யாழ்ப்பாணம்,மார்ச்2

மூன்று மாதங்களுக்கு முன்னர் விசர்நாய்க் கடிக்கு இலக்கான ஒருவர் நேற்று மரணமடைந்தார்.

நவாலி வடக்கைச் சேர்ந்த காந்தி சந்திரன் (வயது 47) என்பவரே விசர்நாய்க்கடி நோயால் பீடிக்கப்பட்டு உயிரிழந்தவராவார்.

இவருக்கு சுமார் 3 மாதங்களுக்கு முன்னர் விசர்நாய் ஒன்று கடித்தது என்றும் -

அப்போது ஏற்பு வலிக்கான தடுப்பூசியை மட்டும் ஏற்றிக்கொண்ட அவர் விசர்நாய்க் கடிக்கான தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளத் தவறிவிட்டார் என்றும் கூறப்படுகிறது. ஏற்பு வலிக்கான தடுப்பூசியை அவர் விசர்நாய்க் கடிக்கான தடுப்பூசி என்று நம்பியதாலேயே முக்கியமான தடுப்பூசியை அவர் ஏற்றிக்கொள்ளத் தவறிவிட்டார் என்று கருதப்படுகிறது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவருக்குத் திடீரென்று காய்ச்சலும் மூச்சுத் திணறலும் ஏற்பட்டது. அதனால் அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பயனளிக்காமல் நேற்று மரணமடைந்தார். சடலம் மரணவிசாரணையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-6-15)

# சர்வதேச அமைதிப் படை ஹெய்ட்டிக்கு விரைகிறது

போர்ட்-ஒவ்-பிரின்ஸ்,மார்ச்2

கரீபியன் தீவான ஹெய்ட்டியின் அதிபர் ஜேன் பேட்ரண்ட் அரிஸ்டிட் நாட்டைவிட்டுத் தப்பியோடிவிட்டதை அடுத்து அங்கு அமைதியை ஏற்படுத்தும் முகமாக அமெரிக்கா தலைமையிலான சர்வதேச அமைதி காக்கும் படை அங்கு விரைந்துள்ளது.

அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கியதை அடுத்து ஜனாதிபதி ஜேன் பேர்ரண்ட் அரிஸ்டிட் நேற்றுமுன்தினம் இரவு நாட்டைவிட்டு ஓட்டம்பிடித்தார்.


வன்முறையைக் கைவிடும் படியும் ஹெய்ட்டியில் அமைதியை ஏற்படுதத ஒத்துழைப்பு நல்குமாறும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் ஹெய்ட்டி மக்களை நேற்றுக் கேட்டுக்கொண்டார்.

ஹெய்ட்டியின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதியான அரிஸ்டிட் கடந்த சில வாரங்களாகக் கிளர்ச்சிப் படைகளின் தாக்குதல்களை எதிர்நோக்கி வந்தார்.

கிளர்ச்சிப் படைகள் பல முக்கிய நகரங்களைக் கைப்பற்றியிருந்தன. தலைநகர் போர்ட்-ஒவ்-பிரின்ஸ் எந்நேரமும் கிளர்ச்சியாளர்களிடம் வீழ்ச்சியடையும் நிலைமை உருவாகியதை அடுத்து அரிஸ்டிட் தமது பதவியைத் துறந்து நாட்டைவிட்டு ஜெட் விமானம் ஒன்றில் வெளியேறினார்.

அவரது விமானம் முதலில் டொமினிக்கன் குடியரசில் தரையிறங்கியது. அங்கிருந்து அவர் மத்திய ஆபிரிக்க குடியரசுக்குச் சென்று அங்கேயே அரசியல் தஞ்சம் கோருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர் அங்கு சென்றடைந்துள்ளார்.

அரிஸ்டிட்டுக்கு அரசியல் தஞ்சம் வழங்கும்படி அமெரிக்கா விடுத்த வேண்டுகோளை அடுத்து மத்திய அமெரிக்க நாடுகளான பனாமா, கோஸ்ராறிகா ஆகியவை அரசியல் தஞ்சம் அளிக்க முன்வந்தன. அந்த நாடுகளைவிட பிரெஞ்ச்கயானா, மொரோக்கோ, தைவான், தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளும் அரிஸ்டிட்டுக்கு அரசியல் தஞ்சம் வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கின்றன.



ஹெய்ட்டி தலைநகரை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ள கிளர்ச்சியாளர்கள் பொதுமக்களுடன் உரையாடுவதையும் வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு கொள்ளையிடப்படுவதையும் படங்களில் காணலாம்.

எனினும் மத்திய ஆபிரிக்கக் குடியரசுக்குச் சென்றடைந்துள்ள அவர், அங்கேயே தொடர்ந்து தங்குவாரா என்பது இன்னும் உறுதிசெய்யப்படவில்லை. அதுவும் ஒரு தற்காலிக ஏற்பாடாகவே இருக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹெய்ட்டிக்கு அமைதிப்படையை அனுப்பும் தீர்மானம் ஐ.நா பாதுகாப்புச் சபையில் ஞாயிறு இரவு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

முதல் கட்டமாக அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் படைகள் அங்கு அனுப்பிவைக்கப்பட்டன.

ஹெய்ட்டியின் நிலைமை மோசமடைந்து அரிஸ்ட்டிட் நாட்டைவிட்டு வெளியேறியதை அடுத்து பாதுகாப்புச்சபை அவசரமாகக்கூடி மேற்கண்ட முடிவை எடுத்தது.

பாதுகாப்புச் சபைத் தீர்மானம் நிறைவேற்றப்பட முன்னரே அமெரிக்கக் கடற்படையின் ஒரு சிறிய தொகுதி தலைநகர் போர்ட்-ஒவ்-பிரின்ஸில் தரையிறங்கி தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. அதன் பின்னரே கனேடிய பிரெஞ்சுப் படைகள் ஹெய்ட்டியில் தரையிறங்கின.

அமெரிக்கா தலைமையிலான சர்வதேச அமைதிப்படை ஹெய்ட்டியில் மூன்று மாதங்கள் தங்கி இருக்கும் என்று முதலில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜேன் பேரண்ட் அரிஸ்டிட் நாட்டைவிட்டு வெளியேறியதை அடுத்து ஹெய்ட்டியின் புதிய ஜனாதிபதியாக ஹெய்ட்டியின் உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் வொனி பெஸ் அலெக்ஸாண்டர் பதவி ஏற்றுள்ளார். ஹெய்ட்டியின் அரசமைப்பின்படி இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக இவர் செயற்படுவார்.

## கிளர்ச்சிப் படை அணி தலைநகருக்குள் பிரவேசம்

போர்ட்-ஒவ்-பிரின்ஸ்,மார்ச்2

ஜனாதிபதி ஜேன் பேட்ரன்ட் அரிட்டிஸ்ட் நாட்டைவிட்டு வெளியேறியதையடுத்து ஞாயிறன்று இரவு தலைநகர் போர்ட்-ஒவ்-பிரின்ஸ"க்குள் கிளர்ச்சிப் படை நுழைந்தன.

கிளர்ச்சிப் படைகளின் தலைவர் கை பிலிப் தலைநகரில் சி.என்.என். செய்திச் சேவைக்குத் தகவல் தருகையில் அமெரிக்க கடற்படையினரதும் சர்வதேச அமைதிப்படையினரதும் வருகையைத் தாங்கள் வரவேற்கின்றோம் எனத் தெரிவித்தார்.

"இனியும் சண்டை நடத்த வேண்டிய அவசியம் இல்லை, மோசமான நிலைமை முடிவுக்கு வந்து விட்டது"- என்று கிளர்ச்சித் தலைவர் மேலும் கூறினார்.

ஹெய்ட்டியில் அமைதியான, அரசமைப்பு ரீதியான ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்படும் என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சரவைப் பேச்சாளர் ரிச்சர்ட் பவுச்ச தெரிவித்தார்.

நாட்டைவிட்டு வெளியேறிய அரிஸ்டிட்டுடன் அவரின் பெரும்பாலான அமைச்சர்களும் சென்றுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

(க)

## கரடிக்குச் செயற்கை கருத்தரிப்பு

ஜப்பான்; தலைநகர் டோக்கியோ மிருகக்காட்சிசாலையில் ஜுவான் ஜுவான் என்ற பெண் பண்டா கரடிக்கு செயற்கை முறையில் கருத்தரிக்க வைக்கும் முயற்சிகளை விஞ்ஞானிகள் தற்போது மேற்கொண்டுள்ளனர்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோ மிருகக்காட்சிசாலையில் ஜுவான் ஜுவான் என்ற பெண் பண்டா கரடி உள்ளது. இதை ஆண் கரடியுடன் சேரவிட்டு இனவிருத்தி செய்ய பல முறை முயற்சிக்கப்பட்டது. ஆனால், அது பலனளிக்கவில்லை. எனவே, இதற்குச் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்விக்கும் முயற்சிகளை விஞ்ஞானிகள் தற்போது மேற்கொண்டுள்ளனர். இதுபோன்று ஏற்கனவே மெக்ஸிக்கோவில் நடந்த செயற்கை கருத்தரிக்க வைக்கும் முயற்சிகள் தோல்வி அடைந்தன. எனினும், ஜப்பான் விஞ்ஞானிகள் அதனால் மனம் தளராமல் புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## ரூ. 5,000 கோடி பெறுமதி ராடர்கள் இஸ்ரேலிடமிருந்து இந்தியாவுக்கு!

லண்டன்,மார்ச்1

இந்தியாவுக்கு ரூபா 5ஆயிரம் கோடி மதிப்புள்ள 'பால்கன்' உளவு ராடர்களை அளிப்பதற்கு இஸ்ரேல் இசைந்துள்ளது என அறிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் இதற்குக் கடந்த ஞாயிற்றுக்கிழமை முறைப்படி ஒப்புதல் அளித்தார். இதற்கான பூர்வாங்க இணக்கம் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் அமோஸ் யாரோனுக்கும், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னான்டஸ"க்கும் இடையில் டில்லியில் கடந்த டிசெம்பரில் ஏற்பட்டிருந்தது.

இந்த ராடர்கள், ரஷ்யாவிலிருந்து இந்தியா தருவிக்கும் போர் விமானங்களில் பொருத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

### வேலியே பயிரை மேய்ந்தது

அலகாபாத்,மார்ச்2

வாரணாசி செல்லும் மகாநகர் எக்ஸ்பிரஸ் ரயில் பயணிகளிடம் ரயில்வே பொலீஸாரே கொள்ளையடித்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

மத்தியப் பிரதேச மாநிலம், மானிக் ரயில்வே நிலையத்துக்கு ரயில் வந்து சேர்வதற்கு முன்னதாக மைதான் சிங், சுரேந்திர சிங் என்ற இரு ரயில்வே பொலீஸார் பயணிகளிடம் கொள்ளையடித்துவிட்டு இருளில் தப்பியோடினர்.

இருவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வட மத்திய ரயில்வேயின் மக்கள் தொடர்பு தலைமை அதிகாரி பி.பி.பாண்டே தெரிவித்தார்.

உலக அரங்கில்

## ஜனநாயகக் கட்சி வேட்பாளர் தெரிவு பத்து மாநிலங்களில் இன்று தேர்தல்!

வாஷிங்ரன்.மார்ச்2

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக யார் போட்டியிடுவார் என்பது குறித்துப் பெரும்பாலும் இன்று முடிவாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரே சமயத்தில் நாளை பத்து மாநிலங்களில் நடைபெறவிருக்கும் உட்கட்சித் தேர்தலின் முடிவுகள் வேட்பாளர் யார் என்பதை ஓரளவு தீர்மானித்து விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போது இந்த உட்கட்சித் தேர்தலில் நான்கு பேர் போட்டியிட்டாலும், உண்மையில் போட்டி வட கரோலினா செனட்டர் ஜோன் எட்வர்ஸ"க்கும் மசாசூசெட்ஸின் செனட்டர் ஜோன் கெரிக்கும் இடையில்தான். கலிபோர்னியா, கொனற்றிக்கற், மேரிலன்ட், மசாசூசெட், நியூயோர்க், ஒஹியோ, றோட் தீவுகள், வேர்மணட், ஜோர்ஜியா ஆகியவற்றிலும் மின்னஸ்டாவிலுமே இன்று ஜனநாயக் கட்சியின் உட்கட்சித் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன.

இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றுத் தேர்வுசெய்யப்படுபவர், எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக்கட்சி வேட்பாளரும் தற்போதைய ஜனாதிபதியுமான ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிடுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பின்லேடனைப் பிடிப்பதற்கு பாகிஸ்தானுக்கு அமெ. படை

இஸ்லாமாபாத்,மார்ச்2

பிரபல இஸ்லாமியத் தீவிரவாதியான ஒஸாமா பின்லேடனைப் பிடிப்பதற்காக பாகிஸ்தான் எல்லைக்குள் அமெரிக்கப் படைகள் நுழைவதற்கு சம்மதம் தரப்பட்டுள்ளதா?

- இவ்வாறு தெரிவித்து வெளியான பத்திரிகைச் செய்திகளை பாகிஸ்தான் மறுத்திருக்கின்றது. இதுபற்றி பாகிஸ்தான் இராணுவச் செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் ஜௌசத் சுல்தான் கருத்துக் கூறுகையில் -

எமது இறையாண்மையை எந்தவொரு விடயத்திலும் கடைச்சரக்காக பாகிஸ்தான் மாற்றாது. ஒன்றைக் கொடுத்து மற்றொன்றை வாங்க இறையாண்மை கடைச்சரக்கல்ல - என்றார்.

இதற்கிடையில் - தலிபான் தீவிரவாதிகளுக்குப் பாகிஸ்தான் 'இராணுவம் அனைத்து வகையிலும் உதவி வருகிறது என 'அமெரிக்க நாளிதழ்' ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

"அமெரிக்காவுக்கு எதிராக பெரும் தாக்குதலைத் தொடுக்கத் தலிபான் தவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர். இத்தகைய சூழ்நிலையிலும் தலிபான் தீவிரவாதிகளுக்கும் பாகிஸ்தான் இராணுவத்தினர் பல்வேறு வகையிலும் பக்கபலமாக செயற்பட்டு வருகின்றனர். தலிபான் தீவிரவாதிகள் எல்லைப் பகுதியிலிருந்து மறைவிடத்துக்குப் பாகிஸ்தான் இராணுவத்தினரே லொறிகளில் அழைத்துச்சென்று விடுகின்றனர். இப்படி அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'லோட் ஒவ் றிங்ஸ்' 11 ஒஸ்கார் விருதுகள் சுவீகரித்தது!

'த லோட் ஒவ் த றிங்ஸ் : த றிட்டேர்ன் ஒவ் த கிங்' என்ற ஹொலிவூட் ஆங்கிலத் திரைப்படம் அது பரிந்துரைக்கப்பட்ட 11 ஒஸ்கார் விருதுகளையும் சுவீகரித்துள்ளது.

76 ஆவது ஒஸ்கார் விருது வழங்கும் வைபவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஹொலிவூட்டில் இடம்பெற்றது. அதில் இந்த விருதுகள் அறிவிக்கப்பட்டன.

சிறந்த திரைப்படம், சிறந்த இயக்குநர், என்பன உட்பட 11 விருதுகளை 'த லோட் ஒவ் த றிங்ஸ்' வென்றுள்ளது. இதன் மூலம் அது 1960 இல் 'பென் ஹேர்' படமும் 1998 இல் 'டைட்டானிக்' திரைப்படமும் வென்ற ஒஸ்கார் விருதுகளை சமப்படுத்தியுள்ளது. இந்த மூன்று திரைப்படங்களுமே ஹொலிவூட் வரலாற்றில் அதிக விருதுகளை வென்ற படங்களாகும்.



விருதுகளுடன் கலைஞர்கள்.

# உண்மை, நேர்மை, துணிவுடன் உதித்த சூரியன்கள்



1 அ.யோர்ச், முன்னாள் தலைவர், கிளிநொச்சி மாவட்ட சபை



2 ச.அரவிந்தன் முன்னாள் உறுப்பினர், யாழ்.மாநகரசபை.



3 செ.பத்மநாதன் தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்தி நலன்புரிச்சங்கம்.



4 வி.ஆனந்தசங்கரி (சட்டத்தரணி) முன்னாள் நா.உ.யாழ்ப்பாணம்.



5 இரா.சங்கையா முன்னாள் யாழ்.மருத்துவபீட தொழில்நுட்பவியலாளர்.



6 செ.கந்தையன் முன்னாள் மேயர்,யாழ் மாநகர சபை.



7 வைத்தியகலாநிதி ந.கிருஷ்ணராசா.



8 இ.குணானந்தன் வங்கி அதிகாரி.



9 பெ.சூரியமூர்த்தி (வடமராட்சி) முன்னாள் நகரபிதா,நகரசபை, திருகோணமலை.



10 ச.முத்துலிங்கம் முன்னாள் தலைவர், உடுவில் கிராம சபை.



11 இ.சாந்தசொருபன் பொறியியலாளர்.



12 வைத்திய கலாநிதி பொ.சிவகுமார்

## நீங்கள் காட்டிய பாதையில்..........







- தன்னலமற்ற, நன்றியுணர்வுடன் நம்பிக்கைக்குரிய தலைவனாக,
- அமரர்களான திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம், திரு.அ.அமிர்தலிங்கம் அவர்களின் வரிசையில் அஞ்சாநெஞ்சனாக,
- மறைந்த தலைவர்களை மறக்காது மரியாதை செலுத்தி அவர்கள் காட்டிய பாதையில் துணிவுடன் நிற்பவராக
- பட்டம், பதவிக்காய் விலைபோகா மாசற்ற பெருந் தலைவர்களுள்

அருந்தலைவன்

**திரு.வீரசிங்கம் ஆனந்தசங்கரி** அவர்களின்

(தலைவர்-தமிழர் விடுதலைக் கூட்டணி)

**தலைமையிலான**

## சுயேச்சைக் குழு–01



பூட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து எம் அணியின் வெற்றியை உறுதிப்படுத்துங்கள்.

மறைந்த மாபெருந் தலைவர்களின் நினைவோடு

**துணிந்து வாக்களியுங்கள்.**

## இது ஜனநாயக உரிமைக்கான அஹிம்சை வழி!

உதயன்

## உரிய ஆணை வழங்குவது தமிழ் மக்களின் கடமை

ஏப்ரல் திங்களில் நடைபெறப்போகின்ற இந்தப் பொதுத்தேர்தல் தமிழினத்தைப் பொறுத்தவரை மிகமுக்கியமானது என்பதை இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

நேற்று வெளியான - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் - தேர்தல் அறிக்கை அதை உறுதி செய்திருக்கின்றது.

"தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைத் தீர்மானத்தை உலகறிய மீண்டும் வலியுறுத்தக் கிடைத்த ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பமாக இத்தேர்தலைப் பயன்படுத்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உறுதிபூண்டுள்ளது." - என்று எடுத்த எடுப்பிலேயே இந்தத் தேர்தல் அறிக்கையின் ஆரம்பத்தில் தமிழ்க் கூட்டமைப்பு எடுத்துரைத்திருக்கின்றது.

1977 ஜூலையில் நடந்த பொதுத்தேர்தலிலும் இதேபோன்று தமது சுயநிர்ணய உரிமையை வெளிப்படுத்தும் ஆணையைத் தமிழ்மக்கள் ஏகோபித்து வழங்கியிருந்தனர்.

அதற்குப் பின் அரசியல் வரலாற்றுப்போக்கில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களில் மீண்டும் ஒரு தடவை தங்களது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி, சர்வதேச சமூகத்துக்கு அடித்துக்கூறி, எடுத்துரைக்கும் வாய்ப்பு தமிழினத்துக்குக் கிடைத்திருக்கிறது.

*'தமிழ்த் தேசிய இனத்தின் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை (சுயநிர்ணய உரிமை) ஆகிய மூலாதாரக் கொள்கைகளை ஏற்று, அவற்றின் அடிப்படையில் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும்'* - என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தனது தேர்தல் கொள்கை விளக்கப் பிரகடனத்தில் முக்கிய அம்சமாக முன் வைத்திருக்கின்றது.

இவை தவிர -

★ புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஆலோசனையை ஏற்று, புலிகளுடன் பேசி, உடன் அதனை நிறுவுதல்.

★ உயர்பாதுகாப்பு வலயங்கள், இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு, மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச்செல்ல உடன் அனுமதித்தல்.

★ தமிழர் தாயகத்தில் தமிழ்மக்கள் தரையிலும், கடலிலும் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் நடமாடி தமது வாழ்வாதாரச் செயற்பாடுகளை மேற்கொள்ள வசதியாக இராணுவக் கட்டுப்பாடுகள், தடைகள் ஆகியவை உடன் நீக்கப்படல் வேண்டும்.

★ பாதிப்புற்ற தமிழர் தேசத்தின் பொருளாதார வாழ்வை மேம்படுத்த சர்வதேச சமூகத்தை உதவ வற்புறுத்தல்.

★ ஸ்ரீலங்கா சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளை உடன்விடுவிக்க வலியுறுத்தல்.

★ தமிழ்மண்ணில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போன தமிழர்களுக்கு நீதி கிடைப்பதற்காக சர்வதேச விசாரணைகளை நடத்தி உறுதியான தீர்ப்பை வழங்கக் கோருதல்.

★ போர்நிறுத்த உடன்படிக்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு தமிழர் தாயகத்தில் பூரண அமைதி நிலவ வழிசெய்தல்.

★ புலிகள் மீது தடைவிதித்த நாடுகளை அதனை நீக்க வற்புறுத்தல்.

★ புலிகளின் தலைமையே தமிழ்மக்களின் தேசியத் தலைமை, புலிகளே தமிழ்மக்களின் உண்மையான ஏகப்பிரதிநிதிகள் - என்பதை வெளிப்படுத்தல்.

★ தமிழ்மக்களின் சுதந்திர வாழ்வுக்காகப் புலிகள் தலைமையில் ஐக்கியப்பட்டு உழைத்தல்.

★ புலிகளின் போராட்டத்துக்கும் அதன் தலைமைத்துவம் எடுக்கும் அரசியல் போராட்டத்துக்கும் உறுதுணையாக இருத்தல்.

★ தமிழினத்துக்கு நியாயபூர்வமான அரசியல்தீர்வு மறுக்கப்படுமானால் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழர் தாயகத்தில், தமிழரின் இறைமையும் சுதந்திரமும் நிலைநறுத்தப்படுவது தவிர்க்கமுடியாது என்பதை வெளிப்படுத்தல்.

- இந்த முக்கிய பன்னிரண்டு அம்சங்களை உள்ளடக்கியிருக்கின்றது கூட்டமைப்பின் தேர்தல் பிரகடனம்.

தமிழினத்தின் தேசியத்தை - சுயநிர்ணய உரிமையை - தமிழினம் ஐக்கியப்பட்டு பிரகடனப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாக இந்தத் தேர்தல் வந்திருக்கின்றது.

இனத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டத்தில் வாய்த்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்துவதில்தான் தமிழினத்தின் கெட்டித்தனம் தங்கியுள்ளது.

கூட்டமைப்பு என்ற ஊடகத்தின் ஊடாகத் தங்கள் ஆணையை வெளிப்படுத்தி, போராட்டத்துக்கு வலுச்சேர்ப்பதே தமிழினத்தின் இன்றைய பொறுப்பும் கடமையுமாகின்றது.

# வாக்காளர் அட்டை விநியோகம் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்2

எதிர்வரும் தேர்தலில் வாக்களிப்பதற்கான வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் குடாநாட்டில் தபால் நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்பட இருக்கின்றன.

வாக்காளர் அட்டைகள் தயாரிக்கும் பணிகள் யாழ். செயலகத்தில் முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றன. வாக்காளர் அட்டை விநியோகம் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் தேர்தல் தினமான ஏப்ரல் 2ஆம் திகதிவரை நடைபெறும் என்று யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

எதிர்வரும் 21ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை விடுமுறையாக இருந்தபோதும், அன்றும் விநியோகம் இடம்பெறும் எனவும் அவர் கூறினார்.

தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 24ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (ம-3)

# அமைச்சர் ஹக்கீமின் அமைச்சுக்களையும் பறிக்கத் திட்டமிடுகிறாராம் ஜனாதிபதி!

## பேரியல், அதாவுல்லா அணியினரும் அழுத்தம்

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், பொறுப்பில் இருக்கும் துறைமுகங்கள் அபிவிருத்தி, கப்பல்துறை, கிழக்கு அபிவிருத்தி ஆகிய அமைச்சுகளைக் கையேற்பதற்கு ஜனாதிபதி ஆலோசித்து வருகிறார் எனத் தெரியவருகிறது.

ஒலுவில் துறைமுக அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட 55 கோடி ரூபாவை அமைச்சர் ஹக்கீம் தேர்தல் நடவடிக்கைகளுக்குச் செலவிடத் திட்டமிட்டிருக்கிறார் என ஜனாதிபதி சில தினங்களுக்கு முன் குற்றச்சாட்டு ஒன்றைச் சுமத்தியது தெரிந்ததே.

அவரது அமைச்சை கையேற்பதற்கான முன்னோடி முயற்சியே இது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதுதவிர, இலங்கைத் துறைமுக அதிகார சபையில் பல்வேறு ஊழல், மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றன என்ற குற்றச்சாட்டும் நீண்டகாலமாக இருந்து வருகிறது.

இவற்றைக் காரணம் காட்டியே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அமைச்சர் ரவூப் ஹக்கீமைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டு, அந்த அமைச்சுப் பொறுப்புக்களைத் தான் கையேற்பது தொடர்பாக உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து வருகின்றார் எனக்கூறப்படுகிறது.

'நுஆ தலைவி பேரியல் அஷ்ரப்பும், அதாவுல்லா அணியினரும் அமைச்சர் ஹக்கீமின் அமைச்சுப் பொறுப்புக்களைப் பறித்துவிடுமாறு அழுத்தம் கொடுத்துவருகின்றனர் என்பதாலும் ஜனாதிபதி அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

ஒலுவில் துறைமுக நிர்மாணத்துறைத் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதற்கே 55கோடி ரூபாவும் பயன்படுத்தப்படும் என அமைச்சர் ஹக்கீம் கூறியிருக்கிறார். அதன்படி, நடந்தால் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸின் செல்வாக்கு உயர்ந்துவிடும் எனக்கருதியே அவரது பதவியைப் பறிக்க பேரியல் அஷ்ரப், அதாவுல்லா அணியினர் ஜனாதிபதிக்கு அழுத்தம்கொடுத்து வருகின்றனர் என்று மு.கா. பிரமுகர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். அமைச்சுப் பதவியிலிருந்து ஹக்கீமை விலக்கத் தீர்மானித்தால் துறைமுகங்கள், கப்பல்துறை, கிழக்கு அபிவிருத்தி ஆகிய பொறுப்புக்களைத் தான்கையேற்று விட்டு, முஸ்லிம் சமய விவகார அமைச்சுப் பொறுப்பை மட்டும் ஹக்கீம் வைத்துக்கொள்வதற்கு ஜனாதிபதி அனுமதிப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, அமைச்சர் ரவூப் ஹக்கீமின் அமைச்சுப் பொறுப்புக்களில் ஜனாதிபதி கை வைக்கமாட்டார் என்றே அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர். அமைச்சுப் பதவியிலிருந்து ஹக்கீம் விலக்கப்பட்டால் நாடு முழுவதும் அவருக்குச் செல்வாக்குக் கூடிவிடும் என்பதை ஜனாதிபதி உணர்வார் என்று அவர்கள் தமது கருத்துக்கு நியாயம் கற்பிக்கின்றனர்.

அமைச்சர் ஹக்கீமின் விவகாரம் தொடர்பாக ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஜனதாஸ பீரிஸிடம் கேட்டபோது, அதுகுறித்துத் தமக்கு எதுவும் தெரியாது எனத் தெரிவித்தார்.(க)

# வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கு தனியான ப.தெ.வ. கூட்டுறவுச் சங்கம்

அரியாலை,மார்ச்2

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கென தனியான பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று விரைவில் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு உதவி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி இதனைத் தெரிவித்தார்.

இந்தப் புதிய சங்கத்தின் தொழிற்பாட்டை எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டில் ஆரம்பித்துவைப்பதற்கான பூர்வாங்கப் பணிகளை யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இதேசமயம் -

இந்தப் புதிய சங்கத்தை அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று கடந்த 20ஆம் திகதி தாளையடியில் அமைந்துள்ள வடமராட்சி கிழக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள், யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களின் பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், பளை, பருத்தித்துறை ஆகியவற்றின் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகள், கிளிநொச்சி மாவட்டத் தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பளை, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து ஒன்பது கிளைகளும், பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து மூன்று கிளைகளும் பிரித்தெடுக்கப்பட்டு வடமராட்சி கிழக்கு பிரதேசத்திற்கென தனியான ஒரு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படும்.(ம-17)

### குற்றச் செயல்களுடன் தொடர்புபட்ட

# பெண்கள், சிறுவர்களை தடுத்துவைக்க வசதி இல்லை

யாழ்ப்பாணம்,மார்ச்2

குற்றச்செயல்களில் ஈடுபடும் மற்றும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் சிறுவர்களையும் பெண்களையும் தடுத்து வைப்பதற்குத் தனியான கட்டட வசதிகள் இல்லை என்று கவலை தெரிவித்தார் மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன்.

குடாநாட்டில் அண்மைக் காலமாகக் குற்றச்செயல்கள் தொடர்பான வழக்குகளில் பெண்கள், சிறுவர்கள் தடுத்துவைக்கப்படுவது அதிகரித்து வருகின்றது.

- இவ்வாறு குற்றங்களுடன் தொடர்புபடும் பெண்கள், சிறுவர்களைத் தடுத்துவைப்பதற்கு யாழ். சிறைச்சாலையில் போதிய வசதிகள் இல்லை. இந்த நிலையைத் தவிர்க்க இவர்களுக்கான தடுப்பு நிலையம் ஒன்று நிரந்தரமாக வேண்டும் என்று நீதிவான் மேலும் தெரிவித்தார். (ம-ரி)

# தொலைக்காட்சி பார்ப்பதில் நேரம் செல்வதால் மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டுவதில்லை

## மெய்வன்மைப் போட்டியில் வலயக் கல்விப் பணிப்பாளர் கவலை

தற்போது பாடசாலை மாணவர்களில் பலர் தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன் அதிக நேரத்தைச் செலவிடுவதால் கல்வியில் அக்கறை செலுத்தாமல் இருக்கும் நிலையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளால் மாணவர்களின் கல்வி பாதிப்படைவதை வீட்டிலிருக்கும் பெற்றோர்கள் உணர்ந்து செயற்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன்.

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி வருடாந்த மெய்வல்லுநர் போட்டி கடந்த மாதம் 24ஆம் திகதி நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே கல்விப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் நா.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

பாடசாலைக் கட்டடங்களால் மட்டும் கல்வி உயர்வடையாது. மரநிழலிலும் கல்வி கற்கலாம். ஆசிரியர்களின் கற்பித்தலில் மாணவர்கள் அக்கறை காட்டாது விட்டால் கல்வியில் அவர்கள் முன்னேற்றமடையமுடியாது. அதிபர் மற்றும் ஆசிரியர்கள் சிறந்த முறையில் கற்பித்தாலும் மாணவர்கள் அதில் முழு ஈடுபாட்டுடன் கற்கவேண்டும். அப்போது தான் கல்வியில் அவர்கள் உயர்வடையமுடியும். மாணவர்கள் ஏட்டுக் கல்வியுடன் நின்று விடாது உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுகளிலும் ஈடுபட வேண்டும். விளையாட்டு மைதானங்களை விளையாட்டுப் போட்டிகளின்போது மட்டும் பயன்படுத்தாது மாலை நேரங்களிலும் பயன்படுத்தவேண்டும். அப்போதுதான் அவர்கள் உடலுறுதி மிக்கவர்களாகவும், சிறந்த விளையாட்டு வீரர்களாகவும் எதிர் காலத்தில் விளங்கமுடியும். - என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட கல்விப்பணிப்பாளர் க.தனபாலசிங்கம் உரையாற்றுகையில்:-

இதுபோன்ற பாடசாலைமட்ட விளையாட்டுப்போட்டிகளில் முதலிடம் பெறும் மாணவ, மாணவிகள் கோட்டமட்டப்போட்டி, வலய மட்டப்போட்டி, மாகாண மட்டப்போட்டி ஆகியவற்றிலும் தேசியமட்ட போட்டிகளிலும் பங்குபற்றி சாதனை படைக்க முடியும் - என்றார்.

கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் சு.வைரவநாதன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள்.

(ம-8-135)

### நாளை

மாசி 20
புதன்கிழமை
(03.03.2004)
திதி : துவாதசி
பின்னிரவு 5.24
நட்சத்திரம் : புநர்பூசம்
பகல் 9.07
சுபநேரம் : 4.56 - 6.26
ராகுகாலம்: 12.26 - 1.56
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பெண்ணுக்கு சீதனம் குணம்தான்.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

வடமாகாணத்தின் காலநிலைக்கு நன்கு நிறைதரக்கூடிய புதிய இனப் புறொயிலர் குஞ்சுகளை அறிமுகப் படுத்துகின்றோம். இன்றுமுதல் பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாகப் பெறுவோருக்கு விசேட கழிவு உண்டு. தொடர்பு: பாலா, 18, நக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 6875. (29042)

R.L.L. புதிய தொலைபேசி இணைப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: ம.ரூபன், ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில் தெற்கு, இணுவில். (29119)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, சைவபோசன 43 வயது, ஆயிலிய நட்சத்திரம், செவ்வாய்க் குற்றமற்ற, எஞ்சினியராகப் பணியாற்றும் மணமகனுக்கு கொம்பியூட்டர் டிப்ளோமா, B.Sc. பட்டதாரி மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. [illegible], மே/பா உதயன், யாழ்ப்பாணம். (29090)

### தவறிவிட்டது

நயினாதீவைச் சேர்ந்த முத்தையா பகீரதன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.701782747V) கடந்த 29.02.2004 ஞாயிறன்று நக்கா வீதிக்கும் இராசாவின்தோட்டம் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம், சிவகுமார் வெற்றிலைக் கடையில் ஒப்படைத்துதவவும். (29102)

யாழ். நகரிலிருந்து பஸ்ஸில் பயணஞ்செய்யும்போது 077 6199082 என்ற இலக்கமுடைய கைத்தொலைபேசி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கானான் ஜெப ஆலயம், இருபாலை என்னும் முகவரிக்கு நேரில் தொடர்புகொள்ளவும் (காலை 9.00 மணிக்கு முன்னும் மாலை 4.00 மணிக்குப் பின்பும்).
T.P.: 3653 (சி-33522)

'றிச்சாட்' நீல நிற கணக்குக் கொப்பி கோண்டாவில் ஸ்ரேசனடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சு.சுப்பிரமணியம், 'ஸ்ரீபவனம்' கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் (T.P.: 222 5627, 0777 157247) எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (29123)

நடராஜக் குருக்கள் கேதீஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை(இல.561783683V)யும், மோட்டார் சைக்கிள் புத்தகம், சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பனவும் நேற்று (01.03.2004) ஸ்ரான்லி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கற்பகப் பிள்ளையார் கோயில், இருபாலை எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (29124)

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kg மேல் வளர்ச்சியடையக்கூடிய நம்பர் I பகீரா இன புறொயிலர் குஞ்சுகள் 05.03.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.: 222 3529, 222 2867. (29111)

### நடமாடும் மருத்துவசேவை

யாழ்ப்பாணம்,மார்ச்1

மனித முன்னேற்ற நடுநிலையத்தின் அனுசரணையுடன் திருச்சிலுவைக் கன்னியர் நடமாடும் மருத்துவ சேவை கொழும்புத்துறை, வளன்புரம் பகுதியில் நடைபெற்றுவருகின்றது.

இதன்மூலம் கடந்த சனிக்கிழமை மட்டும் ஏறக்குறைய 250 நோயாளர்கள் பயன்பெற்றனர். (10-ரி)


**NEW SCIENCE COLLEGE**
கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்

**2006 A/L**

★ இரசாயனவியல்

திரு.மகேஸ்வரன்
B.Sc.P.G.D., M.Phil. (Edu.)

ஆரம்பம்:
03.03.2004 புதன்கிழமை
(16-18-24) பி.ப. 3.00மணி. (29118)


## புள்ளியால் பூரிப்பு



செல்வி
**வி. சுகனியா - 141**

பகட்டான பள்ளியை நாடி நீ ஓடாது
புகட்டிய பாடத்தால் புகழீட்டி முத்தான
சொத்தே எம் சுகனியா சோதியாய் நீ மிளிர
பக்தியோடு அன்னையைப் பணிந்து பாராட்டினோம்.

யா/உரும்பிராய்
சந்திரோதய வித்தியாசாலை.

- அதிபர், ஆசிரியர்,
அபிவிருத்திச் சங்கத்தினர்.

(29126) (26-16-18-24)

## திருமண நன்றி நவிலல்

**கிளெமென்ற் செல்வதாஸ் — மேரிசந்திரகலா**

2004.02.23 அன்று திருமணம் என்னும் திருமாங்கல்யத்தில் இணைய மனமுவந்து உதவியவர்களாகிய உங்கள் அனைவரையும் அன்போடு நினைவு கூருகின்றோம். புனித திருவருட்சாதனமாகிய திருமணத் திருப்பலியினை நிறைவேற்றிய எமது பருத்தித்துறை பங்குத்தந்தையாகிய அருட்திரு.ப.இருதயதாஸ் அவர்களுக்கும் அவருக்கு உறுதுணையாக இருந்த துறவியாருக்கும் எமது அன்பு கலந்த நன்றிகள். திருப்பலியில் பாடல்கள் பாடிய புனித அன்தோனியார் ஆலய பாடகர் குழாமிற்கும், இசைக்கலைஞர்களுக்கும் மற்றும் திருப்பலியில் உதவிய பீடப்பணியாளர்களுக்கும் எமது நன்றிகள். திருமண வைபவத்தினைச் சிறப்புற நிறைவேற்ற அன்பொழுக ஒத்தாசைபுரிந்து வாழ்த்திய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள். திருமணத் தேவைகளுக்கு உதவி செய்த வாகன உரிமையாளர்களுக்கு எமது நன்றிகள். திருமணத்தினை இனிமை பொங்க, நிறைவேற்ற இசைகளால் அலங்கரித்த ராகம்ஸ் இசைக் குழுவினருக்கு எமது உளம்நிறைந்த நன்றிகள். திருமண வைபவத்தை நிறைவேற்ற மண்டபத்தினை ஒழுங்கு செய்துதந்த லொயலாஸ் கல்யாண மண்டப உரிமையாளருக்கு எமது நன்றிகள். மற்றும் அனைத்து விதத்திலும் உதவிய அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

புனித அந்தோனியார் வீதி,
பருத்தித்துறை.
T.P.: 0777 171364 (சி-33525)(30-16-18-24)

நன்றி கூறுவோர்:
மணமக்கள்,
பெற்றோர், சகோதரர்.


**இதோ!**

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-33905)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
25
11
1948



மறைவு
01
02
2004

## திருமதி அருந்தவமலர் கிருஷ்ணபிள்ளை

*அவனியில் எங்களை அன்புடன் ஆதரித்த தெய்வமே!*
*அன்பால் எம்மையெல்லாம் ஆண்டகுலவிளக்கே!*
*அம்மா! நீங்கள் எமைப்பிரிந்து திங்கள் ஒன்றானதுவோ?*
*ஆறாது உன்நினைவு! அழியாது எம் மனதில்!!*

எமது குடும்பத்தலைவியின் திடீர் மறைவுச்செய்தி அறிந்து ஓடோடிவந்து உதவிகள் செய்து, அஞ்சலி செய்து, ஆறுதல்கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர்கள், பணியாளர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (02.03.2004) செவ்வாய்க்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.* (சி-33523)(30-16-18-24)

- குடும்பத்தினர்.

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

02.03.2004
HAPPY BIRTHDAY



**SUBAGAN**

செல்வன்
**சுபகன்**

மட்டுவில் தெற்கைச்
சேர்ந்தவர்களும்
லண்டனை வசிப்பிடமாகக்
கொண்டவர்களுமான
திரு.திருமதி
**செந்தில்நாதன் - மாலினி**
தம்பதிகளின்
செல்வப்புதல்வன்
**சுபகன்**

அவர்கள் தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (02.03.2004) செவ்வாய்க்கிழமை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

லண்டனில் வசிக்கும் அன்பு அப்பா, அம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், பிரான்சில் இருக்கும் பெரியப்பா, மாமா, மாமி, கனடாவில் வசிக்கும் அப்பப்பா, அம்மம்மா, பெரிய மாமாமார் மற்றும் நுணாவில் மேற்கில் வசிக்கும் அப்பப்பா, அம்மம்மா, ஆசை அம்மம்மா, பூட்டி, சின்னமாமா, சித்தி, மட்டுவில்தெற்கில் வசிக்கும் அப்பம்மா, மாஅத்தை, வட்டு.கிழக்கில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சுபகன் குட்டியை கண்ணகை அம்மன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டுகாலம் நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
(29122)(34-16-18-24)

சசிகரன்
(சின்னமாமா).

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பூநகரி, முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத் தலைவரும், யோகர் சுவாமி திருவடிநிலைய முதியோர் இல்லத்தின் உபதலைவருமான



உயர்திரு.
**மூத்ததம்பி நவரட்ணம்**

அவர்கள் 01.03.2004 இல் நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணஞ்செய்து கொண்டமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது சேவை மேன்மேலும் வளர்ச்சியுற எல்லாம் வல்ல இறைவனின் ஆசி வேண்டிப் பணிகின்றோம்.

முழங்காவில், பூநகரி. (29128)(34-16-18-24)

- அபிவிருத்தி நிறுவனத்தினர்.


**Dialog GSM**

kit

டயலொக்
கையடக்க GSM
தொலைபேசி அட்டைகளை
மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**Sri Murugan**
Tele Communication
& Agency Post Office,
303, K.K.S. ROAD, JAFFNA.
T.P. :021 222 5392
FAX :222 3214.

எந்நேரமும்
உன்னுடன்...!

(C/33362)(38-19-16)


## மரண அறிவித்தல்

### திருமதி கதிரன் சின்னாச்சி

ஏழாலை மத்தி, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரன் சின்னாச்சி 28.02.2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் தவசி கதிரனின் அன்பு மனைவியும் அமரர்களான நாகர் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் அமரர்களான தவசி - நாகம்மா தம்பதிகளின் மருமகளும் தங்கவடிவேலு, தங்கராசா, புஸ்பராணி (டென்மார்க்), தவநேசன் (ஜேர்மனி), தங்கராணி (ஜேர்மனி), சிறீதரன் (ஜேர்மனி), வசந்தராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாநிதி, நாகேந்திரம், சுபா, விஜி, ஜெயா, தெய்வேந்திரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் அமரர் கதிரவேலு, தங்கம்மா, அமரர் அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரியும் தர்ஷன், தர்ஷனா, மயான்சன், றெஜீனா, கனுஸ்டன், லஜனிகா, பஸ்னிகா, அனுஷிகா, அனுசன், லக்சன், தனுசன் ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2004) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோயிலடி,*
*ஏழாலை மத்தி, ஏழாலை.* (29120)(34-16-18-24)

தகவல்:
பிள்ளைகள்.

# தமிழ் மக்களின் அரசியல் உறுதிப்பாட்டை மீண்டும் பிரகடனப்படுத்தி தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்துவோம்

## தமிழ்க் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபன விவரம்

2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 05ஆம் நாள் நடைபெற்ற கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் இரண்டு ஆண்டுகளே கழிந்த நிலையில், இருபெரும் சிங்களப் பேரினவாதக் கட்சிகளுக்குமிடையே தொடர்ந்து கொண்டிருக்கும் அதிகாரப் போட்டியின் விளைவாக மீண்டும ஒரு பொதுத்தேர்தலுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமைக்குத் தமிழ்த் தேசிய இனம் தள்ளப்பட்டுள்ளது.

இருப்பினும், இலங்கையில் இப்போது நிலவிக்கொண்டிருக்கும் அரசியற் சூழ்நிலையினதும் சர்வதேச அரங்கில் எமது விடுதலைப் போராட்டத்திற்குச் சாதகமாக உருவாகிவரும் மாற்றங்களினதும் பின்னணியில் எம்மினத்தின் சுயநிர்ணய உரிமைத் தீமானத்தை உலகறிய மீண்டும் வலியுறுத்தக் கிடைத்த ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பமாக இத்தேர்தலைப பயன்படுத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதிபூண்டுள்ளது.

வரலாற்றுக் காலத்திலிருந்து இலங்கைத் தீவில் தனக்கெனத் தனியானதோர் மரபுவழித் தாயகத்தையும் அதில் இறைமையையும், ஆட்சி உரிமையையும், தன்வசம் கொண்டிருந்த தமிழ்த் தேசிய இனம், ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களிடம் முதலில் தன் இறைமையை இழந்தது. பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1833இல் முழு இலங்கைத் தீவும் ஒரே அரசியல் நிர்வாகக் கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்டபோது, தமிழ்த் தேசிய இனத்தில் அங்கீகாரமின்றி ஆங்கிலேய மேலாதிக்கத்தால் தமிழர் தாயகம் சிங்கள தேசத்துடன் ஒன்றிணைக்கப்பட்டது.

பின்னர், 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இலங்கைத் தீவை விட்டு வெளியேறிய வேளையில், தமிழ்த் தேசிய இனத்தின் தரப்பில் முன்வைக்கப்பட்ட அனைத்து அரசியல் கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டு, சிங்கள தேசத்தின் தயவில் தமிழ்த் தேசிய இனத்தின் தலைவிதி தங்கியிருக்கவேண்டிய நிலைமைக்கு வழியமைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நிலப் பறிப்பு, குடியுரிமைப் பறிப்பு, வாக்குரிமைப் பறிப்பு, மொழியுரிமைப் பறிப்பு மற்றும் கல்வி, தொழில், பண்பாடு போன்றவற்றில் ஏற்படுத்தப்பட்ட இன ரீதியான பாரபட்ச நடவடிக்கைகள் ஆகியவற்றினால தமிழ் இனத்தின் தனித்துவத்திற்கும் வாழ்விற்கும் விடுக்கப்பட்ட இன அழிப்பு அச்சுறுத்தலின் விளைவாக எமது மரபுவழித் தாயகத்தில் எமது விவகாரங்களை நாமே நிர்வகிக்க வேண்டும் என்ற தீர்மானத்தின் அடிப்படையிலும் சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தின் பெயரிலும் தமிழ் இனத்தின் சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியால் முன்னெடுக்கப்பட்ட அஹிம்சை வழிப்போராட்டங்கள் சிங்கள அரசுகளினால் ஆயுத முனையில் அடக்கப்பட்டன. 1957ஆம் ஆண்டிலிருந்து காலத்திற்குக்காலம் தமிழினத் தலைவர்கள் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களோடு செய்துகொண்ட அரசியல் ஒப்பந்தங்களும் கிழித்தெறியப்பட்டன.

### 1977இல் தமிழர்கள் வழங்கிய ஆணை

தொடர்ந்து, பாதுகாப்பற்ற தமிழ் மக்கள் மது 1956, 1958ஆம் ஆண்டுகளில் திட்டமிடப்பட்டு அரச வன்முறை ஏவிவிடப்பட்டது. 1972இல் தமிழ் இனத்தின் பிரதிநிதிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களினால் நிறைவேற்றப்பட்ட ஒற்றை ஆட்சிமுறையிலான குடியரசு அரசியற் சாசனத்தினால் தமிழ் இனத்தின் உரிமைகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக மறுக்கப்பட்ட நிலையில் தமிழ் இனத்தரப்பில் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டிய வரலாற்றுக் கட்டாயம் ஏற்பட்டது.

இந்த அரசியற் சூழ்நிலையில் தமிழரின் அரசியல் அமைப்புக்கள் ஒன்றிணைந்து 1976ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் நாள் தமிழ்த் தேசிய இனத்திற்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் முழுமையான இறைமை கொண்ட சுதந்திரத் தமிழழ அரசை நிறுவுவதெனத் தீர்மானித்தன.

1977ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழழ இலட்சியத்தை முன்வைத்துப் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அமோகமான ஆதரவைத் தமிழினத்தின் தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ்பேசும் மக்கள் அளித்ததன் மூலம் சுதந்திரத் தமிழீழத்திற்கான ஆணை வழங்கப்பட்டது.

சுதந்திரத் தமிழீழத்திற்கான ஆணைக்குப் பதிலடியாக உடனடியாகவே சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களினால் இனப்படுகொலைத் தாக்குதல்கள் தமிழ் இனத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டதோடு, அடுத்த ஆண்டில் (1978) ஒற்றையாட்சி முறையை மேலும் வலுப்படுத்தி இரண்டாவது குடியரசு அரசியல் சாசனம் தமிழ் மக்களினதும் அவர்களது பிரதிநிதிகளினதும் எதிர்ப்புக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து 1979இலும் 1981இலும் பின்னர் பாரியளவில் 1983இலும் தமிழினப் படுகொலைத் தாக்குதல்கள் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களால் திட்டமிட்டுத் தீவிரப்படுத்தப்பட்டன.

இந்தச் சூழ்நிலையில் தமிழ் இனத்தின் வாழ்வையும் தனித்துவத்தையும் பாதுகாக்கவும் அதன் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டவும் ஆயுதப் போராட்டமே ஒரே வழி என்ற தவிர்க்க முடியாத நிலைமைக்குத் தமிழ்த் தேசிய இனம் தள்ளப்பட்டு, ஆயுதப் போராட்டம் விரிவடைந்ததோடு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தலைமையில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தினை முறியடிப்பதற்கும் அதன் மூலம் தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாஷைகளை நசுக்குவதற்கும் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்களப் பேரினவாத அரசுகளினால் எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்த நிலையில், "தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு இராணுவ ரீதியாகத் தீர்வுகாண முடியாது; அரசியல் ரீதியாகவே அதனைத் தீர்க்கமுடியும்" என்னும் உண்மைநிலை சர்வதேச சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வலியுறுத்தப்பட்ட சூழ்நிலையில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடன் கூடிய அரசியற் பேச்சுக்களுக்கு அடிகோலப்பட்டது.

இவ்விதம் தமிழ்த் தேசியத்தின் வலிமை நிலைநாட்டப்பட்டிருப்பதற்கு பல்வேறு துன்ப துயரங்களுக்கும் ஒரு லட்சம் வரையிலான உயிரிழப்புகளுக்கும் இடையே எமது மக்கள் தொடர்ந்து காட்டி வந்திருக்கும் அர்ப்பணிப்புடன் கூடிய இலட்சியப் பற்றுறுதியும், வீரவரலாறு படைத்திருக்கும் எமது மாவீரரதும், போராளிகளினதும் தியாகங்களும் சாதனைகளுமே காரணமென்பதை இச்சந்தர்ப்பத்தில் நாம் எல்லோரும் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம்.

### போர்நிறுத்த உடன்படிக்கை

2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24ஆம் நாள் நள்ளிரவு தமிழீழ விடுதலைப் புலிகள் தாமாகவே முன்வந்து ஒருதலைப்பட்சமாகப் பிரகடனப்படுத்திய போர் நிறுத்தமும் தொடர்ந்து சிறிலங்கா அரசினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் இணக்கப்பாட்டுடன் மேற்கொள்ளப்பட்ட நோர்வே அரசின் அனுசரணை முயற்சிகளின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையும் சிறிலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பல சுற்றுப் பேச்சுகளுக்கு வழியமைத்தன.

இந்தப் பேச்சுக்களின் போது எட்டப்பட்ட உடன்பாடுகளின் பிரகாரம் தமிழ் மக்களுடைய அன்றாட வாழ்வில் மீண்டும் இயல்பு நிலையினை ஏற்படுத்துவதற்கு அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்படும் மனிதாபிமான அடிப்படையில் அமைந்த புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கெனவே அமைக்கப்பட்ட 'சிரான்' உள்ளிட்ட உப அமைப்புக்கள் செயற்படாத காரணத்தினாலும் மேலும் எமது மக்களின் அவசியத் தேவைக்கெனச் சர்வதேச சமூகம் உவந்தளித்த பெருந்தொகை நிதியுதவியைப் பயன்படுத்துவதற்கான அதிகாரக் கட்டமைப்பு இல்லாத காரணத்தினாலும், எமது மக்களின் அதிகரித்து வந்திருக்கும் அன்றாடத் துன்பதுயரங்களையும் அதன் விளைவாக அவர்களின் மனவுணர்வுகளையும் கருத்திற்கொண்டு தமிழ்த் தேசிய இனத்தின் தாயகத்திற்கென 'இடைக்காலத் தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பு' ஒன்று ஏற்படுத்தப்படவேண்டுமென்ற கோரிக்கையினைத் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்தனர்.

அந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்புக்கான தமது வரைவினை 2003ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31ஆம் நாள் நோர்வே அனுசரணையாளர்களூடாக அவர்கள் சமர்ப்பித்தனர். இந்த வரைவு தொடர்பான பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான நாளைக் குறிப்பிடுமாறு சிறிலங்கா அரசினைத் தமிழீழ விடுதலைப் புலிகள் கோரினர்.

இந்த நிலையில், போர்நிறுத்த உடன்படிக்கை நிலைத்து நிற்பதற்குக் கணிசமான அளவு ஆதாரமாக விளங்கிய பாதுகாப்பு, உள்துறை, மற்றும் தகவல் தொடர்பு ஆகிய மூன்று முக்கிய அமைச்சுக்களையும் தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பு வரைவு வழங்கப்பட்ட மூன்று நாள்களுக்குள் ஜனாதிபதி பொறுப்பேற்றதையடுத்து, ஆரம்பமான அரசியற் சச்சரவு, ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து எதிர்வரும் 2004.04.02ஆம் நாள் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான உத்தரவைப் பிரகடனப்படுத்தியதோடு முடிவுக்கு வந்தது.

### சீர்குலைப்பு

இந்த நிலைமை எமது ம[illegible]ளுக்கு அவசரமாகத் தேவைப்படும் இடைக்[illegible]தை தன்னாட்சி அதிகாரக்கட்டமைப்பினை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளைச் சீர்குலைத்ததோடு தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சிகளுக்கும் பாரிய பின்னடைவையும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியுள்ளது.

இதன் பின்னரும் சமாதான முயற்சிகளில் தமது திடமான உறுதிப்பாட்டைத் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர். இதனைச் சர்வதேச சமூகம் அங்கீகரித்ததுடன் பாராட்டியுமுள்ளது.

தமிழீழத் தேசிய இனத்தின் மரபுவழித் தாயக நிலப்பரப்பில் 70 வீதத்தைத் தொடர்ச்சியாகத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து, அங்கு ஓர் அரச நிர்வாகத்துக்குச் சமமான சகல அம்சங்களையும் உள்ளடக்கிய நிர்வாகக் கட்டமைப்பை நடத்தி, ஒரு நடைமுறை அரசினைத் தம்வசம் கொண்டிருந்தபோதிலும், தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை 2001 டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி பிரகடனம் செய்தனர். தொடர்ந்து 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டுத் தமிழ்த் தேசியப் பிரச்சினை தொடர்பான அரசியல் பேச்சுக்களில் பங்குகொண்டிருந்தார்கள் என்பதைச் சகலரும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று நாம் கருதுகின்றோம். எனவேதான் சீர்குலைந்திருக்கும் அரசியல்தீர்வு முயற்சிகளை ஆக்கபூர்வமாகவும் ஆரோக்கியமாகவும் மீண்டும் முன்னெடுக்கும் விதத்திற் சிங்களதேசமும் தமது பங்களிப்பை வழங்குமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது.

### தீர்மானங்கள்

**இதனடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்வரும் தீர்மானங்களை முன்வைக்கின்றது.**

★ தமிழ்த் தேசிய இனத்தின் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை (சுயநிர்ணயவுரிமை) ஆகிய மூலாதாரக் கோரிக்கைகளை ஏற்று அவற்றின் அடிப்படையில் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணப்படவேண்டும்.

★ தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் முஸ்லிம் மக்கள் தொடர்பாகத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தெளிவானதும், திட்டவட்டமானதுமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. தமிழர்களைப் போலவே முஸ்லிம்களும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருப்பவர்கள் என்ற வகையிலும், எமது தாயகத்தில் தமிழர்களுடன் இணைந்து வாழ்ந்து வந்திருப்பவர்கள் என்ற அடிப்படையிலும் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம் மக்களின் தனித்துவம், பாதுகாப்பு, பண்பாடு, பொருளாதாரம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான விடயங்களும் அம்சங்களும் உள்ளடக்கப்படவேண்டும் எனத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உறுதிபூண்டுள்ளது.

இந்த வகையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான பிரேரணையில் முஸ்லிம்கள் தொடர்பான அம்சங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையில் தங்களின் பங்கு எவ்வாறு அமையவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் பங்குபற்றும் உரிமை முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளுக்கு உண்டெனத் தமிழீழ விடுதலைப் புலிகள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். மேலும், வடக்கு - கிழக்கில் உள்ள முஸ்லிம் சமூகத்தினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையில் இடம்பெறுவார்கள் என அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இந்தப் பின்னணியில் ஒரு பொதுவான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதில் தமிழர்களுடன் முஸ்லிம் சகோதரர்களும் இணைந்துகொள்வார்கள் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கை கொண்டுள்ளது.

★ இருபது ஆண்டுகாலமாக நீடித்த போரினால் அழிந்துபோன தமிழ்த் தேசத்தையும் சிதைந்துபோன தமிழர் வாழ்வையும் மீளக் கட்டியெழுப்பி தமிழ்மக்கள் நாள்தோறும் எதிர்கொள்ளும் பூதாகாரமான வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு, தமிழ்மக்களது வாழ்வில் இயல்புநிலையை ஏறபடுத்துவதற்காக மககள் நலனை மையப்படுத்தி மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து சட்ட ஆட்சிக்கு அமைவாக நடைமுறைச் சாத்தியமான முறையில் தமிழ்மக்கள் சார்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான ஆலோசனையைச் சிங்களதேசம் முழுமையாக ஏற்றுத் தமிழீழ விடுதலைப் புலிகளோடு விரைவாகப் பேச்சு நடததி இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை நிறுவவேண்டும்.

★ மக்களின் நலன்களைப் புறந்தள்ளிப் போரியல் நலன்களுக்கு முதன்மை கொடுத்து அநீதியான முறையில் தமிழர் வாழ்விடங்களில் அமைக்கப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களும் இராணுவ முகாம்களும் அகற்றப்பட்டு இராணுவ நெருக்குதல்கள் அற்ற நிலையில் தமிழ்மக்கள் தமது சொந்த வாழ்விடங்களுக்கு உடனடியாகத் திரும்பிச்சென்று குடியமர ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

★ தமிழர் தாயகத்தில் தமிழ்மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் நடமாடி, தரையிலும் கடலிலும் தமது வாழ்வாதாரச் செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கு விதிக்கப்பட்டுள்ள இராணுவ அழுத்தங்களும் தடைகளும் முற்றாக அகற்றப்படவேண்டும்.

★ தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும்வரை காத்திராது தமிழ்மக்களை அழுத்திக்கொண்டிருக்கும் அவசர மனிதாபிமானத் தேவைகளுக்கும் மற்றும் பாரிய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கும் நேரடியாக உதவிகளை வழங்கித் தமிழ்த் தேசத்தின் பொருளாதார வாழ்வை மேம்படுத்தச் சர்வதேச சமூகம் உதவவேண்டும்.

★ நியாயமற்ற முறையில் ஆண்டுக் கணக்காகச் சிறிலங்காவின் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் அனைவரும் விரைவாக விடுவிக்கப்படவேண்டும்.

★ தமிழர் தாயகப் பிரதேசங்களில் இராணுவதினராலும் பொலீஸாராலும் கைது செய்யப்பட்டுக் காணாமற்போன அப்பாவி மக்களின் நிலையை என்னவென அறியாது பல்லாண்டுகளாகப் பெரும் துன்பதுயரங்களைச் சுமந்து வாழும் அவர்களது உறவுகளுக்கும் எமது மக்களுக்கும் நீதி கிடைப்பதற்காக ஒரு நீதியான சாவதேச விசாரணை நடத்தப்பட்டு உறுதியான தீர்ப்பு வழங்கப்படவேண்டும்.

★ போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளும் கடப்பாடுகளும் முழுமையாக நிறைவேற்றப்பட்டுத் தமிழர் தாயகத்தில் பூரணமான அமைதி நிலையும் இயல்பு நிலையும் ஏற்படுத்தப்படவேண்டும்.

### சர்வதேச சமூகம் செய்யவேண்டியது

★ கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆயுதப் படைகளின் அடாவடித்தனங்களைச் சகித்துக் கொண்டும், சமாதானச் சூழலுக்கு எதுவித பங்கமும் ஏற்படாதவாறு போர்நிறுத்தத்தை இறுக்கமாகவும் உறுதியாகவும் கடைப்பிடித்துக் கொண்டும் சமாதான வழிமுறையில் ஆழமான பற்றுறுதியுடனும் உறுதிப்பாட்டுடனும் விடுதலைப் புலிகள் செயற்பட்டுவருகின்றனர். எனவே, தமிழ்மக்களின் உண்மையான ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் மீது சில நாடுகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்திவரும் தடையை நீக்கி அவர்கள் கௌரவமாகவும், சமநிலையிலும், அதிகாரபூர்வமாகவும் சிறிலங்கா அரசுடன் பேச்சு நடத்துவதற்கான சூழலை சர்வதேச சமூகம் உருவாக்கவேண்டும்.

**மேற்சொல்லப்பட்ட தீர்மானங்களைப் பூரணமாக செயல் வடிவில் சாதிக்கும் நோக்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம்,**

★ தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையை தமிழ் மக்களின் தேசியத் தலைமையாகவும் விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் உண்மையான ஏகபிரதிநிதிகளாகவும் ஏற்றுத் தமிழ்த் தேசிய இனத்தின் சார்பிலான விடுதலைப் புலிகளின் போராட்ட இலட்சியத்துக்கு நேர்மையாகவும் உறுதியாகவும் முழு ஒத்துழைப்பையும் நல்குவோம்.

★ தமிழீழ மக்களது சுதந்திரமான, கௌரவமான, நீதியான வாழ்விற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ் தமிழ் மக்களை சாதி, மத பேதங்களுக்கு அப்பால் ஒரே அணியில், ஒரே தேசமாக அணி திரட்டி உறுதியாக உழைப்போம்.

★ தமிழ் பேசும் மக்களது பாதுகாப்பிற்காகவும் சுதந்திரமான வாழ்விற்காகவும் போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அதன் தலைமைத்துவத்தின் அரசியல் போராட்ட முன்னெடுப்புகளுக்கும் உறுதுணையாக இருந்து செயற்படுவோம்.

### சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில்

★ தமிழ்த் தேசிய இனத்தின் கோரிக்கைகள் தொடர்ந்தும் நிராகரிக்கப்பட்டு, நியாய

(11ஆம் பக்கம் பார்க்க)

பெண்களுக்கு வேலைவாய்ப்பைப் பெறவும் சமமான வேலைக்கு ஆண்களுக்கு சமமான ஊதியத்தைப் பெறவும் உரிமை உண்டு.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான செயற்றிட்டம்
தொ.பே.:011-2662587, 021-2225470.(C/33498)(34)

## ஊர்காவற்றுறையில் ஆலயம் புனரமைப்பு

ஊர்காவற்றுறை நகரிலுள்ள ஆதி வைரவர் ஆலயம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்து கலாசார அமைச்சு வழங்கிய நிதி உதவியை பயன்படுத்தியும் உள்ளூர் பிரமுகர்கள் வழங்கிய நிதியுதவியின் மூலமும் இந்தப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

## நெஞ்சை விட்டகலாத ஓராண்டு நினைவலைகள்



மலர்வு 04 - 06 - 1962

உதிர்வு 13 - 02 - 2003

### திருமதி கார்த்திகேசு இராசாத்தி

(லலி ~ இரத்தினம்)

திதி: 03-03-2004

மனைவியாய் வாழ்வு தந்து
தாயாய் உயர்வு தந்து
எம்மை அன்பால் அரவணைத்த
அன்புத் தெய்வமே!
தாளாத வேதனையில் தவிக்கவிட்டு
போனீர்களேயம்மா!
பாசமான நினைவலைகளுடன்
பரிதவித்து நிற்கின்றோம்!
சொல்ல வார்த்தை இன்றி
சோர்ந்து போய் நிற்கின்றோம்!
ஓராண்டு கடந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சைவிட்டு அகலவே அகலாது.

நாளைய தினம் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*உங்கள் பிரிவால் துயருறும்:*
**கணவர் (இரத்தினம்), பிள்ளைகள்.**

*தற்போதைய வதிவிடம்:*
நீர்வேலி வடக்கு,
குறுக்கு றோட், நீர்வேலி.

நிரந்தர முகவரி:
தச்சந்தோப்பு, கைதடி.

(28989) (26-13-39)

## பாடசாலைகளுக்கு நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்2

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்நத மூன்று பாடசாலைகளுக்கு அண்மையில் ஒரு தொகுதி நூல்கள் வழங்கப்பட்டன.

அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம், கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகாவித்தியாலயம், ஊர்காவற்றுறை புனித மரியாள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நூலக பாவனைக்கென இந்த நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

வடக்கு - கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து வழங்கியிருந்த நூல்களே அண்மையில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகத்தினால் சம்பந்தப்பட் . பாடசாலைப் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டன.

(எ)

## ஆயிரத்து 250 ரூபா சம்பள உயர்வு

வலி.தென்மேற்கு,மார்ச்2

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம், சங்கத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஆயிரத்து 250 ரூபா சம்பள உயர்வை கடந்த ஜனவரி மாதம் முதல் வழங்கி வருகின்றது.

திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு விடுத்திருந்த சுற்றறிக்கைக்கு ஏற்ப இந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் கிகுணரத்தினம் தெரிவித்தார். (எ-135)

## வீதி பலத்த சேதம்

யாழ்ப்பாணம்,மார்ச்2

சுன்னாகம் - கந்தரோடை வீதி பல வருடங்களாக புனரமைக்கப் படாமையால் பாரிய குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

பல வருடங்களாக இவ்வீதி திருத்தப்படாமல் உள்ளதினால் இவ் வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

(எ-ரி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



மலர்வு 1956 - 04 - 11

உதிர்வு 2004 - 02 - 01

### திருமதி நடராஜா புஸ்பராணி

அன்பே உருவான எங்கள் அம்மாவே!
பொன்போலப் பேணி வளர்த்த எங்கள் அம்மாவே!
அப்பா கதறுவதும் ஐயோ என்று நாம் கத்துவதும்
உன் செவியில் விழவில்லையா - நீ
உலகை விட்டே சென்றதென்ன?
இறந்துவிட்டாய் என்ற செய்தி
தலையில் இடி விழ வைத்ததம்மா!

ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (02.03.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*காஞ்சிபுரம் வடக்கு,*
*மாதகல்.* (29097) (26-13-39) **- குடும்பத்தினர்.**

## 9ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 22 - 12 - 1942

இறப்பு 12 - 03 - 1995

### அமரர் குப்புசாமி முருகையா

(உரிமையாளர் லக்சுமிபவான் , புன்னாலைக்கட்டுவன் சந்தி)

திதி: 02.03.2004

அன்பும் பாசமும் ஊட்டி வளர்த்தீர்கள் அப்பா!
பண்புக்கோர் இலக்கணமாய் இருந்தீர்கள் அப்பா!
குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிர்ந்தீர்கள் அப்பா!
இனிய நினைவுகள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் ஒன்பது ஆனாலும்
உங்கள் அன்பொளி அணையவில்லை!
கீர்த்தியுறப் பிரிந்த உங்கள் ஆன்மா
சிவனின் பாதத்தில் சாந்தி அடைவதாக!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (29062-13-39)

*உங்கள் பிரிவால் வாடும்:*
**மனைவி, பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் மாணிக்கதியாகராஜா



நல்லூர், மூத்தவிநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மாணிக்கதியாகராஜா (27.02.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மயில்வாகனம் - தங்கம் ஆகியோரின் அன்பு மகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் தங்கராஜா - சுந்தரத்தின் பாசமிகு சகோதரனும் புவனேஸ்வரி, விமலாதேவி (இந்தியா), சிவராஜா (பிரான்ஸ்), சிமித்திரா (லண்டன்), இராமச்சந்திரன் (பிரான்ஸ்), மனோகரன் (பிரான்ஸ்), வசந்தா, வனிதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தகப்பனும் செல்லத்துரை, கயிலாசநாதர் (இந்தியா), வேவி (பிரான்ஸ்), செல்வராஜா (லண்டன்), அழகரத்தினம் (பிரான்ஸ்), தாமரைச்செல்வி (பிரான்ஸ்), மகேஸ்வரன் (லண்டன்), மகேந்திரன் (பிரான்ஸ்), பிச்சேஸ்வரி - பரமானந்தம் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுமதி - உதயகுமார், காலஞ்சென்ற சுதாநிதி (கனடா) மற்றும் சுதர்சன் - தர்மப்பிரியா (பிரான்ஸ்), துவாரகா (மாணவி, யா/வேம்படி மகளிர் கல்லூரி), சுஜிதா - சுதர்சன் (லண்டன்), சுஜிபா - சுமங்கலா (பிரான்ஸ்), சுஜிராஜன் (லண்டன்), வனஜா, வவிதா (இந்தியா), யோகிதா (லண்டன்), பிரகாஷ், வாகீசன், அஜந்தன், கரிகரன், லஷ்மன், யுவன்சன், அனுஷன், நிரோஷன் (பிரான்ஸ்), ஜெனனி, தர்ஷன் (மாணவர்கள், யாழ்/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்), ரஞ்சனா - சச்சிதானந்தம் ஆகியோரின் பாசமிகு பேரனும் அபிதயா, நிபோஷனன், மிதுஷன், அட்ஷயா, அட்ஷன், டிலக்ஷா, அபிஷன், ஆகாஷ், சரண்யா, சரண்ராஜ், அருண்குமார் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2004) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*215/2, கச்சேரி நல்லூர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (29060)(35-16-18-26)

தகவல்:
M.வசந்தா (மகள்).


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் தனது வெள்ளிவிழாவை ஒட்டி நடத்தும் பிரமாண்டமான மருத்துவக் கண்காட்சி

**மார்ச் 5 முதல் 9 வரை**

## நன்கொடை

எமது பீடம் தனது 25 ஆவது வருடத்தை கொண்டாடும் முகமாக இவ்வருடம் பெப்ரவரி மாதத்திலிருந்து மே மாதம் வரையான காலப்பகுதியில் மருத்துவக் கண்காட்சி, கலாசார நிகழ்ச்சிகள், விஞ்ஞானக் கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்தத் தீர்மானித்துள்ளது. இந்நிகழ்வுகளை நடத்த நலன்விரும்பிகளிடமிருந்து பெரும் நன்கொடைகளை எதிர்பார்க்கிறது.

இந்நிகழ்வுகளை மிகச்சிறப்பாக நடத்துவதற்கு உங்கள் மனப்பூர்வமான ஒத்துழைப்பை நாடி நிற்கின்றது.

உங்கள் கொடுப்பனவுகளை கீழ்வரும் வங்கிக் கணக்கில் இடமுடியும்.

**Dr.A.Senthuran,**
**Treasurer,**
**Silver Jubilee Committee,**
**A/C No. 1 07 060198 2,**
**People's Bank,**
**Jaffna University Branch,**
**Jaffna.**

நன்றி,
செ.சிவஞானசுந்தரம்
தலைவர்,
வெள்ளிவிழா அமைப்புக் குழு.

(சி-33517)(34-13-39-36)

ஊடக அனுசரணை: உதயன்

# அன்றாடம் உடலுக்கு வலுச்சேர்க்க தினமும் உண்ணுவோம் இலைக்கறி!

எமது நாளாந்த உணவில் ஏதாவது ஓர் இலைக்கறி அவசியம் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். உடலின வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் தேவையான உயிர்ச்சத்துக்கள், கனிப்பொருள்கள் என்பன இலைக்கறிகளில் நிறையவே காணப்படுகின்றன. உயிர்ச் சத்து 'சி' மற்றும் இரும்புச் சத்து, கல்சியம், பொஸ்பரஸ் போன்ற போஷணைச் சத்துக்களும் இதில் நிறைய உண்டு.

இரும்புச் சத்தானது எமது இரத்தத்தில் காணப்படும் செவ்வணுக்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகின்றது. உயிரணுக்களுக்குத் தேவைப்படும் பிரதான வாயுவை எடுதது்ச் செல்லவும் உதவுகிறது. இரும்புச் சத்து உடலில் சேரும்போது இரதத்ச் சோகை நோய் ஏற்படாது.

தசை, நரம்பு ஆகிய உறுப்புகள் சமச்சீராகச் செயற்படவும், பற்கள், எலும்புகள் உறுதியாகவும் ஆரோக்கியமுடையதாகவும் இருக்க கல்சியம் பொஸ்பரஸ் தேவைப்படுகின்றன.

பற்கள், பல் ஈறுகள் என்பனவற்றின் உறுதிப்பாட்டுக்கு உயிர்ச் சத்து 'சி' அவசியம். உயிர்ச்சத்துக் குறைபாட்டால் முரசுகரைதல், பல் ஈறுகளில் இருந்து இரத்தம் வடிதல் என்பன ஏற்படுகின்றன. இவற்றைத் தடுக்கவும் தடிமன் வராமல் தடுக்கவும் உயிர்ச் சத்துக்கள் அவசியமாகின்றன.

### இலை மரக்கறிகளும் சமையல் பாகமும்

இலை மரக்கறிகளில் இருந்து மேலே சொல்லப்பட்டவற்றை நாம் இலகுவாகப் பெறமுடியும். இலை களைச் சமைத்து அல்லது சம்பல், பச்சடி செய்து அல்லது பச்சையாகக்கூட உண்ணலாம் ஆனால், எல்லா இலைக் கறிகளையும் பச்சையாக உண்ண முடியாது.

இலை மரக்கறிகளை அதிக நேரம் அடுப்பில் வைத்து அவிப்பதோ அவித்த நீரை வெளியே வடித்து விடுவதோ நல்லதல்ல. அப்படிச் செய்யும்போது அவற்றில் போசணைப பெறுமானம் குறைவடைந்துவிடும்.

இலைகளைப் புதியனவாகப் பயன் படுத்துவதே சிறந்தது. வாடி வதங்கிய இலைகளைப் பயன்படுத்தும் போது அவற்றின் தரம் குறைந்து விடுகின்றது.

சமையல் செய்யுமுன் இலைகளில பூச்சி,புளுக்கள், இல்லாமல் துப்புரவு செய்து, மண் இல்லாமல் கழுவி எடுத்துக் கொள்ளவேண்டும். இலைகள் சிறிது நோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவற்றைப் பாவிக்கக்கூடாது. ஏனெனில், சமையல் செய்யும்போது ஏற்படும் சூட்டினால் கூட அழியாமல் எத்தனையோ நுண்ணுயிர்க் கிருமிகள இலைகளில் காணப்படுகின்றன. எனவே, பாதிப்படையாத நல்ல இலைகளையே பயன்படுத்தவேண்டும்.

வியாபார நிலையங்களில் துப்புரவில்லாத இடங்களில் வைத்து விற்பனை செய்யும் இலை வகைகளை வாங்கக்கூடாது. வியாபாரிகள் நிலத்தில் வைத்தும், சுத்தமில்லாத நீரில் கழுவியும் இலை கறிகளை வைத்து விற்பனை செய்வார்கள். நிலத்திலும், அழுக்கு நீரிலும் காணப்படும் நோய்க கிருமிகள் இலகுவில் எமது உடலில சேர்ந்துவிட அவை வழிசெய்யும்.

எனவே, எமக்குத் தேவையான இலைகளை நாமே வீட்டுத் தோட்டத்தில் வைத்து உற்பத்தி செய்துகொள்ள முடியும் இதற்கு அதிக முதலீடு கூடத் தேவையில்லை. இலகுவாக எப்பொழுதும் உற்பத்தி செய்யலாம் வருடம் முழுதும் தேவையான பொழுது புதிய பொருளகளாக அறுவடை செய்யலாம். அதிக பராமரிப்பு, இடவிஸ் தீரணம் கூடத் தேவையில்லை..

### இலை மரக்கறி வகைகள்

சிறுகீரை பொன்னாங்காணி, வல்லாரை, பசளி, கங்குண் அகத்தி, முருங்கை, குறிஞ்சா, முல்லை, முசுட்டை, தூதுவளை, தவசி முருங்கை, மொசுமொசுக்கை, கறிவேப்பிலை, கொடித் தோடை இலை, பூசணி இலை, வற்றாளை - இப்படி எத்தனையோ சமைகக் கூடிய இலை மரக்கறிகள் உள்ளன.

இவற்றைவிடப் பருவ மழையின் போது தாமாகவே முளைக்கும் குப்பைமேனி, தகரை, குப்பைக்கீரை, கரிசலாங்கண்ணி, முட்கொத்தான் போன்றவையும் சமைக்கக்கூடியவையே. மக்களைப் பாதிக்கக்கூடிய பல நோய்களைக் குணப்படுத்தக் கூடிய சக்தி இயற்கையாகவே இவற்றில் காணப்படுவதாக உள்ளூர் வைத்தியர்கள் கூறுகின்றனர்.

எனவே, இத்தகைய சிறப்புமிக்க இலைக்கறி வகைகளில் சிலவற்றின் தன்மையை இங்கே தருகிறோம்.

★சிறுகீரை:- இது குளிர்ச்சித் தன்மை பொருந்தியது. புரதம், இரும்புச்சத்து கரோற்றின், உயிர்ச்சத்து 'சி' என்பன இவற்றில் காணப்படுகின்றன. இக்கீரையை உண்பதன்மூலம் உடல் அழகு பெறும். கண்புகைச்சல், பித்தம் என்பன நீங்கும்.

★ அகத்திக்கீரை:- வயிற்றுக் கோளாறுகளை நீக்கவும், பித்தத்தைக குறைக்கவும் செய்யும் தன்மை கொண்ட அகத்திக் கீரையில் புரதம், கல்சியம, கரோற்றின், உயிர்ச்சத்து 'சி' என்பன உண்டு.

பசளிக்கீரை:- பருப்புடன் சேர்த்து இக்கீரையைச் சமைத்தால் மிக்க சுவையாக இருக்கும் இரத்தச் சோகை, நீரடைப்பு, வாந்தி, சிறுநீர்க் கோளாறு என்பவற்றை நீக்கும் தன்மைகொண்டது. புரதம், கல்சியம், இரும்புச்சத்து, உயிர்ச்சத்து 'சி' என்பன இவற்றில் காணப்படுகின்றது.

★முளைக்கீரை:- இதில் இரும்பு, சுண்ணாம்பு, புரதச்சத்துக்கள் காணப் படுகின்றன. முளைக் கீரையை உண்பதால் கண்பார்வை கூர்மையடையும். பசி ஏற்படும். மந்தத்தை நீக்கும், காசநோயாளர், பலவீனப்பட்டவர்களுக்கு இது உகந்தது.

★ வல்லாரை:- புரதம், இரும்பு, கரோற்றின், கல்சியம், நிறைந்தது. உடல் சூட்டைத் தணிக்கவல்லது. பச்சையாக சம்பல் பச்சடி என்பன தயாரித்து உண்ணலாம்.

★ முருங்கை இலை:- இதனை இலகுவாக எங்கும் பெறலாம் கல்சியம், இரும்பு, கரோற்றின், உயிர்ச்சத்து நிறைய உண்டு. காயங்களைக் குணப் படுத்தும் சக்தி இதற்கு உண்டு.

★ பொன்னாங்காணி:- இரும்பு, சுண்ணாம்பு, உயிர்ச்சத்து'ஏ' நிறைந்தது. கண், மண்ணீரல் கோளாறுகளையும் உடல் சூட்டையும் குறைக்கும்.

★கறிவேப்பிலை:- இதில் கூடுதலான புரதம், கல்சியம் என்பன உண்டு. இரும்பு, கரோற்றீன் என்பனவும் உண்டு. கறிகளை வாசனையுடையதாக இதனைப்பாவிக்கலாம்.

- நிறைமுனைவன் -

★வற்றாளை:- புரதம், கல்சியம், கரோற்றின் இதில் உண்டு. இரும்புச் சத்து கூடுதலாக உண்டு. இந்த இலைகளை வறுத்தும் பருப்புடன் சேர்த்தும் சமையல் செய்தால் சுவையாக இருக்கும்.

★முடக்கொத்தான்:- இது வாதப் பிடிப்பு, உளைவு நோய்களைக் குணப படுத்தும் வறுத்தும் சாப்பிடலாம் அல்லது சொதி, ரசம் வைத்தும் உண்ணலாம். குடிநீருக்கும் சேர்க்கலாம்.

இலைக்கறிகளைக் கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள அவசியம் சாப்பிடவேண்டும். தாய்ப் பால் சுரக்கவும், தாய்ப்பால் வெளியேறுவதால் ஏற்படும் போஷணைகளை ஈடுசெய்யவும் இவை பயன்படும்.

இலை மரக்கறிகளை விரும்பி உண்ணப் பழக்கிக்கொண்டால் உடல் ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் உயிர வாழ முடியும்.




# அரிசிச் சோற்றுக்கு நிகரானது சோளம்



உலகின் இரண்டாவது தானியப் பயிராகச் சோளம் விளங்குகிறது. அமெரிக்காவிலும் சில ஐரோப்பிய நாடுகளிலும் சோளம் அதிகமாகச் செய்கை பண்ணப்படுகின்றது. இலங்கையில் இது பெரும்பாலும் விலங்கு உணவாகவே பயன்படுத்தப்படுகின்ற போதும் உலகின் பல பாகங்களிலும சிறந்த உணவுப்பொருளாகவும் பயன் படுத்தப்படுகின்றது. சோளத்தில் உள்ள சத்துப்பொருள்கள் அரிசியில் உள்ள சத்துப்பொருள்களுக்குக் குறைந்தனவல்ல.

சோளம் பொத்திகளில் இருந்து விதைகளை நீக்கிச் சுத்தம்செய்து அரிசியைப்போல் சோறு சமைத்துச் சாப்பிடலாம். இதனைவிடப் பிட்டு, கேக், றொட்டி, சத்துமா போன்ற உணவுப் பொருள்களையும் தயாரிக்கலாம்.

## அதைப் பயிரிட்டால் அதிகம் இலாபம்

### பயிர்ச்செய்கை

பெரும்போகத்தின்போது மழை வீழ்ச்சியும் காலநிலைக்காரணியும் சாதகமாக உள்ள மேட்டுநிலங்களில் மானாவாரியாகச் சோளம் பயிரிடப் படலாம். பயிர்வளர்ச்சிக் காலத்தில் குறைந்தது 500மி.மீ. - 600மி.மீ. மழைவீழ்ச்சி இருத்தல்வேண்டும்.

வரட்சிக் காலத்தின் போது நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் சிறு போகமாகவும் சோளம் பயிரிடலாம்.

நீர்வடிந்து செல்லும் ஆழமான மண் இப்பயிர்ச்செய்கைக்கு ஏற்றது. நீர்தேங்கி நிற்கும் தரைகளில் வளரும போது வளர்ச்சி குறைவதுடன் இலைகளும் மஞ்சள் நிறமடையும்.

### இனங்கள்

சோளத்தில் பத்ரா-1, ரி-48, தாய்க கொம்பசின் போன்ற இனங்கள் சிபார்சு செய்யப்பட்ட இனங்களாகும்.

அண்மையில் திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்தால் 'ஹைபிரட்' (கலப்புப்பிறப்பு) என்ற சோள இனம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நிலத்தைப் பண்படுத்தாது நடுகைக்கிடங்கில் உரப்பசளையையும் விதையையும் இட்டுப் பயிர்செய்யலாம். மூலதனச் செலவு அதிகமின்றி உச்சவிளைச்சலைப் பெற இந்தமுறையில் சோளம் செய்கை பண்ணலாம்.

பெரும்போகம் செப்ரெம்பர் மாத இறுதியிலிருந்து ஒக்ரோபர் மாத ஆரம்பம் வரையும் சிறுபோகம் மார்ச் மாதப் பிற்பகுதியிலிருந்து ஏப்ரல் ஆரம்பம் வரையும் மேற்கொள்ளலாம்.

விதைகள் 2 செ.மீ. ஆழத்தில் கைகளால் அல்லது விதையிடும் கருவிகளால் நடப்படலாம்.

4-6 நாள்களில் விதைகள் முளைக்கும். நிலையத்தில் சிபார்சு செய்யப் பட்ட எண்ணிக்கையில் தாவரங்களை விட்டு ஏனையவற்றைப் பிடுங்கி ஐதாக்க வேண்டும்.

நடுகைக்கு முன்னர் அடிக்கட்டுப் பசளையாக யூரியா 50 கிலோகிராம், ரி.எல்.பி 100 கிலோகிராம் எம்.ஓ.பி. 50 கிலோகிராம் இடவேண் டும்.

மேற்கட்டுப் பசளை நட்டு 4 வாரங்களின் பின் ஹெக்டேயருக்கு 100 கிலோகிராம் யூரியா இட வேண்டும்.

சோளப்பயிருக்கு நீர்ப்பாசனம் அவசியம் வேண்டும். விதை முளைத்து 50-60 நாள்களில் போதியளவு நீர்த் தன்மை வேண்டும். நீர்ப்பற்றாக் குறை இருப்பின் பொத்திகளின் பருமன் குறையும்.

நட்டு 2-4 வாரங்களில் கையால் களைகட்டலாம் விதைமுளைக்க முன் களைகொல்லிகளைப் பயன் படுத்தலாம்.

### நோய்த்தாக்கம்

தண்டுதுளைப்பான், பொத்திதுளைப்பான், இலைப்புள்ளி நோய்களால் சோளம் பாதிக்கப் படுகிறது.

இந்நோய் தாக்கங்களிற்கு உரிய கிருமிநாசினிகளை அளவோடு பயன் படுத்தி நோய் பூச்சித் தாக்கங்களைக் கட்டுப்படுத்தலாம்.

விதைகள் நன்கு முதிர்ச்சி அடைந்ததும் அறுவடைசெய்தல் வேண்டும்.

**தயாமதி**

| | புரதம் | மாப் பொருள் | கொழுப்புச் சத்து | நார்ப் பொருள் | கனிப் பொருள் |
|---|---|---|---|---|---|
| தீட்டல் அரிசி (கி. கிராம்) | 6.3 | 78.2 | 0.4 | 0.3 | 1.6 |
| சோளம் (கி. கிராம்) | 7.3 | 73.8 | 4.0 | 1.2 | 1.0 |

## ரயில் கட்டண உயர்வு இன்றுமுதல் சமநிலை

குறுகிய தூர ரயில் கட்டணங்கள், நெடுந்தூர ரயில் கட்டணங்கள் ஆகியவற்றில் இன்று முதல் 50 சதவீத உயர்வே அறவிடப்படுமென ரயில்வே அதிகார சபை தெரிவித்திருக்கின்றது.

ரயில்வே சீசன் டிக்கட் கட்டணமும் இன்று முதல் 50 சதவீதமாக சமப்படுத்தப்பட்டுள்ளது. குறுகிய தூர கட்டணங்கள் 60 சதவீதமாகவும் நெடுந்தூர கட்டணங்கள் 50 சதவீதமாகவும் அதிகரிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. (ஐ)

## முகப்பு மண்டபம் நிர்மாணிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்2

திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் புதிதாக முகப்பு மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுவருகிறது.

மேற்படி ஆலயத்திற்கு பஞ்சதள ராஜகோபுரம் ஒன்று அண்மையில் நிறுவப்பட்டமை தெரிந்ததே. (எ)

## விருது வழங்கிக் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்2

சுழிபுரத்தைச் சேர்ந்த ஓதுவார் மு.கிருஷ்ணபிள்ளை 'கலைவாரிதி' என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையால் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

சைவ ஆலயங்களில் திருமுறை ஓதுவதில் இவர் பணியாற்றி வந்தார் எனக் கூறப்பட்டது. (எ-9-28)

## புளியங்கூடலில் தையல் பயிற்சி

யாழ்ப்பாணம்,மார்ச்2

வடக்கு-கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை புளியங்கூடலில் தையல், மனையியல் பயிற்சி நிலையமொன்றை ஆரம்பித்துள்ளது.

சுமார் 40 இற்குமேற்பட்ட யுவதிகள் இந்நிலையத்தில் இணைந்து பயிற்சி பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

# வீமன் அனுஷ்டித்து பேறுபெற்ற வீம ஏகாதசி விரதம் இன்று

காத்தற் கடவுளான ஸ்ரீமந்நாராயண மூர்த்தியானவர் ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் பொருட்டு பத்து அவதாரங்களை எடுத்து அருளியுள்ளார். அவற்றுள் ஒன்றுதான் கூர்ம அவதாரமாகும். கூர்மம் என்பது ஆமையாகும். தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைகின்றபோது மந்திர மலையை சாயவொட்டாமல் ஆமை வடிவெடுத்து தனது முதுகில் தாங்கிக்கொண்டார். அன்றைய தினமே ஏகாதசியாகும். அப்படிக்கடைகின்ற போது மகா இலக்குமி அவதரித்தது மறுநாள் துவாதசி தினத்திலாகும். இவ்வாறான அவதார மகிமை வாய்ந்த ஏகாதசியையும் அதன் அங்கமாகிய துவாதசி திதியையும் தேவர்கள், பூலோக மாந்தர்கள் அனைவரும் பகவான் கட்டளைப்படி பக்திபூர்வமாக அனுஷ்டித்து வந்தார்கள்.

துவாபரயுகத்தில் வாழ்ந்த கௌரவர்களும், சகுனி, பீஷ்மர், விதுரர் போன்ற அனைத்துப் பெரியோர்களும் அனுஷ்டித்து வந்தனர். வீமனைத் தவிர பாண்டவர்கள், அவர்கள் மனைவியர், குந்திதேவி அனைவரும் அனுஷ்டித்து வந்தனர்.

வீமனைப் பார்த்து துரியோதனன், சகுனி முதலானோர் "பெருந்தீனிக்காரரான நீவிர் எப்படி ஏகாதசி விரதத்தை அனுஷ்டிக்க முடியும்?" என்று பரிகாசம் செய்து வந்தனர். கேலிப் பேச்சைத் தாங்கிக்கொள்ள முடியாத வீமன் இவ்விரதம் எப்படியாவது ஒரு முறையாவது அனுஷ்டிக்கவேண்டும் என்ற முடிவுடன் இதற்கு ஒரு வழி தேடி வியாசமுனிவரிடம் சென்றான்.

வியாசமுனிவரும் வீமனை வரவேற்று இருக்கையில் அமர்த்தி உபசரித்து வீமனிடம் அவன் வந்த காரணத்தைக் கேட்டறிந்தார்.

"முனிவர் பெருமானே! வருடந்தோறும் வருகின்ற பன்னிரு மாதங்களிலும் வருகிறதான இருபக்ஷத்து ஏகாதசிகளுமாக இருபத்து நான்கு ஏகாதசிகளையும் என்னால் நோற்க முடியாதவனாக இருக்கின்றேன். எனவே, பன்னிரு மாதங்களிலும் நோற்ற பலனை - ஏகாதசிகளின் - பலனை ஏதாவது ஒரு மாதத்தில் நோற்று அத்தகைய பலனை முழுமையாக அடைவதற்குத் தாங்கள் தான் ஓர் உபாயங் கூறுங்கள்" என்று வேண்டினான்.

இதனைக் கேட்ட வியாச முனிவர் வீமனைப் பார்த்து "குழந்தாய்! மாசி மாதத்திலே வளர்பிறையில் வரும் ஏகாதசியை அனுஷ்டிப்பதன் மூலம் இருபத்து நான்கு ஏகாதசிகளையும் அனுஷ்டித்த பலனை நீவிர் அடைய முடியும்" என்று கூறி விரதம் அனுஷ்டிக்கும் முறையையும் கூறி வீமனை அனுப்பிவைத்தார்.

வீமனும் முனிவரிடம் அனுமதி பெற்று தனது நகரையடைந்து மாசி மாதத்து பூர்வபக்ஷத்து ஏகாதசியை முனிவர் கூறியபடி அனுஷ்டிக்கத் தொடங்கினான்.

அன்றைய தினத்தில் வீமன் காலைக்கடன்களை எல்லாம் முடித்த பின்னர் அவனுக்குப் பெரும் பசியுண்டாகியது. அவன் ஒரு சோலையை அடைந்து அங்குள்ள வாழைப்பழங்களையும், மாம்பழங்களையும், பலாப் பழங்களையும், கரும்புக் கட்டுக்களையும், இளநீர்க் குலைகளையும் ஆயிரக கணக்கில் எடுத்து அருந்தினான். அப்படியும் அவனது பசி தணியாமையினால் நூற்றுக்கணக்கான குடங்கள் பாலையும் குடித்து ஒருவாறு பசிதணியப்பெற்றான்.

**பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு**
**ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயம்,**
**வல்லிபுரம்.**

அதன்பின், மாலையானதும் அவன் மாலைக் கடன்களை முடித்து மண்டபத்தை சுத்தம் செய்து மாவிலை தோரணங்களைக் கட்டி, கும்பம் வைத்து, திருமாலின் திருவுருவத்தை ஸ்தாபித்து, ஆவாகனம் செய்து, அபிடேகம் செய்து, சந்தனம், துளசி, மலர், சாத்தி, அருட்சித்து, தூப தீபங்காட்டி வழிபட வேண்டும். அன்றிரவு முழுவதும் நித்திரையின்றி மறுநாள் அதிகாலையில் நித்தியக்கடன்களை முடித்து விஷ்ணுவைப் பூசித்து திருவமுது நிவேதித்தல் வேண்டும். தொடர்ந்து சோடோபசார பூசை செய்து அஷ்டாகஷரத்தை உச்சரித்துப் பின் பிராமணர்களுக்குத் தானம் வழங்கி, துவாதசியில் விதிப்படி பாராயணஞ் செய்யத்தொடங்கியபோது அவனது மிடறு உலர்ந்தமையினால் விக்கலுண்டானது. அவன் நெய் கலந்த அன்னத்தை முதலில் உண்டு பால், மோர் முதலியவற்றை அருந்தி மிடறை நனையச்செய்து, அதனை வயிறாரப் போசனமுண்டு விரதத்தை முடித்துக்கொண்டான்.

அன்று முதல் மாசி மாதத்தில் பூர்வ பக்ஷத்து ஏகாதசி வீம ஏகாதசி என்று வழங்கப்பட்டு வரலாயிற்று. வீமசேனனால் அனுஷ்டிக்கப்பட்ட இவ்விரதத்தை அனுஷ்டிப்போர் சகல விதமான பாவங்கள், துன்பங்களினின்று விடுபட்டு இம்மையில் நற்பேறுகளைப் பெற்று மறுமையில் நற்கதியடைவர் என்பது திண்ணம். வியாசமுனிவரின் வாக்குப்படி பன்னிருமாதங்களிலும் வரும் ஏகாதசிகளை அனுஷ்டித்துப்பெறும் பலன்களை வீமன் அனுஷடித்துப் பேறு பெற்றது போல நீங்கள் அனைவரும் இவ்வீம ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து நற்கதியடையுங்கள். ★

## கோப்பாய்தெற்கில் தொடரும் திருட்டு

கோப்பாய்,மார்ச்2

கோப்பாய் தெற்கு மாதா கோயிலடியைச் சூழவுள்ள பகுதியில் கடந்த சில தினங்களாக திருடர் குழுவொன்று பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுவருவதாகப் பொதுமககள் தரப்பில் கூறப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை இரவு வீடொன்றினுள் நுழைந்த திருடர்கள் சாறி வகைகள், ஒரு தொகை ரொக்கப் பணம் என்பவற்றையும் - இன்னொரு வீட்டில் தாலிக்கொடி மற்றும் ஒரு தொகைப்பணம் என்பவற்றையும் திருடிச்சென்றுள்ளனர்.

(எ-72)

## இத்தாலிக்கு செல்லவிருந்த 17 பேர் கைது!

கொழும்பு,மார்ச்2

இத்தாலிக்குச் சட்டவிரோதமாகப் புறப்படவிருந்த 17 பேரை சிலாபம் பொலீஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

வடக்கு - கிழக்கைச் சேர்ந்த இவாகள் இத்தாலி செல்லத்தயாராவதாகக் கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் சிலாபம் பொலஸார் மாதம்பையில் உள்ள வீடு ஒன்றைச் சோதனை செய்தனர்.

அங்கிருந்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த இளைஞர்கள்.

(ம-3)

## இனந்தெரியாதோரால் கரபந்தாட்ட வலை சேதமாக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,மார்ச்2

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கட்டப்பட்டிருந்த கரபந்தாட்ட வலை இனந்தெரியாதோரால் வெட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரத்தில் ஒருநாள் தமது பயிற்சியை முடித்துவிட்டு மாலை 6மணிக்குச் சென்ற பின்னர் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் அண்மைக் காலமாக மேற்படி பாடசாலையில் இடம்பெற்று வருவதாகவும் பெற்றோர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(-10)


## தேவை

பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் இயங்கும் நிறுவனமொன்றிற்கு Photo copy, Binding, Computer Typesetting முழுநேர, இரவுநேர வேலைசெய்வதற்கு அனுபவமுள்ளவர்களும் பழகவிரும்புபவர்களும் தேவை. சுயவிவரத்துடன் விண்ணப்பப்படிவங்களை 07.03.2004இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

(திறமையுள்ளவர்கள் மாதமொன்றிற்கு 5000/= ரூபாவிற்கு மேல் வருமானம் ஈட்டலாம்)

விளம்பர இல.: 2185,
(29104) மே/பா உதயன். (26-14-16)



## இலக்கிய நூல்களுக்கான பரிசுத்திட்டம் - 2003

வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு உட்பட்ட 8 மாவட்டங்களையும் சேர்ந்த எழுத்தாளர்களிடமிருந்து இலக்கிய நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்திற்கு நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

பின்வரும் துறைகளில் போட்டிகள் இடம்பெறும்.

01. நாவல்
02. சிறுகதை
03. கவிதை
04. நாடகம்
05. சிறுவர் இலக்கியம்
06. இலக்கிய ஆய்வும் விமர்சனமும்
07. உயர்கல்விக்கான நூல்கள்

மேற்காட்டப்பட்ட துறைகளைச் சாராத நூல்களையும் போட்டிக்கு அனுப்பி வைக்கவும்.

**போட்டி விதிகள்**

01. ஓர் எழுத்தாளர் எல்லாப் போட்டிகளிலும் கலந்துகொள்ளலாம்.
02. பங்குபற்றும் எழுத்தாளர் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட 8மாவட்டங்களில் ஒன்றைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
03. நூல்கள் 2003ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் அச்சில் வெளிவந்ததாக இருத்தல் வேண்டும்.
04. போட்டியாளர்கள் ஒவ்வொரு போட்டிக்கு நூல்களை அனுப்பும்போது நான்கு பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.
05. போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும். நூல் பிரதிகளை அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் ஜூன் 15ஆம் திகதிக்கு முன்னர்

உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு,
திருகோணமலை.

என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஆர்.தியாகலிங்கம்,
செயலாளர்.

(C/33518) (26-14-16)


# வாசகர் திருமுகம்

## பஸ்சேவை சீராகுமா?

மீசாலை, சங்கத்தானை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் இருந்து யாழ்ப்பாணம், திருநெல்வேலி தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள், ஊழியர்கள் இ.போ.ச. பருவகாலச் சீட்டைப் பெற்றி ருந்தும் இ.போ.ச. பஸ்சேவை தினசரி ஒழுங்காக இடம்பெறாமையால் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

காலை 6.15 மணிக்கு கொடிகாமத்திலிருந்து புறப்பட்டுவரும் 769 பாதை இலக்கப்பேருந்து நாளாந்தம் ஒழுங்காக வருவதில்லை. அதனைத் தொடர்ந்து 7.15 மணிக்குவரும் பாடசாலைப் பேருந்து சீருடை அணிந்த மாணவர்களை மட்டும்தான் ஏற்றுகிறது. பருவகாலச் சீட்டுடைய ஏனையோரை ஏற்ற மறுத்துக் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களுடனேயே செல்கிறது. இதனால் யாழ்.செல்லும் பல்கலை மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள் பெரிதும் ஏமாற்றமும் கஷ்டமும் அடைகின்றனர்.

இதுகுறித்து இ.போ.சபை கோண்டாவில் அலுவலகத்தில் பலமுறை தெரிவித்தும் பலன் ஏற்படவில்லை!.

கொடிகாமத்திலிருந்து ஒழுங்காகக் காலைப்பேருந்து சேவையை நடத்தும்படியும், பாடசாலைச் சேவையிலும் பல்கலை மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி மாணவரை ஏற்றும்படியும் உத்தரவிட யாழ்.இ.போ.ச. அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுப்பார்களா?

*சாவகச்சேரி.* - எம்.எல்.விநோதன்

## அரச ஊழியர்கள் அனைவரும் வாக்களிக்கத் தவறக்கூடாது!

இலங்கைத் திருநாட்டின் பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 02.04.2004இல் நாடு முழுவதிலும் நடைபெறவுள்ளது. இதில் வாக்களித்து தமிழரின் அபிலாஷைகளை வெளிப்படுத்த வேண்டியது தன்மானமுள்ள தமிழரின் கடமையாகும்.

அரச ஊழியர்கள் தேர்தல் கடமையில் ஈடுபடுவதால் அவர்கள் தேர்தல் தினத்தில் வாக்களிப்பதென்பது கடினமான காரியமாகும். எனவே, தேர்தல் கடமையில் ஈடுபடும் அரச ஊழியர்கள் தபால் மூல வாக்களிப்புக்கு உரிய விண்ணப்பப்படிவத்தை உரியமுறையில் நிரப்பி, உரிய திணைக்களத்தில் ஒப்படைத்து பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு பத்து நாள்களுக்கு முன்னர் அறிவிக்கப்படும் திகதியில் அறிவிக்கப்பட்ட இடத்தில் தபால்மூல வாக்களிப்பை அளிக்கவேண்டும்.

கடந்த தேர்தல்களில் மேலதிகாரிகளின் அசமந்தப் போக்கால் தபால மூல வாக்களிப்பு விண்ணப்படிவம் அரச ஊழியர்கள் பலருக்குக் கிடைக்கவில்லை. (கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த சிலரும் தபால்மூல வாக்களிப்பைத் தவறவிட்டவர்களாவர்.) அரச ஊழியர்கள் தேர்தல் கடமையின் பொருட்டுச் சென்றுவிடுவதால் தபால்மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்காமல் இருந்தும் வாக்களிப்பு உரிமையை இழந்துவிடுவார்கள்.

இம்முறை தபால்மூல வாக்களிப்பு விண்ணப்பம் அரச ஊழியர்கள் கையில் கிடைத்துள்ளது. சில அரச ஊழியர்கள் படிவத்தை நிரப்பித் தமது திணைக்களத்தில் ஒப்படைத்துள்ளார்கள். மேலும் பலர் படிவத்தை ஒப்படைக்க உள்ளார்கள். சில படிவங்கள் தேர்தல் மாவட்ட இலக்கம், வாக்காளர் இடாப்பு, தொடர் இலக்கம் என்பன நிரப்பப்படாமையால் நிராகரிக்கப்பட்டுள்ளன. வேறுசிலர் படிவங்களை நிரப்பாதும் ஒப்படைக்காதும் இருக்கிறார்கள்.

தபால்மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 01.03.2004 இல் முடிவடைந்துள்ளது. எனவே, தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பம் ஒப்படைக்காத அரச ஊழியர்களும் தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட அரச ஊழியர்களும் தமது பிரதேச செயலகத்திலோ அல்லது கிராமசேவகர் அலுவலகத்திலோ வாக்காளர் இடாப்பினைப் பார்வையிட்டு தேர்தல் மாவட்ட இலக்கம், வாக்காளர் தொடர் இலக்கம் என்பவற்றை அறிந்து விண்ணப்படிவத்தை உரியமுறையில் நிரப்பி, உரிய நேரத்தில், உரிய இடத்தில் ஒப்படைத்துத் தமது பொன்னான வாக்குகளை அளித்து தமது அபிலாஷைகளை வெளிப்படுத்தவேண்டும்.

- து.தவசீலன்


## முதலாம் வருட நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம் 16 - 01 - 1948



மறைவு 14 - 02 - 2003

*காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன ஓய்வுபெற்ற ஊழியர்*
கந்தசாமி *அவர்களின் அன்பு மனைவி*

**திருமதி கந்தசாமி சந்தணம்**

ஓராண்டு இன்று ஓடியே போனதம்மா!
நீராண்ட வீடு களையிழந்து போச்சுதம்மா!
இன்று உங்களை நினைந்தே நாமிங்கு துடிக்கின்றோம்.
ஆத்மா சாந்திபெற ஆண்டவனையே வேண்டுகின்றோம்.

இன்று (02.03.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குகொண்டு ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அரசடி வீதி,*
*சுதுமலை கிழக்கு,*
*சுதுமலை.*

நி.முகவரி:
*மாவை கலட்டி,*
*தெல்லிப்பழை.*

- குடும்பத்தினர்.

(29055)(34-14-16-26)

# நாடாளுமன்றத் தேர்தலைச் சரியாகப் பயன்படுத்தி தென்னிலங்கை மீதான அழுத்தத்தை அதிகரிக்கலாம்

## வேட்பாளர் சி.வி.கே.சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்2

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்வதன் மூலம் தென்னிலங்கை மீதான சர்வதேச அழுத்தத்தை அதிகரித்துக் கொள்ளமுடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர்களில் ஒருவரான சி.வி.கே.சிவஞானம்.

நேற்றுமுன்தினம் யாழ். வணிகர் கழக அலுவலகத்தில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வணிகர் கழகங்களின நிர்வாகிகள் மற்றும் வர்த்தகர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

சி.வி.கே.சிவஞானம் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எமது இனத்துக்கான உரிமைகளிலும் விடுதலை இலட்சியத்திலும் எந்த விதமான விட்டுக் கொடுப்புகளும் இன்றி விடுதலைப் புலிகளும் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துகொள்வதற்குத் தயக்கம் காட்டமாட்டார்கள் என்பதை சர்வதேச சமூகத்திற்குத் தெளிவாகச் சொல்வதற்காக இந்தத் தேர்தலை நாங்கள் பயன்படுத்த வேண்டும்.

எமது பிரச்சினையானது இப்போது சர்வதேச மயப்பட்டிருக்கிறது. சர்வதேச நாடுகள் பலவும் எமது விடுதலைப் போராட்டத்தையும் விடுதலைப் புலிகளையும் உணரத் தொடங்கியிருக்கின்றன.

எங்களுடைய இனப்பிரச்சினைக்குச் சிங்கள தேசம் உரிய தீர்வினை வழங்கும் என்ற நம்பிக்கை எமக்கு அற்றுப் போய்விட்டது.

இதே உண்மையினை இப்போது சர்வதேசம் உணரத்தொடங்கியிருக்கிறது.

விடுதலைப் புலிகள் ஒருபோதும் பேச்சு மேசைக்கு வரமாட்டார்கள். அவர்கள் வன்முறைப் பாதையிலிருந்து விலகிப் போவதை விரும்பார்கள் என்ற கருத்துக்களைக் கொண்டிருந்த சர்வதேசம் இப்போது உண்மையை உணரத்தலைப்பட்டிருக்கிறது. இந்த நிலையில்தான், தேர்தல் எம்முன்னால் வந்திருக்கிறது.

இந்தத் தேர்தலை நாங்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்வதன் மூலம் தென்னிலங்கை மீதான சர்வதேச அழுத்தத்தை அதிகரித்துக் கொள்ளமுடியும்.

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் ஜனநாயகத்துக்கு விரோதமானவர்கள் அல்லர் என்ற கருத்து இந்தத் தேர்தலில் நிரூபிக்கப்படப்போகிறது. அனைத்து ஆசனங்களும் தமிழ்க் கூட்டமைப்புக்கே கிடைக்கக்கூடிய வகையில் மக்கள் வாக்களிக்கவேண்டும். இது ஒவ்வொரு தமிழ் மக்களினுடைய தலைவிதியையும் நிர்ணயிக்கின்ற தேர்தல் என்று கூடச்சொல்லலாம்.

எனவே, இந்தத் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்புப் பூரண வெற்றியினைப் பெறுவதற்கு அனைத்துத் தரப்பினரும் தம்மாலான பங்களிப்பை வழங்க வேண்டும் - என்று தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் உரையாற்றிய மற்றொரு வேட்பாளரான செ.கஜேந்திரன் தனது உரையில் தெரிவித்ததாவது:-

தமிழர் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்து, தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை நசுக்க முயலகின்ற துரோகக் கும்பல்கள் இந்தத் தேர்தலில் ஓர் ஆசனத்தைக் கூடக் கைப்பற்றிவிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது அனைத்துத் தமிழ் மக்களினதும் கடமையாகும். தமிழர் விடுதலைப் போராட்டம், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்குமான உறவு போன்ற விடயங்கள் தொடர்பாக இன்று சர்வதேச நாடுகள் ஓரளவுக்குப் புரிந்து கொண்டிருக்கின்றன.

இருந்தாலும், அந்தக் கருத்தை சர்வதேசத்துக்குத் தெளிவாக விளக்குவதற்கு எதிர்வரும் பொதுத்தேர்தலைத் தமிழ்மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் - என்றார்.






யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தூயவன் ஆகியோரும் இதில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

(ம-4-ரி)

## முக்கிய அரசியல் பிரமுகர்களுக்கு குண்டு துளைக்காத வாகனங்கள்

கொழும்பு,மார்ச்2

வடக்கு - கிழக்கு மற்றும் வன்செயல்கள் அதிகரித்த இடங்களில் தேர்தல பிரசாரத்தில் ஈடுபடவுள்ள சில முக்கிய அரசியல் கட்சிகளின் பிரமுகர்களுக்கு, அவர்களின் பாதுகாப்புக் கருதிக் குண்டு துளைக்காத வாகனங்கள், குண்டு துளைக்காத பாதுகாப்பு உடைகளை வழங்கப் பாதுகாப்புப் படையினர் தீர்மானித்துள்ளனர்.

சில அரசியல் கட்சிகளால் தமக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகளையடுத்தே தாம் இம் முடிவினை எடுத்துளளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், குறித்த அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புப் பிரிவினரின எண்ணிக்கையை மேற்குறித்த பிரதேசங்களுக்கு அவர்கள் செல்லும்போது மேலும் இருமடங்காக அதிகரிக்கவும் தட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

(ம-8)

## சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்தால் யுத்தம் ஏற்பட வாய்ப்பளிக்கப்படமாட்டாது

கொழும்பு,மார்ச்2

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்தால் மீண்டும் யுத்தம் ஏற்பட வாய்ப்பளிக்கப்படமாடாது என அம்முன்னணியின் இணை அமைப்பாளர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொ.ஐ.முவினால் 1994ஆம் ஆண்டு ஆரம்பித்த சமாதானப் பேச்சுக்கள் தோல்வியடைந்தன. அந்த அனுபவதுடன் இம்முறை மீண்டும் விடுதலைப புலிகள் இயக்கத்துடன் வெற்றிகரமான பேச்சுக்களை நடத்தமுடியும். எந்த அரசுடனும் பேச்சுக்களை நடததத் தயார் எனப் புலிகள் அறிவித்துள்ளனர். மீண்டும் யுத்தத்துக்குச் செல்லப் போவதில்லை எனவும் புலிகள் கூறியுள்ளனர். இக் கொள்கையை ஐ.ம.சு. கூட்டமைப்பு மதிக்கிறது - இப்படி அவர் மேலும் கூறினார்.

(ம-9-ரி)

# தன்னாதிக்கமுள்ள சுயாட்சியைப் பெற தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்துங்கள்

## யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கோரிக்கை

"தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்தவும், தன்னாதிக்கமுள்ள, சுயாட்சி அமைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான முன்னெடுப்பை மேற்கொள்ளவும் வீட்டு சின்னத்துக்கு எதிரே புள்ளடியிடுவதன் மூலம் தமிழ்மக்கள் தமது அரசியலை வலுப்படுத்தவேண்டும்"

யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மேற்கண்டவாறு கூறினார்.

வலிகாமம் பிரதேசத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டமும் வேட்பாளர் அறிமுகமும் கடந்த சனிக்கிழமை காலை சுன்னாகத்தில் நடைபெற்றது.

இளம்பரிதி ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

தெளிவான - உறுதியான, இராஜதந்திரங்களைக் கையாண்டு சர்வதேசததின் கவனத்தை ஈர்த்து உலகத் தலைவர்களுள் முதன்மைவகிக்கும் தமிழழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனை எமது இனத்தின் தலைவராக ஏற்றுகொண்டுள்ளோம்.

தமிழ் மக்கள் அஹிம்சை வழியில போராட்டங்களை நடத்தித் தமது உரிமைகளைக் கோரியபோதெல்லாம் ஆயுத வழிகளில் அவர்களை அடக்கி ஒடுக்க சிங்கள இனம் முற்பட்டபோதுதான் ஆயுதப்போராட்டமே உகந்த வழி எனத் தமிழ் மக்கள் முடிவுக்கு வந்தனர்.

1977ஆம் ஆண்டு நடைபெற்ற வட்டுக்கோட்டைத் தீர்மானம், தந்தை செல்வாவின் வழிகாட்டல் தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வழங்கிய கட்டளை அனைத்தையும் ஏற்றுக்கொண்டே எமது தலைவர் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் நாம் சர்வதேச ரீதியில் பலம்பெற்றுள்ளோம். இதனால், எமக்கு ஓர் அரசியல் அதிகாரம் கிடைத்துள்ளது. இந்த அதிகாரத்தை நிலைநிறுத்தவே இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தேர்தலில் பங்குபற்றுகிறது.

தமிழ்மக்களின் மனநிலைப்பாட்டை அறிந்துகொள்ள முயன்ற வெளிநாட்டு சக்திகளுக்கு, தமிழ்த் தேசியம், தன்னாதிக்கம், சுயாட்சி என்பவற்றை முதன்மைப்படுத்தி அவற்றை நிலை நிறுத்துவதற்காக நடத்தப்படும் போராட்டமாகவே இன்றைய தேர்தலைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்தி நிற்கின்றது.

நடைபெறவுள்ள தேர்தல் மூலம தமிழ் மக்கள் ஒன்றுபட்ட நிலையில் எடுக்கும் தீர்ப்பு, உள்நாட்டு ரீதியில் எதனையும் சாதிக்காமல் விட்டாலும், சர்வதேச ரீதியில் ஒரு சிலவற்றையாவது சாதிக்கும்.

போராட்டக் களத்தில் - இராணுவ பலத்தில் - எமது வெற்றி எவ்வாறு தீர்மானிக்கப்பட்டதோ, அதே போல அரசியல ரீதியில் தேர்தலை ஆயுதமாக்கி வெற்றிபெற உங்கள் வாக்குகளைப் பயன்படுத்தவேண்டும்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேர்தல் வெற்றிமூலம் தமிழ்த்தேசியத்தை வலுப்படுத்த முன்வந்துள்ளனர். தன்னாதிக்கமுள்ள சுயாட்சி கொண்ட இடைக்கால நிர்வாகத்தை அடைய வேண்டும் என்ற இலட்சியத்துடன் களம்புகுந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது முழு ஆதரவையும் வழங்க முன்வந்துள்ளனர்.

தமிழர் வாழ்வின் ஒற்றுமையைக் குலைத்து, வாழ்க்கையைச் சீரழித்து வரும் சக்திகளுக்கு ஒரு தெளிவான முடிவை இத்தேர்தல் மூலம் மக்கள் வழங்கவேண்டும் - எனக் கூறினார்.

கூட்டத்தில் உரையாற்றிய மாவை சேனாதிராசா கூறியதாவது:-

முழு இலங்கையையும் ஆழவேண்டும் என்ற எண்ணம் கொண்டு நாம் போராட்டத்தை நடத்தவில்லை. எமது தாயகத்தை நாம் ஆழவேண்டும், எமது பூமியை நாம் ஆழவேணடும் என்றே கூறுகின்றோம்.

இதற்காகவே இன்றும் நாம் அரசியல் ரீதியாகவும் ஆயுதரீதியாகவும் போராடிக்கொண்டிருக்கின்றோம்.

இப்போராட்டங்களை அடக்க வேண்டும், ஒடுக்க வேண்டும் என்ற காரணதிற்காகவே எம்மக்களை தமது சொநத வீடுகளில் இருந்து விரட்டியடித்து இராணுவத்தைக் கொண்டு வந்து எம்மக்களின் வீடுகளில் குவித்துள்ளாாகள்.

இன்று சர்வதேச மட்டத்திலும் எமது விடுதலைப் போராட்டத்திலும் ஒரு பாரிய திருப்பு முனையாகும். இந்த நிலைமையில், தமிழ் மக்களாகிய நாம் ஒரு தலைமையின் கீழ் நின்று எமது விடுதலைப் போராட்டத்துக்கு அரசியல் ரீதியாகவும் வலுச்சேர்க்க வேண்டியது அத்தியாவசியமாகும் - என்று தெரிவித்தார்.

## ஒலி பெருக்கி மூலம் தேர்தல் பிரசாரம்

கரவெட்டி,மார்ச்2

வடமராட்சியில் ஈ.பி.டி.பியினர் தமது தேர்தல் பிரசாரத்தை தமது காரியாலயத்தில் ஒலிபெருக்கி மூலம ஆரம்பித்தனர்.

மேற்படி அமைப்பினர் தமது காரியாலயத்தில் உயர்ந்த இரும்புக் கம்பம் ஒன்றில் ஒலிபெருக்கிகளைக் கட்டி அதன் மூலம் தமது தேர்தல் பிரசாரத்தையும் காரியாலயம் முன்பாக துண்டுப் பிரசுர விநியோகத்தையும் கடந்த வெள்ளி முதல் ஆரம்பித்தனர்.

(ம-70)

## தமிழ் மக்களின்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வமான அரசியல்தீர்வு மறுக்கப்பட்டு, இராணுவ ஆக்கிரமிப்பும், அரச அடக்குமுறையும் மீண்டும் தொடருமானால், தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், தமிழர் தாயகத்தில், தமிழரின் இறைமையும் சுதந்திரமும் நிலை நிறுத்தப்படுவது தவிர்க்கப்படமுடியாத யதார்த்தமாகிவிடும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

கௌரவத்துடன் கூடிய அமைதியான வாழ்வினை நாடிநிற்கும் தமிழ்த தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிரிகளாகவும் சிங்களப் பேரினவாத சக்திகளின் எடுபிடிகளாகவும் எம்மத்தியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சுயநல சந்தர்ப்பவாதக் குழுக்களைத் தமிழ்மக்கள் அடையாளங்கண்டு எதிர்வரும் தேர்தலில் அவர்களை ஒட்டுமொத்தமாக நிராகரிக்கவேண்டுமென எமது மக்களை நாம் வேண்டி நிற்கிறோம்.

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளை வலியுறுத்தி எம்மினத்தின் அரசியல் உறுதிப்பாட்டை மீண்டும் பிரகடனப்படுத்தித் தமிழ்த் தேசியத்தை மேலும் பலப்படுத்த தமிழ் பேசும்மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைந்து தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குத் தமது அமோக ஆதரவை வழங்க வேண்டுமெனத் தமிழ் பேசும் மக்களை நாம் அறைகூவி அழைக்கின்றோம்.

(ம)

# தேர்தல் சட்டவிதிகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்க!

## தேர்தல் ஆணையாளர் பொலீஸாருக்குப் பணிப்பு

கொழும்பு,மார்ச்2

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பிரசார நடவடிக்கைகள் தொடர்பாக தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டவிதிகள் சரியான வகையில் நடை முறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்யுமாறு தேர்தல் ஆணையாளர் பொலீஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

சட்டவிதிகளுக்கு அமையாத வகையில் - ஆதரவு கோரும் வகையிலான துண்டுப் பிரசுரங்கள் அச்சிடுவது தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வித துண்டுப் பிரசுரங்களை அச்சிடும் அச்சகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, அவ்வித துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் ஆகியன பொலீஸாரால் பறிமுதல் செய்யப்படும்.

கட்சி அலுவலகங்கள் தவிர்ந்த பொது இடங்களில் தேர்தல் தொடர்பான அலங்காரங்கள், பதாகைகள் கட்டுதல் மற்றும் கட்சிக் கொடிகளைப பறக்க விடுதல் போன்ற செயற்பாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்தடையை மீறிச் செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஏற்கனவே இத்தகைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவற்றை அகற்றிவிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் பொலீஸாரைப் பணித்துள்ளார்.

பிரதான சில நகரங்கள் மற்றும் வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள இவ்வித தேர்தல் பிரசாரப் பதாதைகளை அகற்றும் பணிக்கென 82 லட்சம் ரூபாவரை தேவைப்படுவதாக பொலீஸ் திணைக்களம் மதிப்பிட்டதாகவும், அத்தொகை குறிப்பிட்ட நடவடிக்கையை நிறைவேற்றும் பொருட்டு தேர்தல் ஆணையாளரால் பொலீஸ் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாவும் தெரிவிக்கப்படுகிறது.

(ம-8)

# அரச சொத்துக்களைப் பயன்படுத்துவதை தேர்தல் காலத்தில் கண்காணிக்க நடவடிக்கை

அரச சொத்துக்கள் மற்றும் நிதியைத் தேர்தலில் பயன்படுத்துவதைத் தடுக்கும் நோக்கில் மனித உரிமை நிறுவனம் ஒன்று கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கின்றது.

அரசுக்குச் சொந்தமான வாகனங்கள், ஹெலிகள் ஆகியவற்றையும் அரசின் நிதிவளங்களையும் கடந்த தேர்தல்களில் அரசு சார்புக் கட்சிகளும், எதிர்க்கட்சிகளும் பயன்படுத்தின என்றும் -

இதன் காரணமாக அரச நிறுவனங்கள் சுயாதீனமாகச் செயற்படமுடியாதநிலை ஏற்பட்டது என்றும் - குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன.

இதனையடுத்து முதன்முறையாக மனித உரிமை நிறுவனம் ஒன்று அரச சொத்துக்களைத தேர்தலில் பயன்படுத்துவதைக் கண்காணிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அரச சொத்துக்களைத் தேர்தலில் பாவிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் இந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாகச் சில கண்டிப்பான நடைமுறைகளை ஜனாதிபதி திறைசேரிக்கு விதித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மிதி வெடி வெடித்து ஒருவர் காயம்!

யாழ்ப்பாணம்,மார்ச்2

கல்லுக் கிளறிக்கொண்டிருந்த வேளை வெடித்த மிதிவெடிச் சிதறலினால் ஒருவர் கண்ணில் காயமடைந்தார்.

அச்சுவேலி, தீத்தாங்குளம் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அந்த இடத்தைச் சேர்ந்த பசுவலிங்கம் காண்டீபன் (வயது 22) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-15)

## மகளிர் அதிர்ஷ்ட வாரம்

வலி.தெற்கு,மார்ச்2

மார்ச் மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மார்ச் முதலாம் திகதியில் இருந்து ஏழாம் திகதிவரையான காலப்பகுதியை மக்கள் வங்கி மகளிர் அதிர்ஷ்டவாரமாகக் கொண்டாடத் தீர்மானித்துள்ளது.

இக்காலப்பகுதியில் மக்கள் வங்கியில் புதிதாகத் திறக்கப்படும் மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு இலக்கங்கள் அனைத்தும் மார்ச் மாதம் 8ஆம் திகதி நடைபெறும் அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும்.

100 கணக்குகளுக்கு மேல் இக்காலப்பகுதியில் புதிதாகத் திறக்கப்படும் மக்கள் வங்கியின் அனைத்துக் கிளைகளிலும் மேற்படி சீட்டிழுப்பு நடைபெறும்.

சிட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கு அவர்கள் வைப்பிலிட்ட அதே அளவு தொகைப்பணம் அன்றைய தினமே மேலதிகமாக அவர்களின் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படும். நடைமுறைக்கணக்கில் 5 ஆயிரம் ரூபாவும் சேமிப்புக் கணக்குகளில் 10 ஆயிரம் ரூபாவும் (மகளிர் கணக்கு உட்பட) மாதம் முழுவதும் நிலுவையாக வைத்திருப்பவர்கள் வங்கியால் நடத்தப்படும் மாதாந்த ஜெயஸ்ரீ சீட்டிழுப்பிலும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

மார்ச் மாதம் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்தை விழாவாகக் கொண்டாடவும் மக்கள் வங்கி தீர்மானித்துள்ளது. (ம-152)

## தமிழ்ப்பாட ஆசிரியருக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம்,மார்ச்2

தரம் - 8இல் தமிழ் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு எதிர்வரும் 6ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் உள்ள ஆசிரியர் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மாணவர்களிடையே எழுத்துத் திறனை மேம்படுத்துவது தொடர்பாக நடத்தப்படவுள்ள இச்செயலமர்வில் நாற்பது ஆசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-6)

## புத்தாக்கப் போட்டியில் உடுவில் மாணவருக்கு ரொக்கப்பரிசு

வலி.தெற்கு,மார்ச்2

கொழும்பு புத்தாக்குநர் கழகத்தினரால் பாடசாலை மாணவர்களிடையே வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட புத்தாக்கப் போட்டியில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் அருமைத்துரை ஜெயசீலன் தகைமைச் சான்றிதழுடன் ஆயிரம் ரூபா ரொக்கப் பரிசினையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

புத்தாக்கப் போட்டிகள் அண்மையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றன. (ம-152)

## கண்ணிவெடி விழிப்புணர்வு செயலமர்வு

யாழ்ப்பாணம்,மார்ச்2

ஆரம்பக் கல்விப்பாட ஆசிரியர்களுக்குக் கண்ணிவெடி தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு எதிர்வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையிலும் யாழ் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்விற்குத் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களை இதில் கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (ம-6)

## கோட்டமட்டப் போட்டிகள்

பருத்தித்துறை,மார்ச்2

மருதங்கேணிக் கல்விக் கோட்ட மட்ட வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்றும் நாளை புதன்கிழமையும் உடுத்துறை மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளையும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் தி.தாயகனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-10-118)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியையும்
எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு.த.சிவசுப்பிரமணியத்தின்
பாசமிகு மனைவியுமான
**திருமதி ராதா சிவசுப்பிரமணியம்**

அவர்களின் மறைவு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்துகிறது. அவரது மறைவு எமது கல்லூரிக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதோடு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.
சண்டிலிப்பாய்.
(29131) (26-18-19-24)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

## 3ஆவது மாத நினைவலைகளும்
அந்தியேட்டி அழைப்பும்



தென்னாபிரிக்காவில் காலமான எமது ஒளிவிளக்கான குலக்கொழுந்து
செல்வன் **இராசையா ராஜ்குமார்**
(கல்லூரி வீதி, ஓடக்கரை, பருத்தித்துறை)

மலர்வு
04-07-1980

உதிர்வு
03-01-2004

செல்வச் சிறப்போடு இன்ப வாழ்வு வாழ்வாயென
நாம் எண்ணியிருந்த வேளையிலே
துன்பச் சுமையைத் தந்துவிட்டு தூரதேசம் போய்
கண் கலங்க வைத்த எமது அன்புச் செல்வமே!
எங்களது காதுகளில் உன் தேமதுரக் குரலோசை
கனிரென்று கேட்கிறதே! என் செய்வோம்?
அந்தோ! உன்பிரிவு தாங்க முடியவில்லையே!
திருமுகத்தைக் காண ஒருமுறை வாராயோ?

போன இடம் போய்ச் சேருமுன்பே காலன் கவர்ந்தானோ இன்னுயிரை? இரக்கமற்ற அரக்கன் இயமதர்மராஜனின் வேலை எம்மை துன்பக் கடலில் ஆழ்த்திவிட்டது. ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கண்ணீர்க் கடலில் வாழ்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கல்லூரி வீதி,
ஓடக்கரை, பருத்தித்துறை. (33911)(24-18-19) - குடும்பத்தினர்.

## கணக்காய்வாளர் தேவை

வன்னியில் இயங்குகின்ற பிரபல நிறுவனம் ஒன்றுக்கு கணக்கு ஆய்வுசெய்யும் உத்தியோகத்தர் ஒருவர் தேவை. ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். எதிர்வரும் 10.03.2004ஆம் திகதிக்கு முன்னதாக சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 2187
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

(சி-33528) (24-39-16-)

## உவகையுடன் வாழ்த்துகின்றோம்



சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்,
மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றின்
பழைய மாணவரும்
நிகரை இந்து இளைஞர் மன்றப் பொருளாளரும்
வடபிராந்திய இந்துப்பேரவை
முன்னாள் பொருளாளரும்
சங்கானை மேற்கு புனர்வாழ்வு அபிவிருத்திக் குழுவின்
செயலாளருமாகிய
உயர்திரு. **தருமராசா ரவீந்திரன்**
அவர்கள்

யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி S.நந்தசேகரன் அவர்களின் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக 20.02.2004 வெள்ளிக்கிழமை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதையிட்டு அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது சேவை நன்கு வளர்ச்சியுற்றுத் தொடர நிகரை ஸ்ரீஞானவைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

N.புஸ்பநாதன்
சங்கானை,
(உதயன் பத்திரிகையின் சங்கானை முகவர்)

மெடிபிளஸ்
உரிமையாளர் - சங்கானை.

(சி-33526) (24-18-19)

## ஏல விற்பனை
## பாவனைக்குட்பட்ட தளபாடங்கள்

சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் பாவனைக்குட்பட்ட தளபாடங்களின் ஏலவிற்பனை எதிர்வரும் 06.03.2004 சனிக்கிழமை காலை 9 - 11 மணிவரை வங்கிக் கிளையில் நடைபெறவுள்ளது.

கொள்வனவுசெய்ய விரும்புபவர்கள் குறித்த நேரத்தில் சமுகந்தந்து கூறுவிலைக்கேற்ப அவற்றைக் கொள்வனவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தேசிய சேமிப்பு வங்கி,
சுன்னாகம். (29133) (24-18-19) - முகாமையாளர்.

## 6ஆம் மாத நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பும்



அமரர் **கந்தசாமி சிறீகரன்** (சிறீ)

திதி: 03.03.2004

தோற்றம்
01-05-1978

மறைவு
06-10-2003

காலச் சக்கரத்தில் சுழன்று வளர்ந்து
நிமிர்ந்தவனே
சடுதியில் கரைந்ததேனோ புரியவில்லை
பிறப்பதும் இறப்பதும் இயற்கையின் நியதி
ஆலமரம் போல் விழுது பரப்பி
தாங்குவாய் எனக் காத்திருந்தோம்
ஆனால் - நீ மட்டும் இல்லை
என்பதை எம்மால் புரிந்துகொள்ளமுடியவில்லை.

நாளை (03.03.2004) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவில் துயருறும்:
- குடும்பத்தினர்.

வரணி இயற்றாலை,
வரணி. (29130) (34-18-19-24)

# குடாநாட்டுத் தண்ணீரால் சிறுநீரக நோயாளர் அதிகம்; சிகிச்சை முறையை நீங்களும் அறிவதற்கு ஒரு வாய்ப்பு

## மருத்துவக் கண்காட்சிக்குச் செல்லுங்கள்

கண்காட்சிகள் பலவிதமாக நடைபெறுகின்றன. அவற்றில் அனேகமானவை வெறும் பொழுதுபோக்காகவும் பேச்சளவிலுமே நடத்தப்படுகின்றன. மிகச் சிறந்தமுறையில் புதிய கருத்துக்களுடனும் அரிய தகவல்களுடனும் நடைபெறும் கண்காட்சிகள் மிகக்குறைவு. இவற்றுக்கு முற்றிலிலும் வித்தியாசமாக - புதிய ஓர் அறிவியல் அரங்காக நடைபெறுகிறது ஒரு கண்காட்சி. அதுதான் யாழ். மருத்துவ பீட மாணவர்கள் நடத்தும் மருத்துவக் கண்காட்சி.

நோயாளிகள் - பொதுமக்கள் மருத்துவ ரீதியாக தமது அன்றாட வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான பூரணமான மருத்துவத் தகவல்களை வழங்க யாழ். மருத்துவப்பீடம் தயாராகிவிட்டது.

எதிர்வரும் 5ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு செல்லுங்கள்!

### சிறுநீரகத் தொகுதி

இந்தப் பிரிவின் கீழ் மூன்று முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவையாவன:-

★ உடற்கூற்றியல்
★ உடற்றொழிலியல்
★ நோய்கள்

உடற்கூற்றியல் என்பதன் கீழ் சிறுநீரகத்தின் கூறுகள் தொடர்பாகப் படங்கள், மாதிரி வடிவங்கள், ஆய்வு கூடத்தில் வைத்துப் பாதுகாக்கப்படும் சிறுநீரகம் ஆகியவை காண்பிக்கப்படுகின்றன.

அவை தொடர்பாக முழுமையான விளக்கமளிக்கப்படும்.

உடற்றொழிலியல் என்பதன் கீழ் சிறுநீரகத்தின் தொழிற்பாடுகள் எவை? அவை எவ்வாறு நடைபெறுகின்றன என்பன தொடர்பாக விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

நோய்கள் என்பதன் கீழ் இரண்டு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அவையாவன:-

- மருந்துமூலம் குணப்படுத்தக் கூடிய நோய்கள்.

- சத்திர சிகிச்சை சம்பந்தமான நோய்கள்.

இவைதொடர்பான மாதிரி வடிவங்கள், படங்கள் என்பன வைக்கப்பட்டு விளக்கமளிக்கப்படும். அத்துடன் சிறுநீரில் எவ்வாறான பரிசோதனைகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றியும் செயல்முறை விளக்கமளிக்கப்படும்.

சிறுநீரகத் தொகுதியின் விசேட அம்சமாக சத்திரசிகிச்சைக் கூடம் (Operation Theatre) ஒன்று அமைக்கப்பட்டு அங்கு சிறுநீரகம் தொடர்பான சத்திரசிகிச்சை எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பன தொடர்பாக விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் அங்கு சத்திர சிகிச்சை தொடர்பான வீடியோ படக் காட்சியும் காண்பிக்கப்படும்.

**தொகுப்பு: தேவா**

சிறுநீரகம் முற்றாகச் செயலற்றுப் போனவர்களின் இரத்தத்தை சுத்திகரிப்பதற்கு 'டயலைசிஸ் முறை' (Dyalasis Method) எனப்படும் சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது. இச்சிகிச்சை முறை இதுவரை காலமும் கொழும்பில்தான் மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஆனால், இப்போது இச்சிகிச்சைக்குப் பாவிக்கப்படும் இயந்திரம் யாழ். போதனாவைத்திய சாலைககு எடுத்துவரப்பட்டு இங்கும் இச்சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் இது தொடர்பாக மக்கள் இதுவரை அறியவில்லை என்பதால் இவற்றைப்பற்றிய அறிமுகம் இக்கண்காட்சியில் இடம் பெறவுள்ளது.

சிறுவர்களுக்கு சிறுநீரக நோய்கள் அதிகம் ஏற்படுவதால் தாய்மார்கள் சிறுவர்களை எவ்வாறு பாதுகாக்க வேண்டும்; வயது வந்தவர்கள தமது தொடர்ச்சியான ஆரோக்கிய நிலையை எவ்வாறு பேணுவது? பெண்கள் சிறுநீரகக் கிருமித் தொற்றுக்கு ஆளாவது அதிகமாகையால் கிருமித் தொற்று ஏற்படாமல் எவ்வாறு தவிர்ப்பது என்பன தொடர்பாகவும் இங்கு பூரண விளக்கங்கள் வழங்கப்படவுள்ளதுடன் அவை தொடர்பான படங்களும் காண்பிக்கப்படவுள்ளன.

சிறுநீரகத்தை இன்னொருவருக்கு வழங்குவதால் அவருக்கு எந்த வித பிரச்சினையும் ஏற்படாது எனவும் இதில் கலந்துகொள்ளும் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சிறுநீரக நோய்க்கு ஆளாகுவோர் அதிகமாக வுள்ளனர். எனவே அவர்கள் எவ்வாறான உணவுகளை உண்ண வேண்டும் என்பன தொடர்பாகவும் விளக்கமளிக்கப்படவுள்ளது.

கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு வருவோர் சிறுநீரகத் தொகுதிக்கு வரும்போது அவர்கள் பாமர மக்களாயினும் சரி, படித்தவர்களாயினும் சரி சிறுநீரகம் தொடர்பான பூரண விளக்கத்துடன் திரும்பிச் செல்ல முடியுமென இப்பிரிவின தலைவர் தெரிவித்தார்.


**யாழ். பல்கலை. மருத்துவபீடத்தின்**
**வெள்ளிவிழாவையொட்டி**
**மாபெரும் மருத்துவக் கண்காட்சி**
எதிர்வரும் 5-9 ஆம் திகதிகளில்
ஊடக அனுசரணை:- உதயன்


# காணாமற்போனோரின் உறவினர்கள் நேற்றுமுதல் மனித உரிமை ஆணைக்குழு முன் மறியல்

யாழ்ப்பாணம்,மார்ச்2

1996ஆம் ஆண்டுப் பகுதியில் யாழ் குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணமாற் போனவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் முன்பாக மீண்டும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கைதுசெய்யப்பட்டுக் காணாமற் போனோர் சங்கமும் அன்னையர் முன்னணியும் இணைந்து இந்தப் போராடடத்தை ஏற்பாடுசெய்திருந்தன.

நேற்றுக் காலை முதல் காணாமற் போனோரின் உறவினர்கள் அலுவலக வாயிலில் அமர்ந்திருந்து மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

செம்மணிப் புதைகுழி விவகாரத்தைத் துரிதப்படுத்துங்கள் -


1997ஆம் ஆண்டு அநுராதபுரச் சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார் என்று கூறப்படும் நாவற்குழியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவகுமார் என்ற இளைஞர் இன்னும் வீடு திரும்பவில்லை. அவருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துங்கள் -

இராணுவத் தளபதி லயனல் பலகல்ல அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் வடபகுதியில் ஆள்கள் காணாமற்போனமைக்கு அப்போது பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரிகளே பொறுப்பு என்று கூறி இருநதார். அவர்களை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் -

ஆகிய கோரிக்கைகளை முன் வைத்து கடந்த 21ஆம் திகதியும் பாதுகாவலர் சங்க உறுப்பினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு உரிய பதில் தருவதாக அப்போது அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். இதனை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

10 நாள்களுக்கு மேலாகியும் அதிகாரிகள் எந்தப் பதிலையும் அளிக்கவில்லை என்பதால் தாம் மீண்டும் மறியற் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர் என்று பாதுகாவலர் சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

நேற்று மாலை வரை போராட்டம் தொடர்ந்து இடம்பெற்றது. தமக்கு தெளிவான பதில் தரப்படும்வரை தமது போராட்டம் தொடரும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)




மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் முன்பாக காணாமற்போனோரின் உறவினர்கள் நேற்று மறியற்போராட்டத்தில் ஈடுபட்ட காட்சி.
*(படம் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# வலி.தென்மேற்கு பிரதான வீதிகளுக்கு உடன் மின்விளக்கு பொருத்துங்கள்

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் கோரிக்கை

வலி.தெற்கு,மார்ச்2

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சில பிரதான வீதிகளுக்கு உடனடியாக மின் விளக்குகள் அமைத்துத்தருமாறு இலங்கை மின்சாரசபை, மானிப்பாய் பிரதேச சபை ஆகியவற்றிடம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அ.சுப்பிரமணிய ஐயர் கோரியுள்ளார்.

மின்சார விளக்குகளைப் பொருதத வேண்டியதன் அவசியத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது வாகனங்களின் போக்குவரத்து அதிகரித்துள்ளது. வாகனங்களின் நெரிசல் காணப்படும் பிரதான வீதிகளில் மின்சார வெளிச்சம் இல்லாமையால் இரவுவேளைகளில் பல வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

மேலும் வீதி வெளிச்சம் இல்லாமையால் ஏற்படும் இருட்டினைச் சாதகமாக்கி பல திருட்டுச் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

எனவே, மானிப்பாய் நகரப் பகுதிகள், இளவாலை, பண்டத்தரிப்பு போன்ற பிரதான இடங்களில் உள்ள வீதிகளுக்கு இரவுநேர மின்விளக்குகளைப் பொருத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலர் தமது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ம-152)

## தென்மராட்சி உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள

# தென்னந் தோட்டங்களில் இருந்து பயன்பெற உரிமையாளருக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,மார்ச்2

தென்மராட்சி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அகப்பட்டுக்கொண்டுள்ள தென்னந் தோட்டங்களைப் பார்வையிடுவதற்கும் அதிலிருந்து பயன்களைப் பெறுவதற்கும் தென்னந்தோட்ட உரிமையாளர்களுக்கு இராணுவம் அனுமதிவழங்கியுள்ளது.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் சந்திர பாலாவுக்கும் வடமாகாண தெங்கு உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று நேற்றுக் காலை யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள சிவில் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பிலேயே தென்னந் தோட்டங்களைப் பார்வையிடுவதற்கு இராணுவத் தளபதி அனுமதி வழங்கினார் என்று வடமாகாண தெங்கு உற்பத்தியாளர் சங்கத் தலைவர் அ.நல்லதம்பி தெரிவித்தார்.

இச்சந்திப்புத்தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தென்மராட்சியில் உயர்பாதுகாபபு வலயத்திலுள்ள தென்னந்தோட்டங்களில் பெருமளவான மரங்கள் படையினரால் தறிக்கப்பட்டுள்ளன. அவற்றிற்குரிய நஷ்டஈட்டைத் தன்னால் வழங்கமுடியாது என்று தளபதி கூறினார். அவற்றிற்குப்பதிலாக தென்னம் நாற்றுக்களைத் தோட்ட உரிமையாளர்கள் வழங்கினால் அவற்றை நட்டு பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் -

தற்பொழுது உயர்பாதுகாப்பு வலயப்பகுதிகளில் உள்ள தோட்டங்களை படையினர் தமது பாவனையில் வைத்துள்ளனர் என்பதற்கான அத்தாட்சிக் கடிதங்களை உரிய படைமுகாம் பொறுப்பதிகாரிகள் மூலம் பெற்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும்-இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல், வடமாகாண தெங்கு உற்பத்தியாளர் சங்க செயலாளர் எஸ்.பத்மநாதன் ஆகியோரும், 512 ஆவது படைமுகாம் பொறுப்பதிகாரி மேஜர் டி.சில்வாவும் கலந்துகொண்டனர். (ம-5)

# தவக்காலச் சிந்தனை

## செபம்: இறை-மனித உரையாடல்

**ஏழாம் நாள்**

**நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தையாகிய இறைவன் அறிந்திருக்கிறார்.** *(மத்6:8)*

செபம் என்பது இறை - மனித உரையாடல் என்கிறார் புனித கிளமெந்து. என்ன பேசுவது என்பதும் அதன் பொருள் என்பதும் யாருடன் உரையாடுகின்றோம் என்பதனையே பொறுத்தது. வேண்டுதல் புரிவதற்கு அடித்தளமாக அமைவது இறைவன்மீது எமக்குள்ள நம்பிக்கையாகும். தம் பிள்ளைகள் மீது நிறைந்த அக்கறையும் கரிசனையும் கொண்டுள்ள தந்தையே, நீங்கள் தொழுகை செய்யும் இறைவன் என்று சொல்லித் தருகிறார் இயேசு பெருமான். தனது இதயத துடிப்பின் ஒவ்வோர் அசைவிலும் தம் இறை தந்தையின் நினைவாக வாழ்ந்தார் இயேசு. தமது தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி அவருக்கு முற்றிலும் பணிந்து வாழ்ந்தவர் இயேசு. எமது செபத்தினது வேளையும் பொருளும் ஆழமும் சக்தியும் எமக்கு இறைவன் யார் என்பதை பொறுத்தே அமைகின்றது. தந்தை - பிள்ளை உறவில் பிறக்கும் உரையாடலே வேண்டுதல் ஆகும்.

சுவாமி ஜீவா போல் அ.ம.தி.

# 3 முதல் 5 வயது வரை குழந்தைகளுக்குத் தினம் ஐந்து தடவைகள் உணவு ஊட்டவேண்டும்

வலிகாமம் தெற்கு,மார்ச்2

"மூன்று வயது தொடக்கம் ஐந்து வயது வரையான காலத்தில் குழந்தைகளின் மூளை வளர்ச்சியடைகின்றது. இக்காலத்தில் குழந்தைகளுக்கு போஷாக்குச் சத்து அவசியம் தேவைப்படுகிறது. இக்காலத்தில் குழந்தைகளுக்கு தினமும் ஐந்து தடவைகளாவது உணவு ஊட்டப்படவேண்டும்."

மானிப்பாய் பிரதேசத்தில் உள்ள சாவற்கட்டு கிராமத்தில் நடைபெற்ற பயிற்சி கருத்தரங்கொன்றில் உரையாற்றிய மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.கணேஸ்வரராசா மேற்கண்டவாறு கூறினார்.

சாவற்கட்டு கிராமத்தில் நூறு வீடுத்திட்ட கடற்றொழிலாளர் சங்க மண்டபத்தில் சிறுவர்களின் வளர்ச்சி விருத்தி பற்றிய மூன்றுநாள் பயிற்சிக் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

கருத்தரங்கின் இறுதிநாளன்று டாக்டர் கே.கணேஸ்வரராசா விசேட உரை நிகழ்த்தினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோர்களிடம் விழிப்புணர்ச்சி இருக்க வேண்டும். சிறுவர்களின் உடல் வளர்ச்சிக்குத் தேவையான போஷாக்கு உணவை அவர்களுக்கு வழங்குவதில் பெற்றோர்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டும்.

சுகாதார அமைச்சினால் ஒவ்வொரு சிகிச்சை நிலையங்களினூடாகவும் அப்பிரதேசத்தில் உள்ள சிறுவர்களுக்கும், தாய்மார்களுக்கும் போஷாக்கு உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சத்துணவாக வழங்கப்படும் சோயா மா, முக்கூட்டு மா என்பவற்றுடன், அயன் சத்து, உயிர்ச் சத்து குளிசைகளையும் தவறாது பெற்றுப் பயன்படுத்தவேண்டும்.

இப்பிரதேசத்தில் உள்ள குழந்தைகளின் போஷாக்கு நிலை திருப்திகரமானவையாக அமையவில்லை. ஒருவயதுவரையான குழந்தைகளின் போஷாக்கு நிலை ஓரளவு உயர்வான நிலையில் காணப்பட்டாலும், இரண்டு வயதுமுதல் அவர்களின் போஷாக்கு நிலை வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது. நான்கு அல்லது ஐந்து வயதை அடையும் நிலையில் அவர்களுடைய போஷாக்கு சத்து மிகவும் குறைவடைந்து விடுகின்றது. போஷாக்கு சத்துக் குறைவடைவதனால் இந்த வயதுப் பிள்ளைகள் பல்வேறு தொற்றுநோய்களுக்கும் உள்ளாகின்றனர். அத்துடன் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் சுமுகமான உறவைப் பேண வேண்டும். இதன் மூலம் குழந்தை சமூக சூழலுடன் ஒன்றிணைந்து வாழக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுதல், கதைத்துச் சிரித்து மகிழ்தல், அவர்களுடைய விருப்பு வெறுப்புகளில் பங்குபற்றுதல் மற்றும் விருந்தினர்களை வரவேற்றல், முதியோர்களை, பெற்றோர்களை கனம்பண்ணி பணிந்து நடக்க வைத்தல் போன்ற செயற்பாடுகளை பெற்றோர்கள் மேற்கொள்வதன் மூலம் குழந்தைகளின் வளர்ச்சி உணர்வைத் தூண்டி அவர்களை நல்ல பிள்ளைகளாக வாழவைக்க முடியும் - எனக் கூறினார். (ம-152)

## மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்2

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் சி.மகேஸ்வரதாஸன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி சறோஜினி வேதநாயகம் கலந்துகொள்வார்.(எ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்2

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வலிகாமம் வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.சச்சிதானந்தனும், சிறப்பு விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் வீ.பாலசிங்கமும் கலந்துகொள்வர். (எ-5-29)

★ ★ ★

சங்கானை,மார்ச்2

சங்கானை விக்கினேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி கசிவகுமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகமும், சிறப்புவிருந்தினராக ஆரம்பக் கல்லூரி ஆலோசகர் வ.குகவேளும் கலந்துகொள்வர். (எ-5-29)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்2

வலி. கிழக்கு பிரதேச சபைக் குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாணவர்கள் விவரம் உட்படச் சகல விவரங்களுடனும் ஆசிரியர்களை வருகை தருமாறு ஆசிரியர் சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார்.(ம-10)

### யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த

# சைவசமய பாட ஆசிரியர்கள் 86 பேர் சமய ஆய்வு தொடர்பாக யாத்திரை

யாழ்ப்பாணம்,மார்ச்2

யாழ் கல்வி வலயத்தைச் சார்ந்த 86 சைவசமய பாட ஆசிரியர்கள் சமய ஆய்வு தொடர்பான யாத்திரை ஒன்றை மேற்கொண்டு திரும்பியுள்ளனர்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தென்பகுதிகளில் உள்ள பழைமை வாய்ந்த தெய்வீக ஸ்தலங்களுக்குச் சென்ற இவர்கள் அங்குள்ள சைவசமயம் தொடர்பான தகவல்களைச் சேகரித்துள்ளனர்.

சைவசமய அறிவினை மாணவர்களுக்கு மேலும் தெளிவுபடுத்துவதே இந்த யாத்திரையின் நோக்கம் என கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆசிரியர் குழுவினர் கன்னியா, கோணேஸ்வரம், திருக்கோயில், தம்பலகாமம் கோணேஸ்வரம், மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயம், மண்டூர் கந்தசுவாமி ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம், உகந்தை முருகன் கோயில், கதிர்காமம், செல்லக் கதிரமலை, நுவரேலியா சீதை அம்மன் ஆலயம், றம்பொடை அனுமார் ஆலயம், பேராதனை குறிஞ்சிக் குமரன் ஆலயம், மாத்தளை முத்துமாரி ஆலயம், முனீஸ்வரன் கோவில், திருக்கேதீஸ்வரம் போன்ற புனிதஸ்தலங்களுக்குச் சென்று திரும்பியுள்ளனர். (ம-8-6)

---

# 6ஆம் மாத நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தாயின் மடியில் | ஆண்டவன் அடியில் |
| --- | --- |
| 01 - 05 - 1978 | 06 - 10 - 2003 |

## அமரர் கந்தசாமி ஸ்ரீகரன்

*கண்போல இரு மக்கள்*
*கண்ணுறங்கும் வேளையிலே*
*கட்டியவள் கண்துயிலும் வேளையிலே*
*காலனவன் வந்ததென்ன?*

இன்று (2.3.2004) செவ்வாய்க்கிழமை காலை எமது சாவகச்சேரி இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நண்பகல் நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த.முகவரி: *கச்சாய் வீதி, சாவகச்சேரி.*

நிரந்தர முகவரி: *இயற்றாலை, வரணி.*

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி: வனஜா,
பிள்ளைகள்: சஜிந்திகா, கேதுஜன்.

(29136) (38-18-16-24)

---

# கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்கும் மதிப்பிற்குமுரிய
அமரர்

## சுப்பிரமணியம் குணபாலசிங்கம் (J.P.)

(பங்காளர், மாஸ்டல் ஸ்கேல் சேவிஸ் இஞ்சினியரிங் வேக்ஸ்)

அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த கவலையடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*200, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

*பங்காளர்களும், ஊழியர்களும் மாஸ்டல் ஸ்கேல் சேவிஸ் இஞ்சினியரிங் வேக்ஸ்.*

(29140)

---

# கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்குரியவர்களான
யாழ்.பல்கலை விரிவுரையாளா
திரு.சாள்ஸ் அவர்களதும் மற்றும்
கணனி விரிவுரையாளர்
திரு.பற்றிக் அவர்களதும்
ஆருயிர்த் தந்தையாரான கரவெட்டியைச் சேர்ந்த

## பிரான்ஸிஸ் யூஜின் யூகராஜா

அவர்கள் 29.02.2004 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார். அன்னாரின் மறைவு எமக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். இதனால், கண்கலங்கி நிற்கும் உறவுகளுக்கு ஆறுதலும் தேறுதலும் ஆண்டவரே அளிக்கட்டும். துயரிலாழ்ந்திருக்கும் குடும்ப உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கும் அதேவேளை, அவரது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனை மன்றாடுகின்றோம்.

நெல்லியடி,
கரவெட்டி.

திரு.திருமதி அன்ரன் செல்வராசா,
மாகிறேட் மெலனி குடும்பத்தினரும்,
மொடேண் ஸ்ரோர்ஸ் நண்பர்களும்.

(சி-33527) (24-26-18-16)

---

# மரண அறிவித்தல்

## ராசு சிங்கராசா

(முன்னாள் இராணுவ உத்தியோகத்தர்)



காலையடி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த ராசு சிங்கராசா 28.02.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவாக்கோ, ஷாமா, ஷெயன், சுரேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதனின் அன்பு மாமனாரும் ஆகாசின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2004) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஜம்புகோள மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காலையடி, பண்டத்தரிப்பு.* (29137) (24-18-16)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

---

## கொக்குவில் இந்துக் கல்லூரி இல்ல மெய்வன்மைப்போட்டி - 2004

இடம்: கல்லூரி மைதானம்

காலம் : 2004-03-03 புதன்கிழமை பி.ப.1.30மணி

தலைவர்:திரு. பொ.கமலநாதன், அதிபர்

முதன்மைவிருந்தினர்:
லயன் திரு. சொ. பாலகிருஷ்ணன்
(முன்னாள் ஆசிரியர்,கொக்குவில் இந்துக் கல்லூரி)

பரிசில் வழங்குபவர்:
லயன் சீமாட்டி திருமதி தங்கா பாலகிருஷ்ணன்

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

கல்லூரிச் சமூகத்தின் சார்பில்
அதிபர், ஆசிரியர், மாணவர்,
பெற்றோர், பழையமாணவர்.

(சி33532)(37-13-16-18)

---


## VACANCY
## RECEPTIONIST -MALE / FEMALE

Jaffna YMCA is looking for a dynamic, self motivated Receptionist. Interested candidates are required to send their Curriculum Vitae to reach the General Secretary, YMCA, Kandy Road, Jaffna on or before 08.03. 2004.

**YMCA JAFFNA.** (சி-33530)(16-18-13-40)


---




சிவமயம்
இந்தியப் பரம்பரை ஜோதிடர் P.T.R. அவர்கள்
யாழ். புண்ணியபூமிக்கு மூன்றாவது முறையாக வருகை

## திரு. P.T.R.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் பார்க்கப்படும்.
திருமணத் தடங்கலா, காதலில் தோல்வியா, தீராத வியாதியா, உயர்கல்வியில் தடங்கலா, கடன் தொல்லையா?, தொழில்முன்னேற்றத் தடங்கலா?, புதிய தொழில் தொடங்கவேண்டுமா?, குழந்தைப்பாக்கியம் இல்லையா?, வெளிநாடு செல்லத்தடையா?
ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.
இடம்: பாலாஜி இன் விடுதி
292, கஸ்தூரியார் வீதி (கன்னாதிட்டி சந்தி அருகில்),
யாழ்ப்பாணம். (29128)(14-31)


---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், - இலங்கை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள்
### கலைமாணி பகுதி - II - 2001 (வெளிவாரி)
### சிறப்புக் கலைமாணி பகுதி - II - 2001 (வெளிவாரி)

மேற்படி பரீட்சைகள் 15.03.2004 (திங்கட்கிழமை) தொடக்கம் நடத்தப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இம்முறை இப்பரீட்சைகள் வவுனியா வளாகத்தில் அமைந்துள்ள பரீட்சை நிலையத்தில் நடைபெற மாட்டாது. நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் அலுவலக நேரத்தில் 10.03.2004 முதல் யாழ். பல்கலைக் கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

### வெளிநிலை தேர்வுநாடிகளின் பதிவேடுகள்

கலை முதற்தேர்வு கல்வியாண்டு 2001/2002
வணிக முதற்தேர்வு கல்வியாண்டு 2001/2002
கலைமாணி பகுதி -I கல்வியாண்டு 2001/2002
நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) 2001/2002

மேற்படி கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வுநாடிகளாகப் பதிவு செய்தவர்கள் தங்களுக்குரிய பதிவேட்டினை 05.03.2004 வெள்ளிக்கிழமைமுதல் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பி.ப. 2 மணிமுதல் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

பதிவாளர்,
01.03.2004 (சி-33912)(16-18-13)

---


## தேவை

ஹெலோ டிரஸ்ற் நிறுவனத்துக்கு களஞ்சியக் காப்பாளர் (Store keeper) தேவை. இப்பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தரமான முன்னனுபவமுள்ள, வயது 25- 40 இற்கு இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கவும்.

முடிவு திகதி: 10-3-2004

Administrator,
The Halo Trust,
655,Navalar Road,
Jaffna. (38-13-16-18) (29141)

## பாராட்டுவிழா

அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்ற காரைநகர் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.அழகேந்திரனுக்கான பாராட்டுவிழா நாளை புதன்கிழமை காரைநகர் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

காரைநகர் பிரதேச செயலர் வேசாம்பசிவம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதமவிருந்தினராக ஊர்காற்றுறை பிரதேச செயலர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் கலந்துகொள்ளவுள்ளார். (எ-73)

# 'துளிகள்' இசைத்தட்டு வெளியீடு

கோண்டாவில்,மார்ச்02

"துளிகள்" இசைத்தட்டு வெளியீட்டு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்வெளியீட்டு விழாவில் தலைமையுரையை தமிழீழ கலைப்பண்பாட்டுக் கழகப்பொறுப்பாளர் புதுவை. இரத்தினதுரையும் கருத்துரையை இசைவாணர் கண்ணனும் நிகழ்த்துவார்கள்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் சுப்பையா கணபதிப்பிள்ளையும், சிறப்புவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக இசைத்துறைப்பிரிவுத் தலைவர் என்.வி.எம். நவரத்தினமும் கலந்துகொள்வார்கள். (ம-8-49)

## நாய்களினால் கடிபடுவோர் எண்ணிக்கை உயர்வு

தென்மராட்சி,மார்ச்3

தென்மராட்சி பளைப் பிரதேசத்தில் கடந்த மாதம் 81 பேர் நாய்களினால் கடியுண்டனர் என்றும் -

இவர்களில் 30 பேர் விசர்நாய்களினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# அரியாலைப் பகுதியில் கசிப்பு விற்பனை அதிகரிப்பு!

## பெண்களே அதிகம் ஈடுபடுகிறார்களாம்

அரியாலை, பொன்னம்பலம் வீதிப் பகுதியில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் அதிகரித்துள்ளதாக அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு - பகல் என எவ்வேளையும் இப்பகுதியில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாகவும் - அதிலும் இதில் பெண்களே ஈடுபட்டு வருகின்றனர் என்றும் - கூறப்படுகிறது.

இப்பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையைத் தடைசெய்ய எவரும் முன்வராதமை வேதனையாக இருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கசிப்பு விற்பனை காரணமாக நாளாந்தம் இப்பகுதியில் வீணான சண்டை சச்சரவுகள் ஏற்படுவதாகவும் -

எனவே, சம்பந்தப்பட்டோர் இவ்விடயத்தில் அக்கறை எடுக்க வேண்டும் என்றும் - மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். (ஓ-75)


## அதிர்ஷ்டலாபச்சீட்டு முடிவுகள்

உரும்பிராய் அரிமா கழகத்தினால் 29.02.2004இல் நடத்தப்பெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசில்கள் பெறும் இலக்கங்கள் பின்வருமாறு

சீட்டு இல. 1897 முதலாவது பரிசு
சீட்டு இல. 4991 இரண்டாவது பரிசு
சீட்டு இல. 4185 மூன்றாவது பரிசு

| | |
|---|---|
| சீ.இல.3466 ஆறுதல் பரிசு | சீ.இல.0831 ஆறுதல் பரிசு |
| சீ.இல.3132 ஆறுதல் பரிசு | சீ.இல.1792 ஆறுதல் பரிசு |
| சீ.இல.2212 ஆறுதல் பரிசு | சீ.இல.2480 ஆறுதல் பரிசு |
| சீ.இல.0044 ஆறுதல் பரிசு | சீ.இல.3812 ஆறுதல் பரிசு |
| சீ.இல.0087 ஆறுதல் பரிசு | சீ.இல.3592 ஆறுதல் பரிசு |

- செயலாளர்.

(29147)(37-12-17-31)


## கண்ணீர் அஞ்சலி



எமது பஜனை மண்டலியின் அமைப்பாளர்

"இசைமணி"

சுப்பிரமணியம் குணபாலசிங்கம் (J.P)

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்ம சாந்திக்காக பாபாவைப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ சத்தியசாயி பஜனை மண்டலி,
சுண்டுக்குளி.

(29146)(40-12-17-31)

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் வேலாயுதம் துரையப்பா

(முன்னாள் உரிமையாளர் கணேஷ் அழககம்)



தோற்றம் 20.10.1920 மறைவு 28.02.1996

(ஏகாதசி - 02.03.2004)

தீபத்தின் சுடரொளியாய் - மிளிரும்
தேசத்தின் திருவுருவாய்
திகழ்ந்த எம் அகழ் விளக்கே
பேரோடும் புகழோடும்
பெருமையாய் பலர் மதிக்க
வாழ்ந்து எமையும் வாழவைத்த
அன்புத் தெய்வமே!
உமது ஆத்மாசாந்தியடைய அம்பாளைப்
பிரார்த்திக்கின்றோம.

உங்கள் நினைவுகளுடன் வாழும்:
பெறாமகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

க. கணேசரட்ணம்
(கணேஷ் அழககம்)
910, K.K.S. வீதி,
நாச்சிமார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(29149)(40-12-17-31)


**லிபேட்டி** அச்சுவேலி

சரத்குமார், விக்ரம், குஷ்பு, தேவயானி நடித்த

விண்ணுக்கும் மண்ணுக்கும் (ரீல்ஸ்)

காட்சிநேரம்: 3.00, 7.00 (பு.நே.)

(C-33521)

**ராஜா** யாழ்ப்பாணம்

01.03.2004 முதல்

தனுஸ், அபர்னா, கருணாஸ் நடித்த



(ரீல்ஸ்)

காட்சி நேரம் 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

(C-33519) (12)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை



அர்ஜுன், சிம்ரன், மனோரமா நடித்த

ஒற்றன்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு

BLOOD FEORT - 2

இரவு 8.45 (பு.நே.)

(C/33515) (12)

**நாகம்ஸ்** சுன்னாகம்

இன்று மட்டும்

சத்தியராஜ், ரக்சா நடித்த

சேனா



காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (ரீல்ஸ்)

3. 4 திகதிகளில்

கொஞ்சிப் பேசலாமா

5 முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடான

சரத்குமார், லைலா, வடிவேலு நடித்த கம்பீரம்

(C/33520) (12)


"இறை ஆட்சி நெருங்கி வந்துவிட்டது
மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற். 1:15)





தவக்காலத்தில்
மன மாற்றத்துக்கு அழைப்பு விடுத்து
தந்தை போல் றொபின்சன்
அடிகளாரால் நடத்தப்படும்

# இறை தியான வழிபாடுகள்

- 14 - 03 - 2004 ஞாயிறு - இளைஞர் யுவதிகளுக்கு புனித பத்திரிசியார் கல்லூரி மதுரம் சதுக்கத்தில்
- 15 - 03 - 2004 திங்கள் - நெடுந்தீவில்
- 16 - 03 - 2004 செவ்வாய் - தும்பளையில்
- 17 - 03 - 2004 புதன் - குருநகர், புனித யாகப்பர் ஆலய முன்றிலில்

வழிபாடுகள் மாலை 4 மணிமுதல் 9 மணிவரை நடைபெறும்.

- 17 - 03 - 2004 காலை 9-12 வரை கொழும்புத்துறை செபமாலை மாதா ஆலயத்தில் ,

இயேசுவின் வல்லமையால்
தீய பாவத்தின் பிடியிலிருந்தும்
தீராத வியாதிகளிலிருந்தும் விடுதலைபெற
அன்போடு அழைக்கிறோம்.

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.

- இறைதியான குழுவினர்.

(29150)(31-12-17)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா ஆறுமுகம் (கிளாக்கர்)



கரணவாய் மத்தி, குளவியடி அம்மன் கோயில், நவிண்டில், கரவெட்டியைச் சேர்ந்த கந்தையா ஆறுமுகம் நேற்று (01.03.2004) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந் தையா-அசுபதி தம்பதியினரின் தவப்புதல்வனும் காலஞ்சென்ற பூரணத்தின் பாசமிகு கணவரும் பிரபா (சுவிஸ்), ரவீந்திரன் (லண்டன்), சபேசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பாஸ்கரன் (சுவிஸ்), காலஞ்சென்ற இரத்தினாதேவி (லண்டன்), ராதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தங்கம்மாவின் சகோ தரனும் கந்தசாமி, காலஞ்சென்றவர்களான இராசம்மா, கந்தையா (சுந்தரம் மாஸ்ரர்) ஆகியோரின் மைத்துனரும் மினோலினி, காயத்திரி, சுஜன், சாருகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல சட்டத்தரணியும், நொத்தாரிசுமான G.V.சுப்பிரமணியம் அவர்களின் லிகிதராகவும் பிரபல சட்டத்தரணியும் பதில் நீதிவானுமாகிய பொ.குமாரசாமி அவர்களின் லிகிதராகவும் கடமையாற்றிப் பின்பு கொழும்பில் பிரபல சட்டத்தரணி லிகிதராகக் கடமையாற்றியவராவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் (03.03.2004) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*குளவியடி அம்மன் கோயில்,*
*கரணவாய் மத்தி, நவிண்டில்,*
*கரவெட்டி.*

(சி-33534)(40-13-14-31)

தகவல்:
சி.தங்கவேல் (சகோதரன்)
கேம்பிறிஜ் கலாசாலை,
நவிண்டில்.

## திருமதி றோஸ் மாகிறெட் அன்ரனிரட்ணம்

(இளைப்பாறிய ஆசிரியை. ஏழாலை தெற்கு. அ.மி.த.க. பாடசாலை)



ஏழாலை மேற்கு, நாக்கியம்புலத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி றோஸ் மாகிறெட் அன்ரனிரட்ணம் நேற்று (01.03.2004) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி, ஆன் பொன்னம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான றப்பியேற்பிள்ளை கத்தரின் அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அன்ரனிரட்ணம் (இளைப்பாறிய லிகிதர் - A.G.A. Office) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மேரிஜெயமணி, துரைராஜா மற்றும் திரேசா தவமணி (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஜோசப், குணசிங்கம் மற்றும் பிலோமினா (இளைப்பாறிய ஆசிரியை - கனடா) மார்செலீன் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மைத்துனியும், அன்ரன்லூக் (கனடா), மேரிகாமல் ரதினி (பிரான்ஸ்), மாலினி (நோர்வே), வதனி (பிரான்ஸ்), ராகினி (இத்தாலி), ரஞ்சின் (லண்டன்), ஜெயராஜா (M.P.C.S. சுன்னாகம்) அவர்களின் அன்பு சிறியதாயாரும், ஜீவா (கனடா), தயா (பிரான்ஸ்), றொபேட் (நோர்வே), மோகன் (பிரான்ஸ்), நிகேதன் (இத்தாலி), ஜெகன் (பிரான்ஸ்), மனோ (கனடா), வசந்தன் (கனடா), செறின் (கனடா), நொய்லின் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், யூடித், யோசப்ராஜ், பியோ, பியா, சில்வன், டயானா, பீறீடா, அருள், கொலின், பெப்பச்சுவா, சுபோஷிக்கா, நிறேஷிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (02.03.2004) பி.ப. 3 மணிக்கு சூராவத்தை புனித திரேசம்மாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் ஏழாலை கிழக்கு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

(29152)(31-12-17)

*நாக்கியம்புலம்,*
*ஏழாலை மேற்கு, சுன்னாகம்.*

தகவல்:
அ.இ.ஜெயராஜா (ஜெயம் - பெறாமகன்).
T.P: 0777 889463.

## அமரர் கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை

(இளைப்பாறிய இ.போ.ச. காப்பாளர்)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அல்லையம்பதி துன்னாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை நேற்று (01.03.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சிற்றம்பலம், சின்னம்மா, செல்லப்பாக்கியம் கணபதிப்பிள்ளை, கதிரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரரும் தெய்வானைப்பிள்ளையின் பாசமிகு கணவரும் தங்கமணி, அருட்செல்வம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் பருத்தித்துறை பிரதேச சபை), செல்வநாயகி, புவனேந்திரராசா (செயலாளர் நகரசபை காத்தான்குடி), ஆனந்தராசா (நியூ வேலவன் ஸ்ரோர்ஸ் கல்வடி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சிவராமலிங்கம் (இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்), சிவகுருநாதன் சுபத்திரா தவி, சந்திரா (கல்வித் திணைக்களம்), மகாலக்ஸ்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும் திரு. திருமதி ஜெயச்சந்திரன் விமலா, திரு.திருமதி சுதாகரன் ஜெமலா, அ.மயூரதன் (யாழ். பல்கலைக்கழகம்), அ.அஜந்தன், அ.அரவிந்தன், அ.சுபாகரன், சி.அனுசியா (ஆசிரியை), தனுஷியா (மட்டு. பல்கலைக் கழகம்), சி.சுஜீவன், பு.நிரஜா, அச்செவன், தனராஜ் (சவூதி), ஜீவராஜ், ஜீவாணந்தி, தயாணந்தி ஆகியோரின் அன்புப் பேரனும் அபிதாரணி, சாரங்கன், நிதர்ஷா அகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.03.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு கருகம்பன் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்லையம்பதி,*
*துன்னாலை, கரவெட்டி.*

(சி33533)(37-12-17-31)

தகவல்:
அருட்செல்வம் (மகன்).

# கதிர்காமம் முருகன் ஆலயத்துக்கு அரசியல்வாதிகள் படையெடுப்பு!

கொழும்பு,மார்ச்2

பொதுத்தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்பட்டதிலிருந்து கதிர்காமம் முருகன் ஆலயத்துக்குச் சென்று வழிபடும் அரசியல்வாதிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. தென்னிலங்கையைச் சேர்ந்த பிரபல அரசியல்வாதிகள் பலரும் கதிர்காமம் முருகனின் அருள்வேண்டி வழிபட்டு வருகின்றனர்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து பல அரசியல்வாதிகள் கதிர்காமம் முருகன் ஆலயத்துக்குச் சென்று வழிபடத்தொடங்கினர். ஆயினும், தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டபின்னர் கதிர்காமம் செல்லும் அரசியல்வாதிகளின் எண்ணிக்கை வேகமா அதிகரித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த மாதம் 23ஆம் திகதி பிரதமரும் அரசுக்குமாரநாள் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஸவும் கதிர்காமத்துக்குச் சென்று பூஜை வழிபாட்டில் கலந்துகொண்டுள்ளனர்.

அரச மற்றும் எதிரணிகளைச் சேர்ந்த பல அரசியல்வாதிகள் தினமும் தமது ஆதரவாளர்கள் சகிதம் கதிர்காமத்துக்குச் சென்று எதிர்வரும பொதுத்தேர்தலில் தமது வெற்றிக்கு ஆசிவேண்டிப் பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

பொதுத்தேர்தல் இடம்பெறவிருப்பதை முன்னிட்டு தமது பூமாலை வியாபாரம் களைகட்ட ஆரம்பித்திருப்பதாகவும் கட்சிகளுக்குரிய நிறத்தில் மாலைகளைத் தேர்ந்தெடுத்து அரசியல்வாதிகள் பூஜைக்காக வாங்கிச்செல்கின்றனர் என்றும் கதிர்காம ஆலயப் பகுதியில் பூமாலை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள பெண்கள் தெரிவிக்கின்றனர். அதுமட்டுமன்றி அரசியல்வாதிகள் பூஜையில் வைக்கப்பட்ட மூவர்ண நூல்களை வாங்கி கைகளில அணிந்து செல்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (ஒ-ரி)

## ஊடகங்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனிடையே அரசின் கட்டுப்பாட்டில் இயங்காத ஊடகங்கள் மீது - அவை வெளியிடும் தேர்தல் செய்திகள் தொடர்பாக - அழுத்தம் பிரயோகிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்குக் கிடையாது என்றும் -

ஆகவே, பொதுஒழுக்கக் கோவை ஒன்றைத் தயாரித்து அதனடிப்படையில் நியாயமான விதத்தில் தேர்தல் தொடர்பான செய்திகளை வெளியிடுமாறு தனியார் ஊடகங்களை கேட்டுக் கொள்ள மட்டுமே தேர்தல் ஆணையாளரால் முடியும் என்றும் -

தேர்தல் திணைக்கள் உயர் அதிகாரி ஒருவர் கருத்துத்தெரிவித்தார்.

இதனிடையே பொதுதத்தேர்தலில தேசியக் கண்காணிப்புக் குழுவாக இயங்கவுள்ள 'பவ்ரல்' அமைப்பு உட்பட ஐந்து பொதுத்தேர்தல் கண்காணிப்புக்குழுக்கள் இந்தத்தடவை தேர்தல் தொடர்பான ஊடகங்களின் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்து வாரந்தோறும் அது தொடர்பான அறிகையை தேர்தல் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கவுள்ளன. (ஒ-ரி)

## நியாயமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடியின் கீழ் ஒன்றிணைந்து தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அமோக ஆதரவை வழங்க வேண்டுமென அவர்கள் அறிக்கையில் அழைப்பு விடுத்திருக்கின்றனர்.

இந்த அறிக்கையில் பல தீர்மானங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்திருக்கின்றது. (க-86)

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் அமைக்கப்படவேண்டுமென விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதால அது தொடர்பாகக் குறிப்பிட்ட தரப்பினர்களின் அறிக்கைகளைப்பெற்று இறுதித்தீர்மானம் மேற்கொள்ளத் தேர்தல் ஆணையாளர் உத்தேசித்திருக்கிறார் என அறியப்படுகிறது.

அரசியல் கட்சிகளின் செயலாளர்களை தேர்தல் ஆணையாளர் எதிர்வரும் 5ஆம் திகதி சந்திக்கவிருக்கிறார். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாக்களிப்பது தொடர்பாகவும் இச்சந்திப்பில் பேசப் படும்என தெரிகிறது. இதற்கிடையே, புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் உள்ள மக்கள் வாக்களிக்க வசதி செய்து தரும்விடயத்தில் போர்நிறுத்தக் கணகாணிப்புக் குழுவும் தன் பங்கை ஆற்றவேண்டும் என்று புலிகள் விடுத்த கோரிக்கையை கண்காணிப்புக்குழு ஏற்க மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான ஒரு விடயத்தில் தலையிட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு அதிகாரம் எதுவும் இல்லை என்று குழுவின் பிரதித்தலைவரான ஹக்ரூப் ஹவுக் லண்ட் கூறியிருக்கிறார். இது இவ்வாறிருக்க தேர்தல் தினத்தில் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திலிருந்து வாக்களிக்க அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வரும் பொதுமக்களுக்காகப் பாதுகாப்புக் கெடுபிடிகளை தளர்த்த தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று இராணுவப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். (க)

## புலிகளின் பிரதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவோம்.

நாம் எமது அரசை அமைத்ததும் யுத்தநிறுத்த ஏற்பாடுகள் குறித்து புலிகளுடன் திரும்பவும் பேசுவோம், அதில் உள்ள சில நிபந்தனைகள் குறித்து மீளப் பேசி ஒழுங்கமைப்பதற்குப் புலிகளும் விரும்புகின்றனர் என நான் அறிகின்றேன்.

எனவே, ஒப்பந்தத்தில் உள்ள சில பலவீனமான விவகாரங்கள் குறித்து நாம் கவனிப்போம்.

எனினும், யுத்தநிறுத்தம் தொடரும். தற்போது தடைப்பட்டுப்போயிருக்கும் பேச்சுக்கள் வெளிநாட்டு அனுசரணையாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களின் உதவியோடு தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

இந்த வெளிநாட்டு அனுசரணையாளர்களின் பங்களிப்பு ரணில் விக்கிரமசிங்காவினால் கொண்டுவரப்பட்டதல்ல. நாமே கொண்டுவந்தோம். அதை அவர் பயன்படுத்தினார். எனவே, அவர்களது உதவியோடு பேச்சுக்கள் தொடரும்.

இந்த நடவடிக்கை இந்திய அரசு மற்றும் ஏனைய நட்பு அரசுகள் என நாம் கருதும் வெளிநாட்டு அரசுகள் ஆகியவற்றோடு நாம் நடத்தும் தொடர் கலந்தாலோசனையுடன் முன்னெடுக்கப்படும்.

முக்கியமாக இந்தியாவுடன் - ஏனென்றால் இந்தவிடயத்தில் அது ஆழமாகச் சிரத்தை கொண்டுள்ளதாலும் எங்கள் பிரச்சினையில் அது அதிகம் சம்பந்தப்பட்டதாலுமாகும்.

அடுத்ததடவை புலிகளோடு பேசுவதற்கு - எமது முன்னய அனுபவங்களின் அடிப்படையில் - நாம் தெளிவான உத்தி ஒன்றை வகுத்துள்ளோம். அத்தகைய உத்தி ஏதும் ரணில் தரப்பிடம் இல்லை. அவர் கண்மூடிக் கொண்டு புலிகளுக்கு எல்லா வாக்குறுதிகளையும் வழங்கினார். கடந்த தேர்தலுக்கு முன்னர் அப்படித் தமக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி புலிகளே இப்போது மூன்று, நான்கு தடவைகள் பகிரங்கமாக அவரிடம் கேட்டிருக்கின்றார்கள். அவை என்ன வென்பது எமக்குத்தெரியாது. ஆனால், அவற்றில் சில இரகசியமானவை, நாம் அப்படிச் செய்யமாட்டோம்.

நாங்கள் திட்டவட்டமாகவும் பகிரங்கமாகவும் எம்மால் என்ன தரமுடியும் என்பதை குறைந்தது ஒரு கட்டமைப்புப் பற்றியாவது - புலிகளுக்குத் தெரிவிப்போம். மிகுதி விடயங்கள் கலந்துரையாடலுக்கு உரியவை.

நாங்கள் கூறுவது எல்லாவற்றையும் புலிகள் ஏற்பார்கள் என நாம் எதிர்பார்க்க முடியாது. முன்னைய சந்தர்ப்பங்களில் செய்தது போல வசதியான கால அட்டவணையையும் நாம் அவர்களுக்குத் தருவோம். அதற்காக இந்தக்காலமுடிவில் நாம் பேச்சைவிட்டு விலகிவிடுவோம் என்று கூறமுடியாது. எனினும், விசாலமான கால அவகாசத்தை - இலக்கத்திகதியை - முன்வைத்துப் பேச்சு நடத்துவோம். அப்பேச்சுக்கள் வெளிப்படையாகவும் ஒளிவுமறைவு அற்றவையாகவும் இருக்கும்.

*கேள்வி:-* உங்கள் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்த பின்னர் பேச்சுக்களைத் தொடங்குவது தொடர்பாக அண்மைய மாதங்களில் புலிகளோடு - உத்தியோக ரீதியிலோ, உத்தியோகப்பற்றற்ற முறையிலோ தொடர்புகளை நீங்கள் ஏற்படுத்தியுள்ளீர்களா?

*ஜனாதிபதி:-* தொடர்ந்தும் நாங்கள் அவர்களோடு தொடர்புகளை வைத்தே வருகின்றோம்.

*கேள்வி:-* அதை விளக்குவீர்களா?

*ஜனாதிபதி:-* என்னால் முடியாது அதுவும் இந்தச்சந்தர்ப்பத்தில்,

இவ்வாறு தெரிவித்த ஜனாதிபதி குமாரதுங்கா, தங்களுடைய கூட்டமைப்பின் பிரதமர் பதவி வேட்பாளர் யார் என்பதைத் தேர்தல் நெருங்கும் சமயத்தில் தாங்கள் அறிவிப்பார்கள் என்றும் தெரிவித்தார். (கு)


தரம் 1 முதல் G.C.E.(O/L) வரை
முதலாம் தவணைப் பயிற்சிப்பரீட்சை
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும்
சுந்தர் வெளியீடு
344,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம் ☏ 021 222 7086
(கோயில் வீதிச்சந்திக்கருகாமை)



MCS
324 Palaly Road, Jaffna.
BIT 2nd Semester
New Batches Commence on
Saturday: 06th March at 09.00 a.m
Sat-Sun: 08-12
Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project





பொருளியல்
இறுதிக் கருத்தரங்கு
A/L 2004
பகுதி I 05.03.2004
பகுதி II 09.03.2004
(காலை 9 மணி முதல் 5 மணி வரை)
முழுப்பாடத் திட்டமும் மீட்டல்
K.உதயன்
(29115)(37)




CHEMISTRY
GROUP CLASSES
By
-VAKEESAN-
Mon. Fri. Sat. Sun. 2006 A/L
6.30 - 7.30 a.m.
(புதிய நேரம்)
ஆரம்பம்: 05.03.2004 வெள்ளி
இடம்: இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
(பல்கலைக்கழகம் முன்பாக)
(29081)(37)



CHEMISTRY
GROUP CLASSES
By
VAKEESAN
2006 A/L
Mon. Fri. Sat. Sun. 6.00 - 7.00 p.m.
(புதிய நேரம்)
ஆரம்பம்: 05.03.2004 வெள்ளி
இடம்: மதவடி வீதி, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
(29080)(12)



TOSHIBA


TOSHIBA போட்டோ கொப்பியர்கள், ரோணர்கள், உதிரிப்பாகங்களையும் மற்றும் அனைத்துவிதமான கணனிகள், கணணி உதிரிப்பாகங்களையும் யாழ்நகரிலேயே மிகக்குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஒரு நிறுவனம்.
TOSHIBA FROM JOHN KEELLS





யப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த TOSHIBA உற்பத்திகளுக்கான வட இலங்கையின் ஏகமுகவர்
IS Office Automation
No. 360/3, Main Street, Jaffna. TP No.: 222 7676 / 4 590 190


## மரண அறிவித்தல்

### யூஜின் யூகராஜா பிரான்ஸிஸ் (மருந்தாளர்)



கரவெட்டியைச் சேர்ந்த யூஜின் யூகராஜா பிரான்ஸிஸ் அவர்கள் 29.02.2004 இல் காலமானார்.

அன்னார் மேரி திரேசாவின் அன்புக் கணவரும் அன்ரூ சாள்ஸ் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), பற்றிக் (கணனி விரிவுரையாளர்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பிரிசில்டா, எலிசபெத், இந்திராணி, செல்வராசா, யோகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கத்தரின் காலஞ்சென்ற யேசுதாசன், மேரி மாகிரேட், பேனாட் மரியதாசன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் நல்லடக்கத்திற்காக கீரிப்பல்லி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சரஸ்வதி வித்தியாலய வீதி,*
*நாதன் பங்களா,*
*கரவெட்டி வடக்கு, கரவெட்டி.* (29151)(31-12-17)

தகவல்:
யூ. பற்றிக் (மகன்).


மிக விரைவில்....
தகவல் தொழில் நுட்பத்தில் உங்கள் தாகத்தைத் தணிக்க....
யாழ். மண்ணிலிருந்து வெளிவருகின்றது
கணினி மாத இதழ்
கம்ப்யூட்டர் COMPUTER FOCUS ∴ பேர்க்கஸ்
தகவல் ஊடாக நுட்பம் அடைவோம்
(29113) (12-17)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.03.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.